# திருமறைத்தீபம்





BIBLE LAMP
திருமறைத்தீபம்

**Issue No: 4 of 2002**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor**: R. Bala
**Publisher**: Sovereign Grace Publications
**Address**: P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone**: 64 9 272 8061
**Fax**: 64 9 272 8032
**email**: bala@ihug.co.nz
**Web site**: www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத்தடங்கல் என்றுதான் கூறவேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

*தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் கிராமங்களுக்குக் குறைவில்லை. அதேபோல் மலேசியாவில் தோட்டங்களிலும், கம்பங்களிலும் வாழும் தமிழர்களுக்குக் குறைவில்லை. தமிழ் நாட்டில் மட்டும் 64,000 கிராமங்களுக்குக் குறைவில்லாமல் இருக்கின்றன. இந்தியா முழுவதும் இருக்கும் கிராமங்களின் எண்ணிக்கை பற்றி சொல்லத் தேவையில்லை. இந்தக் கிராமப்புற மக்களில் அநேகர் இன்றும் இயேசு கிறிஸ்துவை அறியாதிருக்கிறார்கள். இக்கிராமங்களுக்கு சுவிசேஷம் செல்லவேண்டியது மட்டுமல்ல, அங்கெல்லாம் வேதபூர்வமான கிறிஸ்தவ சபைகள் உருவாக வேண்டியதும் அவசியம். இவ்விதழின் அட்டைப்படம் தமிழகத்தின் ஒரு கிராமத்தையும், இந்தக் கிராமத்திற்கு அருகில் உள்ள இன்னுமொரு கிராமத்தில் கூடிவரும் ஒரு சபையையும் காட்டுகிறது. நாம் திருமறைத்தீபத்தை ஏழு வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்தபோது இறையியல் போதனையை போதகர்களுக்கு வழங்கி உதவுவது மட்டுமே எமது நோக்கமாக இருந்தது. ஆனால், இன்று பட்டிதொட்டியெல்லாம் தீபத்தை வாசிக்கும் நண்பர்கள் இருக்கிறார்கள். அட்டைப்படத்தில் இருக்கும் கிராமத்து விசுவாசிகளுக்கும் அது சீர்திருத்த இறையியல் போதனைகளை அளித்து வருகிறது. லூதரைப்பற்றியும், கல்வினைப்பற்றியும், ஜோன் ஓவனைப்பற்றியும், ஸ்பர்ஜனைப்பற்றியும், கேரியைப்பற்றியும் இன்று கிராமத்து மக்களும் வாசித்து அறிந்து வரலாற்றுக் கிறிஸ்தவத்தின் மேன்மையை உணர்கிறார்கள். கிராமத்து மக்களுக்கும் இறையியல் புரியும் என்பதை திருமறைத்தீபம் நமக்குப் புரிய வைத்திருக்கிறது. இதுவரை நான் ஏன் சீர்திருத்தவாதிகளைப்பற்றி கேள்விப்படாமலிருந்தேன்? என்று ஒரு விசுவாசி ஒரு முறை வருத்தத்துடன் எழுதிக் கேட்டிருந்தார்.*

*சுவிசேஷ ஊழியம் எப்படி இருக்க வேண்டுமென்றும், கர்த்தருடைய ஊழியக்காரரைக் குறைகூறலாமா? என்றும், உதவிக்காரர்களின் பணி பற்றியும் இவ்விதழில் எழுதியிருக்கிறோம். இவையெல்லாவற்றையும் வேதபூர்வமாக அணுகி ஆராய முயற்சி செய்திருக்கிறோம். வளரும் சீர்திருத்த சபைகள் இவற்றைக்குறித்து சிந்திக்காமல் இருக்க முடியாது. கர்த்தர் இந்த ஆக்கங்களையும் இந்த இதழில் வரும் ஏனைய ஆக்கங்களையும் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கச் செய்வாராக. ஜெபித்தும், கடிதங்கள் எழுதியும், இமெயிலில் தொடர்பு கொண்டும் தொடர்ந்து எம்மை இந்தப்பணியில் ஊக்குவிக்கும் வாசகர்களுக்கு எமது அன்பு கலந்த நன்றிகள்! - ஆசிரியர்*

# சுவிசேஷ ஊழியம்

தீமோத்தேயுவைப் பார்த்து பவுல், நீ சுவிசேஷகனாகவும் இருக்க வேண்டும் என்று சொன்னார் (2 தீமோத்தேயு ). சுவிசேஷ ஊழியத்தில் அப்போஸ்தலர்கள் பெரும் அக்கறை காட்டினார்கள். இயேசு கிறிஸ்து சுவிசேஷத்தை அறிவித்த மனித குமாரனாக வந்தார். அவர் திருச்சபைக்குக் கொடுத்த பெருங்கட்டளை, சுவிசேஷத்தை சகல மக்களுக்கும் எந்தவித வேறுபாடு காட்டாமலும் அறிவிக்க வேண்டும் என்பதே (மத்தேயு 28:18-20).. இதெல்லாம் சுவிசேஷ ஊழியத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் சில உதாரணங்கள். சுவிசேஷ ஊழியத்தின் அவசியத்தை நம்பாதவர்களும், அதில் அக்கறை காட்டாதவர்களும் இருக்க முடியாது. இந்த ஆக்கம் சுவிசேஷ ஊழியத்தின் அவசியத்தை வலியுறுத்தும் ஒரு ஆக்கமல்ல; அவ்வூழியம் எப்படி அமைய வேண்டும் என்பதை விளக்கும் ஆக்கம். இன்று தமிழ் மக்கள் மத்தியில் நடந்து வரும் சுவிசேஷ ஊழியத்தைப் பார்த்து புறஜாதியார் கிறிஸ்தவத்தை மதிக்காமல் இருப்பதில் வியப்பில்லை. சமீபத்தில் ஒரு இந்து நண்பர் என்னிடம் தன்னுடைய குடும்பத்தாரைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டார். சுவிசேஷ ஊழியம் என்று சொல்லி தன் குடும்பத்தை சிலர் ஏமாற்றிக் கொண்டிருப்பதாக வருத்தப்பட்டார். தனக்கு உடல்நலம் சரியில்லாதபோது சுவிசேஷக் கூட்டத்திற்கு வந்தால் உடனே சுகமாகிவிடும் என்று பலர் வற்புறுத்தியும் தான் போகவில்லை என்று கூறிய அவர், இந்தக்கூட்டங்களுக்கு வரவேண்டும் என்று வற்புறுத்துகிற ஒருவராவது உடல் நலமில்லாமலிருக்கும் தனக்கு சரீரப்பிரகாரமாக ஒரு உதவியும் செய்வதில்லை என்றார். கூட்டத்திற்கு வருமாறு போன்செய்து வற்புறுத்துகிறவர்கள், உங்களுக்கு இன்றைக்கு எப்படி இருக்கிறது? ஏதாவது உதவி தேவையா? என்று ஒரு வார்த்தை கூட கேட்ப-தில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

இவர் சொன்னதைப்பற்றி நான் சிந்தித்துப் பார்த்தேன். அதில் உண்மை இருப்பதை எப்படி மறுக்கமுடியும்? சுவிசேஷத்தை வியாபாரப் பொருளாக மாற்றி, எதைச் செய்தாவது அதை மற்றவர்கள்மேல் திணிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறவர்களுக்கு கிறிஸ்துவை அறியாதவர்கள் பட்டுக்-கொண்டிருக்கும் துன்பங்களும், துயரங்களும் தெரிவதில்லை. சாதாரண மனிதர்களாக இருந்து அத்துன்பங்களில் எப்படிப் பங்கு கொள்வது, அவர்களுக்கு எப்படி சமாதானம் சொல்வது என்பது தெரியவில்லை. எடுத்ததற்கெல்லாம் இயேசு குணமாக்குவார், இயேசு பணவசதி செய்து கொடுப்பார், இயேசு வேலை வாங்கிக் கொடுப்பார் என்று சொல்லி மாயாஜாலம் செய்து கொண்டிருக்கும் மனிதர்கள் சுவிசேஷ ஊழியம் என்ற பெயரில் செய்து வரும் போலித்தனத்தை இன்று கிறிஸ்துவை அறியாதவர்களும் பார்த்துக் கேலி செய்யும் நிலை ஏற்பட்டிருக்கிறது. "இயேசு அற்புதத்தின் தேவன்; ஒவ்வொரு நாளும் அவர் நம் வாழ்க்கையில் அற்புதம் செய்கிறார்" என்று சொல்லிச் சொல்லி, ஊழியம் செய்கிறோம் என்ற பெயரில் பாமர மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் மனிதர்கள் தமிழர்கள் மத்தியில் ஏராளம். கூட்டத்துக்கு வருகின்ற ஏழை, எளியவர்கள் நிலை எப்போதும் அப்படியே இருக்க கையில் செல் போனும், ஹையுன்டா காருமாக அலைகிறார்கள் இன்றைய தமிழக சுவிசேஷ ஊழியர்கள். தட்டிக் கேட்க யாருமில்லாததால்

இன்று இவர்கள் பாடு பெருங் கொண்டாட்டமாக இருக்கின்றது.

இந்தியாவில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சுவிசேஷ ஊழியம் செய்ய ஆரம்பத்தில் வந்த சில கத்தோலிக்க மிஷனரிகள் சூழிசைவுக் கோட்பாட்டைத் (Contexualization) தழுவி சாதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தும், இந்து மதக் கலாச்சாரங்களுக்கு இடம் கொடுத்தும் ஊழியம் செய்தார்கள். ரோமன் கத்தோலிக்க மதப்பிரிவான ஜெசுயிட் பிரிவைச் (Jesuits) சேர்ந்த டீ நொபிளி (De Nobile, 1606-1741) இந்தவிதமாக மதுரையில் இருந்து ஊழியம் செய்து மதமாற்றத்தில் ஈடுபட்டார். பிராமணர்களைக் குடுமி வைக்கவும், பூணூல் வைத்துக் கொள்ளவும், விபூதி பூசவும் அனுமதித்து சாதிவேற்றுமையை தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ந்தும் இருக்குமாறு பார்த்துக் கொண்டார். ஒரு சன்னியாசி போல் உடை தரித்தும், ஜெபத்திற்குப் பதிலாக மந்திரங்கள் சொல்லியும் இந்துக்களுக்கு ஒத்துப் போகும்விதத்தில் ஊழியம் செய்து பலர் கத்தோலிக்க மதத்தில் சேர வழி ஏற்படுத்தினார். இத்தாலியைச் சேர்ந்தவரும், உயர் குலத்தில் பிறந்தவருமான டீ நொபிளி தனது குலம் சத்திரியர் குலம் என்று கூறி தன்னை குரு என்றும், அய்யர் என்றும் அழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மதம் மாற்றுவதற்காக எந்தளவுக்கு இந்துக்களுடைய வழிமுறைகளைப் பின்பற்ற முடியுமோ அந்தளவுக்கு எல்லாவற்றையும் பின்பற்றினார் இந்த மனிதர். 'ஐந்தாம் வேதம்' என்று அழைக்கப்பட்ட இந்துமத தத்துவங்களுக்கு கிறிஸ்தவ விளக்கம் கொடுத்த ஒரு நூலையும் இவர் எழுதி வெளியிட்டார். இவருடைய முறை பிராமணர்கள் கத்தோலிக்க மதத்தைத் தழுவுவதை சுலபமாக்கியது. டீ நொபிளி 'ரோம பிராமணன்' என்றும் அழைக்கப்பட்டார். இந்த மனிதர் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர். கிறிஸ்தவ விசுவாசி அல்ல என்பதை நாம் உணர வேண்டும். இவருடைய காலத்துக்குப் பின்வந்த சில கிறிஸ்தவ மிஷனரிகளும் இத்தவறான முறைக்குப் பலியாகி சுவிசேஷ ஊழியத்தைக் கறைபடுத்தியுள்ளார்கள். கத்தோலிக்கர்களாக மாறும் இந்துக்கள் சாதியை விட்டுவிடத்தேவையில்லை என்று டீ நொபிளியின் போதனையை அவருக்குப் பின் வந்து ஊழியம் செய்த மெய்க் கிறிஸ்தவ சீர்திருத்த விசுவாசியான வில்லியம் கேரி அடியோடு எதிர்த்தார் என்பது நமக்கு மகிழ்ச்சி தருகிறது. சாதி பார்த்து கூட்டம் சேர்க்கும் இந்தப் பாவகரமான செயலை அனுமதித்து நம்மக்கள் மத்தியில் சுவிசேஷ ஊழியம் செய்து கொண்டிருப்பவர்கள் இன்று அநேகம். தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த பல சபைகள் தமிழ் நாட்டில் குறிப்பிட்ட சில சாதியைச் சேர்ந்தவர்களுக்கென்று தனிச்சபைகள் நடத்துவது நாமறியாததல்ல.

இதே வகையில்தான் இந்து மதத்துக்கு கிறிஸ்தவ விளக்கம் கொடுத்து சிலர் இன்று சுவிசேஷ ஊழியம் செய்து வருகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் பிராமண விரோதிகளாகவும், திராவிட ஆதரவாளர்களாகவும் இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து மேலைத்தேசத்தைச் சேர்ந்தவரல்ல, கிழக்கில் பிறந்தவர் என்று நாம் நம்பும்படிச் செய்வதற்காகவும், அவருடைய போதனைகளே இந்திய தத்துவஞானத்திற்கு வழிகாட்டி என்று காட்டவும் இவர்கள் படும்பாடு சிரிப்பைத்தான் வரவழைக்கிறது. இவர்களுடைய போதனைகளை வாசித்து அறியாமையால் பலர் இவற்றிற்கு பலிக்கடாக்களாக மாறியிருக்கிறார்கள். இதெல்லாம் வேதம் அறியாத, லௌகீக செயல்கள்; கர்த்தருடைய பெயரை மாசுபடுத்தும் செயல்கள்.

நாமெல்லோரும் அறிந்த, பரவலாக எங்கும் காணப்படும் இன்னுமொரு

ஒரு சித்துவேலைதான் சுவிசேஷக் கூட்டத்தில் அர்ப்பண அழைப்புக் கொடுப்பது. இதைப்பயன்படுத்தி ஒருவரைக் கிறிஸ்தவராக அறிவிக்கும் செயல் வாசகர்கள் அறியாததல்ல. இதையெல்லாம் நாம் எழுத வேண்டிய காரணம் சுவிசேஷ ஊழியம் என்ற பெயரில் இன்று நடந்து வரும் அவலத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான். சுவிசேஷ ஊழியம் என்ற பெயரில் நடக்கும் இத்தனை சித்துவேலைகளுக்கு மத்தியில்தான் மெய்யான சுவிசேஷ ஊழியம் எப்படி இருக்க வேண்டும் என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்று ஊழியம் செய்ய ஆசைப்படுகிறவர்களெல்லாம் தாம் நினைத்தபடி ஒன்றை ஆரம்பித்துவிடுவது வழக்கமாக இருக்கின்றது. அரசாங்க அனுமதி இல்லாமல் வீதியோரம் பெட்டிக் கடைபோட்டு வியாபாரம் செய்கிறவர்களுக்கும் இவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. இப்படி ஊழியம் செய்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே அதிகாரிகளாக இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய பெயரைப் பயன்படுத்தி இயேசுவைப் பிரசங்கிக்கப் புறப்பட்டிருந்தாலும், கர்த்தருடைய வேதத்திற்கு எந்த மதிப்பும் கொடுப்பதில்லை. அந்த வேதம், சுவிசேஷ ஊழியம் செய்வதெப்படி? என்று விளக்கும் போதனைகளையெல்லாம் இவர்கள் சட்டை செய்வதில்லை. சுவிசேஷத்தை சொன்னால் போதும், அதை எப்படிச் சொல்ல வேண்டும், அந்த ஊழியத்தை எவ்வாறு செய்ய வேண்டும் என்றெல்லாம் கவலைப்படக்கூடாது என்பது இவர்களுடைய நினைப்பு. பலர், வேதம் இதுபற்றியெல்லாம் விளக்கமளித்து நேரத்தை வீணடிக்கவில்லை, பொதுவான போதனைகளை மட்டுமே கொடுப்பதோடு நின்று விடுகிறது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய எண்ணங்கள் பரவலாகக் காணப்படும் ஒரு ஆத்மீக சூழ்நிலையில் சுவிசேஷ ஊழியத்தைப் பற்றி வேதம் தரும் போதனைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுபற்றி இனி விபரமாகப் பார்ப்போம்.

## இயேசு கிறிஸ்துவை பாவிகளுக்கு அறிமுகப்படுத்துவது மட்டுமே சுவிசேஷ செய்தியின் இலக்காக இருக்க வேண்டும்

சுவிசேஷ செய்தியின் மூலம் இயேசு கிறிஸ்துவை, கர்த்தரை அறியாத மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று வேதம் போதிக்கின்றது. இதுவே ஒரு கிறிஸ்தவன் அல்லது ஒரு பிரசங்கியின் முக்கிய பணி. இதை இலக்காகக் கொள்ளாத எந்த ஊழியமும் சுவிசேஷ ஊழியமாக இருக்க முடியாது. யோவான் ஸ்நானனும், சரி, இயேசு கிறிஸ்துவும் சரி இதையே தங்கள் இலட்சியமாகக் கொண்டிருந்தனர் (யோவான் 3:35, 36; 3:16). இயேசு கிறிஸ்துவை பாவிகளுக்கு அறிமுகப்படுத்துவே சுவிசேஷ ஊழியப்பணி என்பதை ரோமர் 10:9-15 வரையுள்ள வசனங்களில் பவுல் அப்போஸ்தலன் மிகத்தெளிவாக விளக்குகின்றார். கிறிஸ்துவை விசுவாசிப்பதே ஒவ்வொரு மனிதனுடைய இலட்சியமாக இருக்க வேண்டும் என்பதையும், அவரை விசுவாசிப்பவர்கள் மட்டுமே இரட்சிப்பை அடைவார்கள் என்பதையும் இப்பகுதி சந்தேகமில்லாமல் அறியத்தருகிறது. அத்தோடு நிறுத்திவிடாமல் பவுல் அப்போஸ்தலன், ஒரு பிரசங்கியின் அதிமுக்கிய பணி கிறிஸ்துவை மற்றவர்கள் அறியச் செய்வதே என்று இப்பகுதியில் வலியுறுத்தியிருப்பதைக் கவனியுங்கள். கிறிஸ்துவும், பவுலும், ஏனைய அப்போஸ்தலர்களும், திருச்சபையும் இதையே எப்போதும் தங்களுடைய அதிமுக்கிய திருப்பணியாக செய்து வந்திருக்கிறார்கள்.

இன்று சுவிசேஷப் பணி செய்கிறோம் என்று சொல்கிற அநேகர் கிறிஸ்துவை

பிரசங்கிப்பதை விட்டுவிட்டு தங்களைப் பெருமைப்படுத்திக் கொள்வதிலும், சொந்த லாபத்தைத் தேடிக் கொள்வதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். யோவான் ஸ்நானன் தன் ஊழியத்தின் மூலம் அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்று சொல்லியிருப்பதைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள் (யோவான் 3:30). பல சுவிசேஷ ஊழியர்கள் கிறிஸ்துவின் மரணபலியையும், இரட்சிப்புக்குரிய வழிகளையும் பற்றிச் சொல்வதைவிட்டுவிட்டு, கிறிஸ்து சுகமளிக்கிறார் என்று சொல்லி சுகமளிக்கும் கூட்டங்கள் நடத்தி வருகிறார்கள். இவர்களுடைய செய்திகளில் இரட்சிப்புக்குரிய வழிமுறைகளுக்கு இடமிருக்காது. சுகமளிப்பதற்காகவே கிறிஸ்து இந்த உலகத்துக்கு வந்திருக்கிறார் என்று சொல்லி அதற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். இயேசுவும் இதையே செய்தார் என்று கூறி வேதத்தை திரித்துப் போதித்து அநேக ஆத்துமாக்களை இவர்கள் ஏமாற்றிப் பகற்கொள்ளை நடத்தி வருகிறார்கள். ஆனால், கிறிஸ்துவின் வேதம், சுவிசேஷ ஊழியத்தில் இதற்கெல்லாம் இடமில்லை என்பதை ஆணித்தரமாக விளக்குகின்றது. வேதத்தில் ஓரிடத்திலாவது, கிறிஸ்து பிணி தீர்ப்பதை மையமாக வைத்து சுவிசேஷம் சொன்னதாக நாம் வாசிக்கவில்லை. அப்போஸ்தலர்களும் கூட அப்படி ஒருபோதும் செய்யவில்லை. இயேசு அநேகருடைய குறைகளைத் தீர்த்ததற்குக் காரணம் அவர் ஆண்டவர், தேவனுடைய ஒரே குமாரன். அவரோடு நாம் நம்மை நிகராக்கிக் கொள்ள முடியாது. பெனிஹின், தினகரன் போன்றோர் இயேசுவுக்குள்ள சகல அதிகாரமும் தங்களுக்கும் இருப்பதாக வேதவிரோத போதனை செய்து வருகிறார்கள். ஜொய்ஸ் மாயர் என்ற பெண் பிரசங்கி? இயேசு செய்த எல்லாக் காரியங்களையும் ஒட்டு மொத்தமாக நாமும் செய்ய முடியும் என்று அடித்துப் பேசி வருகிறார். இவர்களில் ஒருவராவது ஏன் இன்னும் தண்ணீரில் நடந்து காட்டவில்லை என்பது புரியவில்லை! உலகங்களையும், சகல அதிகாரங்களையும் கர்த்தர், தன்னுடைய ஒரே குமாரனான இயேசுவுக்கு மட்டுமே கொடுத்து அவரை அனைத்தையும் ஆளும் ஆண்டவராக நியமித்திருப்பதாக எபேசியர் 2:20-23 வரையுள்ள வசனங்களில் பவுல் அப்போஸ்தலன் எழுதியிருக்கிறார். இத்தகைய அதிகாரத்தை தேவனுடைய ஊழியர்களோ, அவருடைய மக்களோ அனுபவிப்பதில்லை என்பதை இந்த மனிதர்கள் அறியவில்லை. ஊழியக்காரர் என்று தம்மை அறிவித்துக் கொள்ளும் பலர் இன்று இயேசுவுக்கு சமமாக தம்மை ஒப்பிட்டுப் பேசிவருகிறார்கள். இவர்கள் தங்களுக்குள் தெய்வீகத்தன்மை இருப்பதாகவும் கூறிவருகிறார்கள். மெய்யான சுவிசேஷத்தைச் சொல்வதை இவர்கள் இலட்சியமாகக் கொண்டிருக்கவில்லை.

இயேசு கிறிஸ்து மட்டுமே இரட்சகர் என்றும், அவரை விசுவாசிக்காதவர்கள் இரட்சிப்பை அடைய முடியாது என்றும் விளக்கி, அந்த இரட்சிப்புக்கான வழிமுறைகளைத் தெளிவாகப் போதிக்காத எந்த ஊழியக்காரனும் சுவிசேஷ ஊழியக்காரனாக இருக்க முடியாது. கசக்கும் ஒரு மருந்துக்கு இனிப்பைச் சுற்றிக் கொடுப்பதுபோல், சுவிசேஷத்தை அறிவிக்க சுகமளிப்பு கூட்டம் நடத்தியும், தாலக்கச்சேரி வைத்தும் சுவிசேஷத்தை வியாபாரப் பொருளாக்கு-வோர் மெய்யான ஊழியக்காரர்கள் இல்லை. சுவிசேஷம் அறிவிக்கப்படும்-போது அதை அறிவிக்கும் மனிதனின் பெருமை தெரியக்கூடாது, அவனுடைய மேன்மைகளுக்கு கூட்டத்தில் இடமிருக்கக்கூடாது. இயேசு மட்டுமே பிரசங்கத்தால் வெளிப்படுத்தப்பட்டு மகிமைப்படுத்தப்பட வேண்டும். அவரை வெளிப்படுத்தும் வெறும் சாதாரண கருவிகளே பேச்சும், அதைப் பேசும்

மனிதனும். யோவான் ஸ்நானனைப் போல தன்னை சிறுகச் செய்து இயேசுவை பெறுகச் செய்யாத மனிதர்கள் உண்மையான சுவிசேஷ ஊழியக்காரரில்லை.

## சுவிசேஷ செய்தி எப்போதும் கிறிஸ்துவின் மரணத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பாவ நிவாரண வழிமுறைகளை விளக்குவதாக இருக்க வேண்டும்

வேதத்தில் நாம் வாசிக்கும் அப்போஸ்தலருடைய சுவிசேஷச் செய்திகளைப் போலவும், சீர்திருத்தவாதிகளும், பரிசுத்தவான்களும் வாழ்ந்த காலங்களில் ஆத்துமாக்கள் அனுபவித்த பிரசங்கங்களைப் போலவும், ஏன் இன்றும் உலகின் பல பாகங்களிலும் இருக்கும் பல நல்ல சீர்திருத்த சபைகளில் கொடுக்கப்பட்டு வரும் சுவிசேஷப் பிரசங்கங்களைப் போலவும் தமிழ்கூறும் நல்லுலகில் நடந்து வரும் சுவிசேஷக்கூட்டங்களிலும், சபைகளிலும் கேட்க முடியாதிருக்கின்றது. இதற்குக் காரணம் நம்மத்தியில் நாம் கேட்கக்கூடியதாயிருக்கின்ற சுவிசேஷச் செய்திகளில் தெளிவான எந்தப் போதனைகளும் இல்லாமலிருப்பதுதான். நற்செய்தி என்று அதற்குப் பெயர் இருந்தாலும் அந்தச் செய்தியில் சொந்த அனுபவத்தையும், பொய்யான வாக்குறுதிகளையும்தான் கேட்க முடிகின்றதே தவிர மெய்யான சுவிசேஷத்திற்கு துளியும் இடமில்லை. மெய்யான சுவிசேஷ செய்தியில் கிறிஸ்துபற்றிய தெளிவான விளக்கமிருக்கும். அவருடைய கல்வாரி மரணத்திற்கான காரணம் வேதபூர்வமாக எடுத்துக் கூறப்படும். கர்த்தரை அறியாதவர்கள் மேல் இருக்கும் தேவ கோபத்திற்கான காரணமும் விளக்கப்படும். அத்தேவகோபம் நீங்க கர்த்தரே ஏற்படுத்தியிருக்கும் வழிமுறைகள் விளக்கப்படும். ஆத்துமாக்கள் தங்களுடைய பாவப்பரிகாரத்திற்காக என்ன செய்ய வேண்டும் என்ற தெளிவான விளக்கத்தையும் அதில் பார்க்கலாம். அச்செய்தியில் வியாபாரத்தோனி இருக்காது. விளையாட்டுக்கு இடமிருக்காது. ஆத்துமாக்களுடைய உணர்ச்சிகளை மட்டும் தொடக்கூடிய இனிப்பான வார்த்தைகள் இருக்காது. ஆனால், ஆத்துமாக்களுடைய இருதயத்தைப் பிளந்து, அவர்கள் பாவிகள் என்று உணர்த்தி, அப்பாவத்திற்காக அவர்கள் இயேசுவை நாடி ஓட வேண்டும் என்ற ஆணித்தரமான செய்தி பரிசுத்த ஆவியின் வல்லமையால் கொடுக்கப்படும்.

இன்றைய சுவிசேஷப் பிரசங்கங்களில் பரிசுத்த ஆவியின் வல்லமையைக் காண முடியாமலிருப்பதற்குக் காரணம் அவற்றில் தெளிவான வேத போதனை இல்லாததுதான். இன்றைய போதகர்கள் அப்போஸ்தலர்களுடையதும், சீர்திருத்தவாத காலத்தில் கொடுக்கப்பட்டதுமான வேதபூர்வமான நல்ல சுவிசேஷப் பிரசங்களை மீண்டும் மீண்டும் வாசித்து அவற்றில் காணப்படும் முக்கிய அம்சங்களை கவனத்தில் எடுப்பது மிகவும் அவசியம். ஆத்துமாக்களின் இருதயத்திற்கு தேவையான நற்செய்தியைக் கேவலப்படுத்தும் பிரசங்கியைக் கர்த்தர் ஒருபோதும் மன்னிக்க மாட்டார். சுவிசேஷப் பிரசங்கம் எப்படி இருக்க வேண்டும் என்று அறிந்து கொள்ள விரும்புபவர்கள் அல்பர்ட் என். மார்டின் எழுதி நாம் தமிழில் வெளியிட்டிருக்கும், கிறிஸ்தவன் யார்? என்ற சிறுநூலை வாங்கி வாசிக்கலாம். தெளிவான வேதபோதனையைத் தன்னில் கொண்டிராமல் நற்செய்தி என்ற பெயரில் கொடுக்கப்படும் எந்த செய்தியும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற முடியாது. ஆவியானவர் அத்தகைய செய்திகளை ஆசீர்வதிக்க மாட்டார். 1 தெசலோனிக்கேயரில் பவுல் சொல்லியிருப்பதைப் பாருங்கள், "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது; . . ." என்று சொல்கிறார் பவுல். இதற்குப் பொருள் என்னவென்றால், பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய

சகல வேதபோதனையையும் கொண்டிருந்தது, அது மட்டுமல்லாமல் வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் அது கொடுக்கப்பட்டது என்பதுதான். தான் கொடுத்த சுவிசேஷப் பிரசங்கத்தில் தெளிவான, மெய்யான வேதபோதனை இருக்கிறது என்ற நம்பிக்கை இருந்ததால்தான் பவுலால் வல்லமையோடும், கர்த்தர் அதை ஆசீர்வதிப்பார் என்ற முழு நிச்சயத்தோடும் பிரசங்கிக்க முடிந்தது. அப்படி முறையான ஒரு செய்தியை தேவபயத்தோடு தயாரித்துப் பிரசங்கித்தால்தான் ஆவியானவர் அதை தெசலோனிக்கேயர் மத்தியில் ஆசீர்வதித்தார். பலர் போலித் தெய்வங்களைத் தூக்கி எறிந்துவிட்டு மெய்யான கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். அதனால்தான் பவுலால், "எங்கள் சுவிசேஷம் பரிசுத்த ஆவியுடன் வந்தது" என்று சொல்ல முடிந்தது. நல்ல, சத்தான சுவிசேஷ செய்திகளை பரிசுத்த ஆவியானவர் நிச்சயம் ஆசீர்வதிப்பார் என்று நம்பலாம். அதேவேளை கிறிஸ்துவின் பெயரில் கொடுக்கப்படும் போலி வியாபாரச் செய்திகள் அவருடைய ஆசீர்வாதத்தை ஒருபோதும் அடையாது. எத்தனை ஜெபத்தோடு கொடுக்கப்பட்டாலும் அவற்றில் ஆவியின் வல்லமைக்கு இடமிருக்காது.

### சுவிசேஷத்தை அறிவிப்பது ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய கடமையாகும்

சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியை கர்த்தர் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கொடுத்திருக்கிறார். அதாவது, ஒரு கிறிஸ்தவன் சபை அதிகாரியாக, மூப்பராக, போதகராக, உதவியாளனாக இல்லாமலிருக்கலாம், ஆனால், கர்த்தரை அறியாத ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை சொல்லாதவனாக இருக்க முடியாது. சுவிசேஷம் சொல்லும்பணி எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எவருடைய அனுமதியும் இல்லாமல் நாம் எல்லோருக்கும் இயேசு கிறிஸ்துவைப்பற்றி தைரியத்தோடும் பெலத்தோடும் (சபை அங்கத்தவர்களாக இருந்து) சொல்ல வேண்டும். கிணற்றடியில் துணி துவைத்துக் கொண்டிருக்கும்போது கிறிஸ்தவ பெண்கள் பக்கத்திலிருக்கும் பெண்களுக்கும், ஆபீசில் வேலை செய்பவர்கள் அங்கிருப்பவர்களுக்கும், பள்ளித்தளங்களிலும், கல்லூரிகளிலும் எல்லா இடங்களிலும் நாம், அத்தேனியக் கிறிஸ்தவர்களைப் போல இயேசுவைப் பற்றிச் சொல்லி அவரை மகிமைப்படுத்த வேண்டும். அவர்களைத் தாங்கள் ஆராதிக்கும் சபைக்கும், கூட்டங்களுக்கும் வரும்படி அழைக்க வேண்டும். அவர்களோடு நடப்பை ஏற்படுத்தி தங்களுடைய வீடுகளுக்கு அவர்களை அழைத்து கிறிஸ்துவைப் பற்றி சொல்ல வேண்டும். கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லும் நல்ல கையேடுகளைக் கையில் வைத்திருந்து ஆத்துமாக்களுக்கு அவற்றைக் கொடுத்து வாசிக்கச் சொல்ல வேண்டும். இதைச் செய்வதற்கு ஒரு கிறிஸ்தவன் இறையியல் வல்லுனனாக இருக்க வேண்டியதில்லை. இறையியல் கல்லூரிக்குப் போயிருக்கத் தேவையில்லை. சுவிசேஷத்தை இந்தவகையில் கர்த்தரை அறியாதவர்களுக்கு எடுத்துச் சொல்லாத கிறிஸ்தவர்கள் வெட்கப்பட வேண்டியவர்கள். கிரிக்கெட் ஆட்டத்தைப் பற்றியும், டி. வி புரோகிரேம்களைப் பற்றியும் பேசுவதில் எடுக்கும் ஆர்வம் சுவிசேஷத்தைச் சொல்வதில் இல்லாமலிருப்பது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அறிகுறியல்ல.

### சுவிசேஷ ஊழியப்பணி கிறிஸ்துவின் சபைக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது

சுவிசேஷ ஊழியங்களைப் பற்றிப் பேசும் மிக முக்கியமான ஒரு வேதப்பகுதி மத்தேயு 28:18-20. இப்பகுதியில் இயேசு தனது சீடர்களுக்கு இறுதிக் கட்டளையாக அவர்கள் செய்ய வேண்டிய ஊழியத்தைக் குறித்து விளக்குகிறார். இயேசுவின் சீடர்களுக்கு (அப்போஸ்தலர்களுக்கு) கொடுக்கப்-

பட்ட இப்பணி அவர்களுக்குப் பின் திருச்சபை செய்ய வேண்டிய பணியாக மாறியது. நாம் ஏற்கனவே பார்த்ததுபோல் பொதுவாக எல்லாக் கிறிஸ்தவர்களுமே கிறிஸ்துவைப் பற்றி அவரை அறியாதவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கடமைப் பொறுப்பைக் கொண்டிருந்தாலும், சபைகளை ஆரம்பிப்பது, திருமுழுக்கு கொடுப்பது, திருவிருந்து வைப்பது மற்றும் சீடத்துவம், பிரசங்கம், போதனை ஆகிய அனைத்தையும் கொண்டு நடத்த கிறிஸ்து தன்சபையை மட்டுமே நிறுவியிருக்கிறார். திருச்சபை செய்ய வேண்டிய ஊழியங்களை, திருச்சபையால் அனுப்பப்படாமல் தனிமனிதர்கள் செய்யப்பார்ப்பது தவறு. ஆகவே, இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள போதனை இன்று திருச்சபை பின்பற்ற வேண்டிய கடமைகளை விளக்குகிறது.

வேதம் பொதுவாகவே எல்லாக் கிறிஸ்தவர்களும் திருச்சபைக்கு மதிப்புக் கொடுத்து அதில் அங்கத்தவர்களாக இருந்து கிறிஸ்துவின் கட்டளைகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. திருச்சபை இல்லாமல் ஒரு ஆத்துமா கிறிஸ்தவ வாழ்க்கையை வெற்றிகரமாக வாழ்ந்து தன் குடும்பத்தைக் கர்த்தரின் வழியில் நடத்த முடியும் என்று கனவு காணமுடியாது. திருச்சபையை உதாசீனப்படுத்துவது கர்த்தரையே உதாசீனப்படுத்துவதற்கு சமமாகும். ஆத்துமாக்களுக்குத் தேவையான சகல ஆத்மீக உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்காகவே கிறிஸ்து தன் சபையை நிறுவி இருக்கிறார். இதனால் நாம் உலகத்தில் காணப்படும் அத்தனை சபைகளும் நல்ல சபைகள் என்று சொல்லவரவில்லை. சபைகளுக்கு மத்தியில் நல்லதும் கெட்டதும் எப்போதும் இருக்கும். ஆத்துமாக்கள் சபைகளை ஆராய்ந்து பார்த்து தங்களுடைய ஆத்மீக வாழ்க்கைக்கு நல்லுணவளிக்கக்கூடிய சபைகளில் இணைந்து வாழ வேண்டும். அந்த சபைகளில் இருந்தே எல்லா ஆத்துமாக்களும் சுவிசேஷப் பணியில் ஈடுபட வேண்டும். சபையையே கண்ணால் பார்க்காத ஒரு ஆத்துமா எந்த சுவிசேஷத்தை கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு சொல்ல முடியும்? கிறிஸ்து நேசிக்கும் சபையில் வாழ்ந்து வளராதவர்கள் சுவிசேஷத்தை வல்லமையோடு சொல்ல முடியாது.

மத்தேயு 28:18-20, (இது கிறிஸ்து தன் சபைக்குக் கொடுத்த கட்டளை) சுவிசேஷ ஊழியத்தை திருச்சபை கொண்டு நடத்த வேண்டும் என்று போதிக்கின்றது. அதாவது சபைத்தலைவர்களின் தலைமையில் (போதகர்களும், உதவிக்காரர்களும்) எல்லா சுவிசேஷ ஊழியங்களும், சபை நிறுவும் காரியங்களும் கொண்டு நடத்தப்பட வேண்டும். இத்தகைய பொறுப்புள்ள காரியங்களை ஆத்மீக வாழ்க்கையில் முதிர்ச்சியையும், தகுந்த வரங்களையும் கொண்டு சபையால் அங்கீகரிக்கப்பட்டவர்களே கொண்டு நடத்த வேண்டும். எல்லாக் கிறிஸ்தவர்களும் சுவிசேஷத்தை கர்த்தரை அறியாதவர்களோடு பகிர்ந்து கொண்டாலும், ஓரிடத்தில் ஆத்துமாக்களைக்கூட்டி வேதப்பாடம் நடத்தி சபை அமைக்கும் வேலையில் ஈடுபடுதல், சபையாக சுவிசேஷக் கூட்டங்களை நடத்துதல் போன்ற ஊழியங்களைச் செய்யும்படியாக கிறிஸ்து கட்டளையிடவில்லை. அவற்றைச் செய்யும் தகுதியையும், தகுந்த வரங்களையும் கொண்டிருப்பவர்களை திருச்சபை அங்கீகரித்து அவ்வூழியங்களுக்கு அனுப்ப வேண்டும் என்றே வேதம் போதிக்கின்றது. அந்த வகையிலேயே ஆதி சபையில் ஊழியங்களனைத்தும் நடந்து வந்திருக்கின்றன. இன்று நாம் பார்த்து வருகிற, சுவிசேஷ ஊழியங்கள் என்ற பெயரில் நடக்கும் 'சொந்த ஊழியங்களை' (Independent ministries) வேதத்திற்கு கட்டுப்பட்டு இயங்கிய ஆதிசபை ஒருபோதும் அறிந்திருக்கவில்லை.

## சுவிசேஷ ஊழியத்தின் இறுதியில் ஆத்துமாக்களைக் கிறிஸ்தவர்களாக அறிக்கையிடுவது ஆபத்தான காரியம்

இன்று சுவிசேஷக் கூட்டங்களின் இறுதியில், கூட்டத்தில் கைகளை உயர்த்துபவர்கள், வலிப்பு வந்ததுபோல் உணர்ச்சி வசப்பட்டு நடுங்கி ஆடுபவர்களையெல்லாம் ஆவியின் அனுக்கிரகத்தைப் பெற்றவர்கள் என்றும், அவர்கள் கிறிஸ்தவர்கள் என்றும் அறிவித்து வருகிறார்கள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இருக்கும் பல சுவிசேஷப் பிரசங்கிகள். சுவிசேஷத்தையும் முறையாக சொல்லாமல், வெறும் பிணி தீர்க்கும் முயற்சியில் ஏதோ ஜெபத்தை செய்து-விட்டு பரிசுத்த ஆவி வந்து ஆத்துமாக்கள் கிறிஸ்தவர்களாகி விட்டார்கள் என்று அறிவிக்கும் முறையை வேதத்தில் நாம் எங்கும் வாசிக்க முடியாது. இந்த சுவிசேஷகர்கள் இதற்கும் ஒரு பதில் வைத்திருக்கிறார்கள். “இன்று கர்த்தர் புதிய அற்புதங்களைச் செய்யத் தொடங்கியிருக்கிறார். எக்காலத்திலும் இல்லாத வகையில் ஆவியின் அனுக்கிரகம் கிடைக்கிறது” என்பதுதான் அந்தப் பதில். இப்படிச் சொல்லி அவர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. இந்தப் பதிலுக்கு அவர்கள் வேதத்தில் இருந்து எந்த சான்றும் காட்ட முடியாது. இயேசு நேரடியாக இதை எனக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்பது தான் பெனிஹின்னும், தினகரனும் இன்னும் பலரும் சொல்லும் பதிலாக இருக்கின்-றது. இயேசு நேரடியாக பேசுவதற்கு இவர்களை மட்டும் ஏன் தெரிந்து கொண்டார்? இவர்கள் மட்டும் எப்படி விசேட மனிதர்களானார்கள்? என்றைக்கும் நிலைத்திருக்கும் தன்னுடைய வேதபோதனைகளுக்கெல்லாம் முரணான காரியத்தை செய்ய கர்த்தர் ஏன் இந்த மனிதர்களைத் தேடி அவர்களோடு பேச வேண்டும் என்று சிந்தித்துக் கெள்வி கேட்கும் ஒருவரும் இன்று தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் இல்லாதது துக்ககரமான காரியமே. இதற்கெல்லாம் சரியான வேத ஞானமில்லாததே காரணம்.

சுவிசேஷம் சொல்லும் போது நாம் செய்ய வேண்டியதென்ன? செய்யக் கூடாததென்ன? என்பதை வேதத்தைப் படித்து நாம் தெரிந்து கொள்ளலாம். வேதபூர்வமான சுவிசேஷ செய்தியைக் கொடுத்தபின், அதைக்கேட்கின்ற ஆத்துமாக்கள் கர்த்தரிடம் வர வேண்டும், இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்று மட்டுமே பிரசங்கிகள் சொல்ல வேண்டும். அதற்கு மேல் எதையும் செய்யச் சொல்லும்படி வேதம் போதிக்கவில்லை. ஆதி சபையில் சுவிசேஷம் சொன்னபிறகு ஆத்துமாக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாக வாசிக்கிறோம். ஆனால், ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் தாமே முன்வந்து கிறிஸ்துவை அறிக்கையிட்டதாலேயே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாக ஒவ்வொரு இடத்திலும் வாசிக்கிறோம். ஞானஸ்நானம் கொடுத்தவர்கள் அவர்களைக் கைகளை உயர்த்தி கிறிஸ்துவுக்காக தீர்மானம் எடுக்க வைத்தார்களென்று நாம் வேதத்தில் எங்கும் வாசிக்கவில்லை. ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் தலையில் பிரசங்கிகள் கைகளை வைத்துத் தள்ளி நிலத்தில் விழச் செய்து அவர்கள் மேல் ஆவி வந்துவிட்டதாக அறிவித்ததாகவும் நாம் எங்கும் வாசிப்பதில்லை. சுவிசேஷத்தைக் கேட்டு தங்களுடைய பாவத்தை உணர்ந்து, அதற்காக மன்னிப்புக்கேட்டு கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் ஞானஸ்நானம் வேண்டும் என்று கேட்டபடியாலேயே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாக வேதத்தின் எல்லாப் பகுதிகளும் போதிக்கின்றன. ஆகவே, இன்று நாம் பார்த்துக் கொண்டிருக்கும், கேள்விப்படும், சுவிசேஷக் கூட்டங்களில் நடக்கும் கூத்துக்களுக்கும் பரிசுத்த வேதத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

*சுவிசேஷ கூட்ட இறுதியில் ஆத்துமாக்களைத் தீர்மானம் எடுக்க செய்வதும், கிறிஸ்தவர்கள் என்று அறிவிப்பதும் மிகவும் மோசமான செயல். இச்செயல்களால் இன்று போலிக்கிறிஸ்தவர்களின் தொகை பெருமளவில் அதிகரித்திருக்கிறது. (இதே இதழில் வெளிவந்துள்ள 'பாவ உணர்வு சொட்டும் கண்ணீர்த் துளிகள்' என்ற ஆக்கத்தைப் பார்க்கவும்). கூட்டத்தின் முடிவில் உணர்ச்சிவசப்படுகிறவர்கள் எல்லாம் கிறிஸ்தவர்களாகிவிட முடியாது. இயேசுவை ஆரம்பத்தில் பின்பற்றியதுபோல் தோற்றமளித்த பலர் பின்பு அவரை விட்டு விலகியோடியதை நாம் வேதத்தில் வாசிக்கவில்லையா? ஒருவர் கிறிஸ்துவை அறிந்து கொண்டதாக அறிவித்தாலும் அவருடைய விசுவாசத்தை ஆராய்ந்துபாராமல் ஞானஸ்நானம் கொடுப்பது மிக ஆபத்தானது. சுவிசேஷகனின் பேச்சையும், பாடல்களையும், இசையையும் கேட்டு ஆத்துமாக்கள் உணர்ச்சிவசப்படுவது மிகவும் சகஜம். அதுவும் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் அது மிக அதிகம். சினிமாக் கொட்டகையில் ஒரு மனிதனுக்கு ஏற்படும் உணர்ச்சிப்பிரவாகத்துக்கும், சுவிசேஷக்கூட்டத்தில் ஏற்படும் உணர்ச்சிப்பிரவாகத்துக்கும் உள்ள வித்தியாசம் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். சுவிசேஷக்கூட்டத்தில் சினிமாக்கவர்ச்சியும், அதை நினைவுபடுத்தும் இசையும், பாட்டும் இருந்துவிடக்கூடாது. நம்மக்கள் உணர்ச்சிவசப்பட்டு என்ன செய்கிறோம் என்ற உணர்வில்லாமலேயே சில காரியங்களைச் செய்துவிடுவது வழக்கமாக இருக்கிறது. உணர்வலைகள் கலைந்தபின் அவர்கள் அதுபற்றி சிந்திப்பதுகூட கிடையாது. ஒரு மனிதனின் வாழ்க்கையில் நடக்கும் அதி முக்கிய செயலான கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம் வெறும் உணர்ச்சிகளின் அடிப்படையில் மட்டும் ஒருபோதும் நிகழாது. ஆகவே, சுவிசேஷக் கூட்டங்களில் சுவிசேஷப்பிரசங்கத்தின் முடிவில் ஆத்துமாக்களைக் கிறிஸ்தவர்களாக அறிவிக்கும் தவறான, ஆபத்தான முயற்சி கைவிடப்பட வேண்டும். மெய்யான சுவிசேஷப்பிரசங்கி எத்தனை பேர் தனது பிரசங்கத்தின் மூலம் கர்த்தரை விசுவாசித்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதில் காலம் செலுத்த மாட்டான். அவனது நோக்கமெல்லாம் முறையாக சுவிசேஷத்தை சொல்லிவிட்டு எல்லாப் பெருமையையும் கர்த்தரின் பாதத்தில் இடுவது மட்டுமாகவே இருக்கும். ஆத்துமாக்களைக் கரை சேர்ப்பது தன்னுடைய வேலையல்ல, கர்த்தரின் வேலை என்பதில் அவனுக்கு ஆணித்தரமான நம்பிக்கை இருக்கும்.*

*இதுவரை சுவிசேஷ ஊழியத்தைக்குறிந்து ஆராய்ந்திருக்கிறோம். அதை வாசிக்கும் நண்பர்களே! மெய்யான சுவிசேஷ ஊழியம் நம் மக்கள் மத்தியில் நடக்க உங்களுக்கும் பெரும் பொறுப்பு இருக்கின்றது என்பதை உங்களால் உணர முடிகின்றதா? சபையோடு தொடர்பில்லாததும், தனிமனிதனின் சொந்தலாபங்களுக்காகவும் நடத்தப்படுகின்ற கூட்டங்களில் இனி உங்கள் கால்கள் படக்கூடாது என்று உறுதி எடுப்பீர்களா? மெய்யான திருச்சபைகளை நாடி அச்சபைகளில் உங்களை இணைத்துக்கொண்டு சுவிசேஷ ஊழியம் வேதபூர்வமாக நடந்துவர ஒத்துழைப்பு கொடுப்பீர்களா? சுவிசேஷத்தை வேதபூர்வமாக பிரசங்கிப்பதோடு நிறுத்திக்கொள்வேன், ஆத்துமாக்களைக் கரை சேர்க்கும் காரியத்தைக் கர்த்தரின் கரத்தில் விட்டுவிடுவேன் என்று போதகர்களே! உங்களால் உறுதிகொள்ள முடியுமா? கிறிஸ்தவர்களாக கூட்டங்களில் அறிக்கையிடப்பட்டு, கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முடியாமல் மோசம் போனவர்கள் அதிகரித்துவரும் இந்நாட்களில் மெய்ச்சுவிசேஷம் இனியாவது சுடர்விட்டு பிரசங்க மேடைகளை அலங்கரிக்குமா?*

# கர்த்தருடைய ஊழியக்காரரைக் குறை சொல்லலாமா?

கர்த்தருடைய ஊழியக்காரர்களைக் குறைகூறக்கூடாதென்றும், அப்படிக்குறைகூறுபவர்கள் கர்த்தரின் சாபத்திற்கு உள்ளாக நேரிடும் என்றும் கூறி அதற்கு பழைய, புதிய ஏற்பாட்டு வசனங்களை ஆதாரமாகக்காட்டி இன்று ஆத்துமாக்களை பயமுறுத்தி வருகிறது ஒரு கூட்டம். கர்த்தருடைய ஊழியக்காரர்களை நாம் கனம் பண்ண வேண்டுமே தவிர அவர்களை ஒருபோதும் குறைகூறக்கூடாதென்கிறார்கள் இவர்கள். இதற்கு இவர்கள் உதாரணமாக எடுத்துக்கொண்டிருக்கும் பழைய ஏற்பாட்டு வசனம். "நான் அபிஷேசம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும் என்னுடைய தீர்க்கசரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள் என்றார்" என்பதாகும் (1 நாளாகமம் 16:22; சங்கீதம் 105:15). அத்தோடு 2 சாமுவேல் 19:21 ஐயும் உதாரணமாகக் காட்டி கர்த்தரின் ஊழியக்காரரைக் குறை கூறுபவர்களைக் கர்த்தர் சபிப்பார் என்றும் பயமுறுத்துகிறார்கள்.

முதலில் நாம் மேலே பார்த்த வசனங்கள் எந்த சூழ்நிலையில் சொல்லப்பட்டவை என்பதை ஆராய்வது அவசியம். வேத வசனங்களை அவை காணப்படும் சூழ்நிலைகளின் அடிப்படையில் விளக்காது தாம் நினைத்தவாறு பயன்படுத்தி விளக்கங் கொடுப்பது பலருக்கு கைவந்த கலையாக இருக்கின்றது. இந்தவிதத்திலேயே இந்த வசனங்களையும் அவர்கள் பயன்படுத்துகிறார்கள். இந்த வேதப்பகுதிகளை இனி ஆராய்வோம். பழைய ஏற்பாட்டு மக்களுக்கு, அவர்களை வழி நடத்த கர்த்தர் அபிஷேகித்து பல பிதாக்களையும், தீர்க்கதரிசிகளையும் தந்தார். அவர்கள் கர்த்தரின் அங்கீகாரத்தை சந்தேகமில்லாமல் பெற்றவர்கள். அத்தகையோரை நிராகரிப்பது கர்த்தருக்கே விரோதமாக நடக்கும் செயல். இஸ்ரவேல் மக்கள் பல முறை கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்ட தீர்க்கதசரிசிகளை நிராகரித்துவிட்டு போலித்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு மதிப்புக்கொடுத்தார்கள். அது மிகவும் மோசமான செயல். இது தவறு என்று அறிவுறுத்தி இனி அப்படிச் செய்யாதீர்கள் என்று சொல்கிறது இவ்வசனங்கள் (1 நாளா. 16:22; சங்கீதம் 105:15).

2 சாமுவேல் 19:21 ல், சீமேயி கர்த்தரின் அபிஷேகத்தைப் பெற்றிருந்த தாவீதை அவமதித்துப் பேசியிருந்தான். தாவீது இங்கே எந்தத் தவறும் செய்யவில்லை. தாவீது தவறு செய்திருந்து சீமேயி அதனைச் சுட்டிக்காட்டியிருந்தால் அரசனாக இருந்தபோதும் தாவீது மனந்திரும்பி எல்லோரையும்போல் மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டும். ஆனால், இங்கே தவறு தாவீதின் மேல் இல்லை. சீமேயி சுயநலத்தால் தாவீதை அவமதித்தான். தவறு சீமேயினுடையது. இருந்தபோதும் தாவீது அவனை மன்னித்து விடுகிறான். இது தெரியாமல் இந்த வசனங்களைப் பயன்படுத்தி கர்த்தரின் ஊழியக்காரரை ஒருபோதும் குறைகூறக்கூடாது என்று வேதம் சொல்கின்றது என்று விளக்கமளிப்பது முழுப்பூசணிக்காயை சோற்றில்போட்டு மறைப்பதுபோலாகும்.

## அனைத்தையும் சோதித்துப் பாருங்கள்

வேதம், கிறிஸ்தவர்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து அங்கீகரிக்க வேண்டும் என்று சொல்கிறது. "உலகத்திலே அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதியுங்கள்" என்று அப்போஸ்தல-னான யோவான் சொல்லியிருப்பதை 1 யோவான் 4:1 ல் வாசிக்கிறோம். தொடர்ந்து ஒருவன் தேவனுடைய ஊழியக்காரரா? என்பதை எப்படி அறிந்து கொள்வது என்றும் யோவான் இப்பகுதியில் விளக்குகிறார். இங்கே "ஆவிகள்" என்று யோவான் குறிப்பிடுவது, மனிதர்களைத்தான். முதலில், யோவான் "எல்லா ஆவிகளையும்", அதாவது கர்த்தரின் பெயரைச் சொல்லிக் கொண்டு வருகின்ற எல்லோரையும் உடனடியாக அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளாதீர்கள் என்று எச்சரிப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எல்லோரையும் கேள்வி முறையில்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும், அவர்களைப்பற்றி ஒரு குறையும் சொல்லக்கூடாது என்று யோவான் சொல்லவில்லை. சோதித்துப் பார்க்காமல் எவரையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதுதான் யோவானின் எச்சரிக்கை. எந்த தேவ ஊழியனைப் பற்றியும் எதுவும் சொல்லக்கூடாது, சந்தேகத்தோடு பார்க்கக்கூடாது என்று சொல்லுகிறவர்கள் யோவானின் புத்திமதியைக் காதில் வாங்குவது நல்லது. யோவானைப் பொறுத்தவரையில் சோதித்துப் பார்க்காமல் எவரையும் ஏற்றுக்கொள்கிறவன் புத்திசாலி அல்ல. அவன் சுலபமாக மற்றவர்-களிடம் ஏமாந்து போகக்கூடியவன். அடுத்ததாக கர்த்தருடைய ஊழியக்காரர்-களை அடையாளம் கண்டுகொள்ள ஒரு அறிவுரையையும் 4:2ல் தருகிறார். இதை விளக்கமாக பிறகு பார்ப்போம்.

மத்தேயு 24:4ல் இயேசு, தன் சீடர்களைப்பார்த்து ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள் என்று சொன்னார். அதற்கான காரணத்தை விளக்கும் ஆண்டவர் அடுத்த வசனத்தில், "ஏனெனில் அநேகர் என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்" என்றார். நண்பர்களே! இயேசுவின் வார்த்தைகள் இன்று நாம் பின்பற்றும்படியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இயேசு சொல்கிறார்: நம்மை யாரும் வஞ்சித்துவிடாதபடி நம்மை நாமே காத்துக்கொள்ள வேண்டுமென்று. எவரையும் கேள்விமுறை இல்லாமல் நாம் ஏற்றுக்கொண்டால் யார் கர்த்தரின் ஊழியக்காரர், எவர் போலி என்பதை எப்படி அறிந்து கொள்வது? இயேசு சொல்லியிருப்பதை மேலும் கூர்ந்து கவனியுங்கள்: என் நாமத்தைத் தரித்துக் கொண்டு, நானே கிறிஸ்து என்று சொல்லிக்கொண்டு பலர் வருவார்கள் என்று இயேசு அப்போதே தன் சீடர்களை எச்சரித்திருக்-கிறார். இயேசுவின் வார்த்தைகளுக்கு என்ன பொருள் தெரியுமா? அதாவது, நானே கிறிஸ்து என்று சொல்லிக்கொண்டு, அற்புதங்களைச் செய்து, நம்மைக் கவரும் வகையில் பேசி, இந்த மனிதன் கர்த்தரின் மனிதனா? இல்லையா? என்று நாம் கண்டுகொள்ள முடியாதளவுக்கு தன்னை உருமாற்றிக் கொண்டு போலிகள் நம்மத்தியில் வந்து நம்மை வஞ்சிக்கப் பார்ப்பார்கள் என்பதுதான் பொருள். அந்தளவுக்கு நம் மை ஏமாற்றிவிடக்கூடியவர்கள் இந்தப் போலிகள். போலிகள் இந்தளவுக்கு நம்மத்தியில் இருந்து நம்மை ஏமாற்றுவதற்காக ஊழியம் செய்வதுபோல் வாழ்ந்து கொண்டிருக்கும்போது, ஒருவரையும் சந்தேகிக்கக்-கூடாது, அவர்களைப்பற்றி எதையும் பேசக்கூடாது என்று சொல்வது இயேசுவின் போதனைகளோடு ஒத்துப்போகாத பேச்சு. இயேசு சொல்லும் இன்னுமொரு உண்மையையும் பாருங்கள். இந்தப் போலி ஊழியக்காரர்கள்

அநேகரை வஞ்சிப்பார்கள் என்று சொல்கிறார். அதாவது அநேகர் அவர்களுடைய வஞ்சக விளையாட்டுக்களுக்கு இடம் கொடுத்து வஞ்சிக்கப்படுவார்கள். அந்த நிலமை நமக்கு வராதபடி நம்மை நாமே காத்துக்கொள்ள வேண்டுமானால் இயேசு சொல்வதுபோல் எச்சரிக்கையாக இருப்பதைத் தவிர வேறு வழியில்லை. காதில் விழுவதெல்லாம் நல்ல பிரசங்கம், வாசிப்பதெல்லாம் நல்ல தேவ செய்திகள், கண்ணால் பார்ப்பதெல்லாம் கர்த்தரின் அற்புதங்கள் என்று வாழ்ந்து கொண்டிருக்கும் கண்ணிருந்தும் குருடாயிருக்கும் அநேகர் ஏற்கனவே போலிகளின் வஞ்சனைக்குப் பலிக்கடாக்களானவர்கள். அப்படிப் பலிக்கடாக்களாக நாமும் மாறிவிடக்கூடாது என்பதற்காகத்தான் இயேசுவும் நாம் எதையும் சோதித்துப் பார்த்து எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்கிறார். மத்தேயு 24ல் இயேசு தரும் போதனைகள் இறுதிக்கால நிகழ்ச்சிகள். அந்த இறுதிக் காலப்பகுதியில்தான் நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இயேசு அன்றே எச்சரித்திருப்பதுபோலவே இன்று கள்ளத்தீர்க்கதரிசிகள் எங்கும் கிறிஸ்தவர்களை வஞ்சிப்பதற்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

நாம் இதுவரை பார்த்த வேதப்பகுதிகள் மட்டுமல்லாமல் பழைய ஏற்பாட்டிலும் போலித்தீர்க்கதரிசிகள் பேச்சைக் கேட்டு ஏமாந்து விடக்கூடாது என்று கர்த்தர் பலதடவைகள் இஸ்ரவேலரை எச்சரித்திருப்பதை வாசிக்கலாம் (எசேக்கியல் 37:1- ). அதே போல் புதிய ஏற்பாட்டின் பின்வரும் வசனங்களையும் ஆராய்ந்து பாருங்கள், கொலோசெயர் 2:8, 18; 1 தெசலோனிக்கேயர் 2:2; 3:6; 1 தீமோத்தேயு 1:3-7; 4:1-3; 2 தீமோத்தேயு 2:16-18; 3:1-9; 4:3-4; தீத்து 1:10-11; 2 பேதுரு 2:1:-3; 3:3; 2 யோவான் 7, 10; 3 யோவான் 9-10; யூதா 4-19. இவற்றோடு வெளிப்படுத்தின சுவிசேஷத்தில் ஏழு சபைகளுக்கு அனுப்பிய நிருபங்களில் இயேசு போலித்தீர்க்கதரிசிகளை சபைகளில் அனுமதிக்கக்கூடாது என்றும் அப்படித் தொடர்ந்து அனுமதித்தால் குத்துவிளக்குத் தண்டத்தை அவர்கள் மத்தியில் இருந்து எடுத்துவிடுவேன் என்று கடுமையாக எச்சரித்திருப்பதை வாசிக்கலாம். இப்படி வேதத்தின் பல பகுதிகளில் கர்த்தர் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து போலித்தீர்க்கதரிசிகளிடமிருந்தும், போலிப்போதனைகளில் இருந்தும் விலகி இருங்கள் என்று அடிக்கடி சொல்லியிருக்க, எந்த ஊழியக்காரரையும் குறைகூறக்கூடாது, அவர்களை சோதிப்பது நமது கடமை அல்ல, கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று சொல்லி நாடகமாடுபவர்களைப் பற்றி என்ன சொல்வது.

## கர்த்தரின் ஊழியக்காரர்கள் யார்?

யார்? எவர்? என்று ஆராய்ந்து பார்க்காமல், ஊழியக்காரர்கள் என்று தம்மை அறிவித்துக்கொள்கிற எல்லோரையும் அரவணைத்துக்கொள்கிற ஒரு வழக்கம் தமிழ் கிறிஸ்தவர்களிடம் ஆண்டாண்டு காலமாக இருந்து வருகிறது. இதற்குப் பல காரணங்களைக்கூறலாம். (1). சரியான வேத ஞானமில்லாததால் மெய்யான ஊழியக்காரரை அடையாளங்கண்டு கொள்ளும் பக்குவத்தை அநேகர் இழந்து நிற்கிறார்கள். (2). நமது கலாச்சாரத்தில் இருக்கும் முகத்தாட்சிணியம் காட்டும் வழக்கம் போலிகளை இனங்கண்டு தள்ளி வைக்கும் பக்குவத்தை இல்லாமல் செய்துவிடுகிறது. (3). ஒருவர் உண்மையான ஊழியக்காரராக இருந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம் பலரை ஒன்றுமே செய்யாமல் சும்மா இருந்துவிடும் நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது. இக்காரணங்களால் போலிகள் நம்மத்தியில் காளான்கள் முளைத்து வளருவது போல் அடர்ந்து தளைத்து நிற்கிறார்கள். யாரும் ஒன்றும் சொல்லமாட்டார்கள்

என்ற தைரியத்தில் அவர்கள் தங்கள் வியாபாரத்தை தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் தலை நிமிர்த்தி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் இதுவரை பார்த்த வேத வசனங்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள் எதையும் சோதித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்வதைப் பார்த்தோம். அப்படியானால், நாம் எந்த மனிதனையும் கர்த்தரின் ஊழியக்காரராக அவசரப்பட்டு உடனடியாக அங்கீகரிப்பது பெருந்தவறு என்பது அவ்வசனங்கள் போதிக்கும் ஆணித்தரமான உண்மை. இனி, மெய்யான ஊழியக்காரரை எப்படி அடையாளம் கண்டு கொள்வது என்று பார்ப்போம். எல்லோரையும் கர்த்தருடைய ஊழியக்காரராக அவசரப்பட்டு நாம் அங்கீகரித்துவிடக்கூடாது என்று கூறும் வேதம் மெய்யான ஊழியக்காரரை அடையாளங் கண்டுகொள்வதெப்படி என்றும் தெளிவாக விளக்குகிறது.

### (1) ஊழியக்காரர்கள் எப்போதும் சபைத்தொடர்புள்ளவர்களாக இருக்க வேண்டும்

இன்று போலிச்சுவிசேஷகர்களும், அற்புதங்கள் செய்கிறோம் என்று ஆத்துமாக்களை ஏமாற்றுபவர்களும் அதிகரித்திருப்பதற்குக் காரணம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் திருச்சபைக்கு மதிப்பில்லாமல் இருப்பதுதான். கர்த்தரின் வேதபோதனைகளின்படி திருச்சபைகள் கட்டுக்கோப்போடு அமைந்து இயங்குமானால் தான்தோன்றித்தனமாக இயங்கிவரும் சொந்த ஊழியக்காரர்களுக்கும், சுவிசேஷகர்களுக்கும் இடமில்லாமல் போயிருக்கும். திருச்சபை வல்லமையற்றும், ஆத்துமாக்கள் திருச்சபைமேல் அக்கறைகாட்டாமலும் வாழ்ந்து வருவதால் புள்ளுருவிகள் எங்கும் முளைத்து போலி ஊழியங்கள் வளர்ந்து வருகின்றன.

அப்போஸ்தலர் நடபடிகளை வாசித்துப் பார்த்தால் ஆதிசபை கட்டுக்கோப்போடு இயங்கியதைப் பார்க்கிறோம். சபைகளுக்கிடையில் தொடர்பு இருந்து வந்திருப்பதையும் பார்க்கலாம். ஊழியக்காரர்கள் சபைகளால் நியமிக்கப்பட்டு சபை ஊழியப்பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு சபையில் இருந்து வேறு ஊருக்கு செல்லும் ஊழியக்காரர் தமது சபையின் அனுமதிக்கடிதத்தோடு ஏனைய சபைகளுக்கு போயிருப்பதையும் வாசிக்கலாம். ஊழியக்காரர்கள் என்ற பெயரில் வருபவர்களை அவர்களுடைய சொந்த சபைத்தலைவர்களின் அனுமதிக்கடிதங்கள் இல்லாமல் சபைகள் அங்கீகரிக்கவில்லை. போலி ஊழியக்காரர்கள் என்று அடையாளங்கண்டவர்களைப் பற்றி தங்கள் சபைக்கும், தங்களோடு தொடர்புடைய வேறு சபைகளுக்கும் அவர்கள் வெளிப்படுத்தத் தவறவில்லை. ஆதி சபையில் கட்டுப்பாடும் கட்டுக்கோப்பும் இருந்தது. அப்போஸ்தலர் நடபடிகளும், புதிய ஏற்பாட்டு நிருபங்களும் சபை அமைப்பு பற்றியும், சபைகள் இயங்க வேண்டிய முறைகள் பற்றியும் தெளிவான போதனைகளைத் தருகின்றன. ஆனால், அவற்றைப் பின்பற்றத் தவறியதால் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் இன்று போலி ஊழியங்களுக்கும், போலி ஊழியக்காரர்களுக்கும் கொண்டாட்டமாக இருக்கின்றது.

மெய்யான ஊழியக்காரர்கள் தாங்கள் ஊழியம் செய்யும் சபைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள். தங்களுக்குக் கர்த்தர் கொடுத்துள்ள ஆடுகளைக் கவனிப்பதைவிட்டுவிட்டு ஊர் சுற்றிக்கொண்டிருக்க மாட்டார்கள். வேறு எந்த ஊழியங்களில் ஈடுபட்டாலும், தங்களுடைய சபையோடு கூடி ஆலோசித்து சபை அனுமதியோடு அந்த ஊழியங்களில் ஈடுபடுவார்கள். சபைத்தொடர்பிருந்து, சபையால் அனுப்பப்படும் ஊழியக்காரர்கள் ஏற்கனவே

*சபையால் ஆராயப்பட்டு ஊழியத்திற்கு அங்கீகரிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். அப்படி சபை இல்லாமல் தங்களை சுயமாக ஊழியத்திற்கு நியமித்துக் கொண்டவர்களின் விசுவாசத்தைப் பற்றியோ, வாழ்க்கை முறை-பற்றியோ, அவர்கள் விசுவாசிக்கும் சத்தியங்களைப் பற்றியோ யாருக்கும் ஒன்றுமே தெரியாது. அப்படிப்பட்டவர்கள் தவறான மனிதர்களாக இருந்து-விட்டால் அவர்களுக்கு இடங்கொடுக்கும் ஆத்துமாக்களின் வாழ்க்கைக்கு பெருங்கேடு ஏற்பட்டுவிடும். இதனால்தான் சபைத்தொடர்பில்லாத ஊழியக்காரர்களையும், ஊழியங்களையும் தவிர்த்துக்கொள்வது நல்லது. சாதாரணமாக ஒரு பொருளை விலைக்கு வாங்கும்போதுகூட அப்பொருளை எந்தக் கம்பேனி தயாரித்திருக்கிறது என்று பார்த்து, நல்ல கம்பேனிப் பொருளாக இருந்தால் மட்டும்தான் விலை கொடுத்து வாங்குகிறோம். லௌகீக காரியங்களிலேயே நாம் இத்தனைக் கவனமாக இருக்கும்போது ஆவிக்குரிய காரியங்களில் மட்டும் அசட்டையாக இருந்துவிட முடியுமா?*

*இவ்வளவு நேரம் ஊழியக்காரர்கள் சபைத் தொடர்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று பார்த்தோம். ஆனால், கிறிஸ்தவர்களாகிய நமக்கு சபைத்தொடர்பு இல்லாமல் இருந்தால் ஊழியக்காரர்களை எப்படி நல்லபடி ஊழியம் செய்யும்படிப் பார்த்துக் கொள்வது? இன்று கிறிஸ்தவர்களில் அநேகர் மேய்ப்பனில்லாத ஆடுகள்போல், சபையில்லாமல் அலைந்து கொண்டிருக்-கிறார்கள். மேய்ப்பனில்லாத ஆடுகளுக்கு இருக்க ஒரு நிலமிருக்காது, பாதுகாப்பு இருக்காது. அவை நீண்ட நாட்களுக்கு உயிரோடிருக்கவும் முடியாது. அதுபோல், சபையில்லாத ஆத்துமாக்களுக்கு சத்துள்ள போதனை கிடைக்காது, மேய்ப்பனின் பாதுகாப்பு இருக்காது, நீண்ட நாட்களுக்கு ஆவிக்குரிய வாழ்க்கையை ஜீவனோடு வாழ முடியாது. ஆத்துமாக்களாகிய ஆடுகளும் சபை வாழ்க்கைக்கு தம்மை ஒப்புக்கொடுத்து ஊழியக்காரர்கள் வேதபூர்மான ஊழியம் செய்யும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.*

### (2). ஊழியக்காரரின் போதனைகள் வேதபோதனைகளாக இருக்க வேண்டும்

*ஊழியக்காரர்கள் முதலில் சபைகளைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். அடுத்ததாக அவர்களுடைய போதனைகள் வேதபூர்வமானவையாக இருக்க வேண்டும். 1 யோவானில் 4:2, 3 ல், யோவான் மெய்யான ஊழியக்காரரை அடையாளங் கண்டுகொள்ள ஒரு அறிவுரை தருகிறார். அதாவது, மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது என்கிறார். இதற்குப் பொருளென்னவென்றால், வேதம் போதிக்கின்ற முறையில், அந்த சத்தியத்தில் ஒன்றையும் குறைக்காது, கூட்டாது உள்ளதை உள்ளபடியே போதிக்கின்றவன் மட்டுமே தேவனிடத்தில் இருந்து வந்திருக்க முடியும் என்பதுதான். கிறிஸ்து சரீரமெடுத்து பிறக்கவில்லை என்று போதிக்கிறவன் மெய்யான ஊழியக்காரனாக இருக்க முடியாது. கிறிஸ்துவின் கன்னிப்பிறப்பை மறுக்கிறவன் மெய்யான கிறிஸ்தவ ஊழியனாக இருக்க முடியாது. இதைத்தான் யோவான் வலியுறுத்துகிறார். மெய்யான ஊழியக்காரனை இனங்கண்டு கொள்ள வேண்டுமானால் அவனது போதனைகளை நாம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். ஏற்கனவே சபையால் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஒருவனுடைய போதனையை ஓரளவுக்கு நம்பிக்கேட்கலாம். சபையே தெரியாது, ஏதோ ஒரு இறைநிந்தனை செய்யும் கல்லூரியில் பட்டத்தை வாங்கிக் கொண்டு, ஊழியத்தில் இறங்கியிருப்பவர்-களின் போதனைகளை எப்படி நம்பிக்கேட்பது? கர்த்தரின் ஊழியக்காரரின் முதன்மையான ஊழியம் ஆத்துமாக்களுக்குத்தேவையான உணவைக்*

கொடுப்பது. அதை போதனைகள் மூலமே ஒரு ஊழியக்காரனால் தர முடியும். அவனுடைய போதனைகள் வேதபூர்வமாக இல்லாதிருக்குமானால் அவன் கள்ளப்போதகனாகத்தான் இருக்க முடியும்.

நான் பெசும்போதெல்லாம் கிறிஸ்து என் பக்கத்தில் நிற்கிறார் என்று சொல்லும் தினகரனின் பேச்சு அறிவில்லாத ஒரு ஆத்துமாவுக்கு குளிரூட்டுவதாக இருக்கலாம். அந்த ஆத்துமாவுக்கு வேதம் தெரிந்திருந்தால் அந்தப் பேச்சு இறை நிந்தனை என்று அலறி அந்தக்கூட்டத்தைவிட்டு ஓடிப்போயிருக்கும். கம்பராமாயணத்தில் கிறிஸ்துவையும், இந்திய வேதங்களில் இயேசுவையும் காட்ட முயற்சி செய்பவர்களின் கவர்ச்சிப் பேச்சு வேதம் தெறியாத ஆத்துமாக்களுக்கு வேண்டுமானால் உணர்ச்சியூட்டலாம். வேதம் படித்தவர்கள் அவற்றை தேவநிந்தனையாக மட்டும்தான் பார்ப்பார்கள். கர்த்தருடைய ஊழியக்காரருக்கு இந்தக் கவர்ச்சிப் பேச்செல்லாம் பேச வராது. அவர்கள் கர்த்தருடைய வேதத்தைப் படித்து அதிலிருப்பதை மட்டுமே பேச முயல்வார்கள். அந்நிய பாஷையும், தீர்க்கதரிசனமும், வெளிப்படுத்தலும் அன்றுபோல் இன்றும் தேவையென்றும், இவைகள் இருந்தால் மட்டுமே ஒரு ஆத்துமா ஆவியைப் பெற்றுக்கொண்டிருக்கிறது என்று நம்பலாம் என்றும், ஆவியின் பெயரால் நாமெல்லோருமே அற்புதங்களைச் செய்யலாம் என்றும் சொல்வோரின் போதனைகள் வேதத்தை ஆராய்ந்து படிக்க மறுத்து, உணர்ச்சிவசப்பட்டு, சிந்திக்க மறுப்பவர்களுக்கு வேண்டுமானால் பொக்கிஷமாகப்படலாம். ஆனால், வேதத்தை மட்டும் நம்பிப்படித்து, போதித்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு அவை வெறும் மாயப்பேச்சு மட்டுமே.

போலிப்போதனைகளில் இருந்து நம்மைக்காத்துக்கொள்ளவே நமது மூதாதையர்கள் விசுவாச அறிக்கைகளை எழுதி வைத்தார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சீர்திருத்த சபை ஊழியக்காரர்கள் அவற்றை விசுவாசித்து வேத அடிப்படையில் பிரசங்கிப்பவர்களாக இருப்பார்கள். அப்படி விசுவாசிக்காதவர்களை சீர்திருத்த சபைகள் ஊழியத்திற்கு நியமிக்காது. காளான்கள் போல் இன்று தோன்றியிருக்கும் அநேக சுவிசேஷகர்களும், விரிவுரையாளர்களும், சபை அறியாத போதகர்களும் வேதபூர்வமான இறையியல் அறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களால் ஆத்துமாக்களுக்கு சத்தான போதனைகளை ஒருபோதும் அளிக்க முடியாது.

### (3) ஊழியக்காரரின் நடத்தை வேதபூர்வமானதாக இருக்க வேண்டும்

ஊழியக்காரரின் நடத்தைக்கு வேதம் மிக முக்கிய இடத்தை அளிக்கிறது. ஊழியக்காரர்கள் இந்த உலகத்தில் பூரணமானவர்களாக இருந்துவிட முடியாது. ஆனால், அவர்களுடைய நடத்தை சாதாரண விசுவாசியுடைய நடத்தையைவிட உயர்வானதாகவும், ஏனைய விசுவாசிகளுக்கு உதாரணமானதாகவும் இருக்க வேண்டும். ஒருவருடைய போதனைக்கும், நடத்தைக்கும் ஊழியத்திற்கும் பெருந்தொடர்பிருக்கின்றது. அதனால்தான் பவுல் தீமோத்தேயுவில் ஊழியக்காரர்களுக்கான இலக்கணங்களை விபரிக்குப்போது அவர்களுடைய குடும்ப வாழ்க்கை, தனிப்பட்ட நடத்தைகளைப்பற்றி சுட்டிக் காட்டுகிறார். தன் மனைவிக்கு விசுவாசமாக இல்லாமல் இன்னொரு பெண்ணோடு தொடர்புவைத்திருந்த மனிதர்கள் எத்தனை பெரிய இறையியல் பட்டம் பெற்றிருந்தாலும் ஊழியத்திற்கு பொருத்தமில்லாதவர்கள். பணமே வாழ்க்கை என்று அதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்துவருபவர்கள் யூதாசின் உறவினர்கள். அவர்களுக்கும்

ஊழியத்திற்கும் பெருந்தூரம். அநேகர் அற்புதம் செய்வதாக பித்தலாட்டம் செய்து ஆத்துமாக்களை ஏமாற்றி வருகிறார்கள். ஆனால், இது இன்றைக்கு ஆத்துமாக்களுக்குப் புரிவதாயில்லை. ஊழியத்திற்கு பணம் தேவை என்று கெஞ்சியும், எழுதியும், கூட்டம் தோறும்பேசியும் வரும் அநேக பச்சோந்திகளுக்கு கஷ்டப்பட்டு ஊழைத்து சம்பாதித்த பணத்தை வாரியளித்து வீண்போய்க்கொண்டிருக்கிறார்கள், கண்ணிருந்தும் குருடர்களாயிருக்கும் அநேக ஆத்துமாக்கள். சபைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து வாழ்ந்து வரும் ஒரு ஊழியக்காரனால் இப்படிப் பணம் பணம் என்று அலைய முடியாது. ஏனெனில் சபை அவன் செயல்களில் எப்போதுமே கவனம் செலுத்தும். அதுதான் சபை ஊழியத்தின் அருமை. நடத்தை தவறும் ஊழியக்காரர்களை மெய்யான சபை ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அவர்கள் திருந்தி வாழ வழிவகைகளை ஏற்படுத்தும். அவர்கள் ஆணவத்தோடு ஊழியம் செய்ய அனுமதிக்காது.

நாம் இதுவரை பார்த்துவந்துள்ள இலக்கணங்களைக் கொண்டிராதவர்கள் விசுவாசமுள்ள ஊழியக்காரர்களாக இருக்க முடியாது. அவர்களை நாம் அங்கீகரிக்க வேண்டுமென்று வேதம் சொல்லவில்லை. "நெய்யை சாப்பிட்டு ஆட்டு மயிரை உடுப்பாக்கிக்கொள்ளுகிறவர்களையும், கொழுத்ததை அடித்துச் சாப்பிட்டு, ஆட்டு மந்தையை மேய்க்காதவர்களையும்" கர்த்தர் நிராகரிக்கும்படி சொல்லியிருக்கிறார் (எசேக்கியல் 34). மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்துக் கொண்டிருக்கிறவர்களை மேய்க்கும் தொழிலில் இருந்து விலக்கி, ஆடுகள் அவர்களுக்கு ஆகாரமாக இருந்துவிடாதபடி அவர்களுடைய வாய்க்குத் தப்பப் பண்ண வேண்டும் என்பதே கர்த்தருடைய கட்டளை (எசேக்கியல் 34:10).

## போலிகளை இணங்கண்டு நிராகரிக்க வேண்டும்

நாம் இதுவரை கர்த்தரின் ஊழியக்காரர் யார்? அவர்களை எப்படி இனங்கண்டு கொள்வது? என்று பார்த்தோம். இத்தனைக்கும் பிறகு கர்த்தரின் ஊழியக்காரரை குறைகூறக்கூடாது, அவர்களைப்பற்றிப் பேசக்கூடாது என்று சொல்பவர்கள் வேத அறிவே இல்லாதவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு ஊழியக்காரனை ஆராய்ந்து, கவனத்தோடு ஊழியத்திற்காக நியமிக்க வேண்டும் என்று வேதம் போதிக்கிறது. "ஒருவன் மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே" என்று பவுல் தீமோத்தேயுவை எச்சரிக்கை செய்வதை கவனியுங்கள் (1 தீமாத்தேயு 5:22). "மேலும், இவர்கள் முன்னதாக சோதிக்கப்பட வேண்டும்" என்றும் பவுல் சொல்வதை சிந்தித்துப் பாருங்கள் (1 தீமோத்தேயு 3:10). இதையெல்லாம் செய்வதற்காக கர்த்தர் நியமித்திருக்கும் ஒரே தெய்வீக அமைப்பு திருச்சபை மட்டுமே. இத்தனைப் போதனைகளையும் மீறி, தன்னைத்தாமே ஊழியத்திற்காக நியமித்துக்கொண்டு, குடும்ப அங்கத்தவர்களையெல்லாம் அதில் நுழைத்துக்கொண்டு, சொந்தமாக சுவிசேஷ வியாபாரம் நடத்திக்கொண்டிருப்பவர்களை நாம் எப்படி அங்கீகரிக்க முடியும்? அவர்களை அங்கீகரிப்பதும், அவர்கள் நடத்தும் கூட்டங்களில் கலந்து கொள்வதும், அவர்களுக்கு பணம் அனுப்புவதும், அவர்கள் செய்யும் காரியங்களுக்காக ஜெபம் செய்வதும், அவர்களுடைய பத்திரிகைகளையும், துண்டுப்பிரசுரங்களையும் வாங்கி வாசிப்பதும் கர்த்தருக்கும் அவருடைய சபைக்கும் விரோதமான, ஆபத்தான செயல்கள். நம் ஆத்துமாவை அழித்துக்கொள்ளும் செயல்கள். போலி ஊழியக்காரருக்கும், ஊழியங்களுக்கும் தீனிபோட்டு வளர்த்துவிடும் தீச்செயல்கள்.

வேதம் போலிகளை இனங்கண்டு அவர்களை விலக்கி வைக்க வேண்டும் என்று சொல்கிறது. அவர்களோடு உறவாடக்கூடாது என்று சொல்கிறது. இயேசு சொன்னார், முடிந்தால் பிசாசு தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கப்பார்ப்பான் என்று. போலிகளை அவர்களுடைய போதனைகளின் மூலமும், நடத்தையின் மூலமும் மட்டுமே இனங்கண்டு கொள்ள முடியும். அதனால் ஆத்துமாக்கள் எப்போதும் விழிப்போடு இருக்க வேண்டியது அவசியம். எந்தப்போதனைகளையும் கேட்டு ஆராய்ந்து பார்ப்பது அவசியம். ஒரு ஊழியக்காரன் வயதானவராக இருக்கிறார், பல பட்டங்கள் வாங்கியிருக்கிறார், அற்புத ஊழியங்கள் செய்கிறார், இனிப்பாக பேசுகிறார், அவருக்கு கூட்டம் சேர்கிறது என்றெல்லாம் சொல்லி அவருடைய மெய்த்தன்மையை அடையாளங்கண்டு கொள்ள மறுத்து, அவரை ஆதரித்து வந்தால் ஆத்துமாக்கள் அந்த மனிதரின் செல்களால் வீண்போகும் நிலை ஏற்படும். அப்படி அநேகருடைய வாழ்க்கை ஏற்கனவே வீணாகியிருக்கிறது. முகத்தாட்சிணியம் பார்த்துப் பழகிப்போன தமிழ்ச் சமுதாயம் தன்னைத் தானே இப்படித் தொடர்ந்து இன்று அழித்துக் கொண்டு வருகிறது. இந்த நிலை மாறவேண்டும்.

சீர்திருத்த காலத்தில் உலகை ஆண்டு வந்த ரோம சபையின் போலித்தனங்களும், புரட்டுக்களும், வேதவிரோதமான போதனைகளும் வெளிப்படையாக தெரிந்தபின், அது கர்த்தரின் சபை என்று சாக்குப்போக்குச் சொல்லி மார்டின் லூதரும் அவரைச் சார்ந்தவர்களும் வாளாவிருக்கவில்லை. ரோமன் கத்தோலிக்க மதத்தின் தோலை உரித்து அதன் போலித்தனத்தை உலகுக்கு அம்பலப்படுத்தி, மெய்ச்சபைகளை அமைக்க ஆரம்பித்தார்கள். அன்று ரோமன் கத்தோலிக்க சமயம் இயேசுவை விசுவாசிப்பதாகத்தான் நாடகமாடியது. பல்பிடுங்கப்பட்ட பாம்பாக இருந்து இன்றும் அதையே செய்து வருகிறது. இதே நிலையை இன்று லூதரன் சபைகளிலும், மெதடிஸ்ட் சபைகளிலும், சீ. எஸ். ஐ சபைகளிலும், அநேக பெந்தகொஸ்தே ஊழியங்களிலும், தனி மனிதர்களின் சுவிசேஷ வியாபார ஊழியங்களிலும் நாம் பார்க்கவில்லையா?

## கர்த்தரின் ஊழியக்காரரை ஆதரித்து ஊக்கப்படுத்த வேண்டும்

போலிகளை இனங்கண்டு நிராகரிக்கும் அதேவேளை மெய்யான ஊழியக்காரரை நாம் ஆதரிக்க வேண்டும். அவர்கள் ஆர்வத்தோடும், அன்போடும் ஊழியம் செய்வதற்கான சகல உதவிகளையும் செய்ய வேண்டும். அத்தகைய விசுவாசமுள்ள ஊழியக்காரர்கள் எப்போதும் சபைத்தொடர்புள்ளவர்களாக, கர்த்தருக்குப் பயப்படுபவர்களாக, வேதத்தை மட்டுமே போதிப்பவர்களாக, ஆத்துமாக்களிடம் பணத்திற்காக அலைய மறுப்பவர்களாக, நன்னடத்தையுள்ளவர்களாக இருப்பார்கள். அத்தகைய நல்ல ஊழியக்காரர்கள் மனங்கோனாதபடி நாம் நடந்து கொள்ள வேண்டும். அத்தகைய ஊழியக்காரரே உண்மையான அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டவர்கள். அவர்கள் மேல் நாம் கைவைக்கக்கூடாது. அவர்களுக்கு நாம் துன்பம் விளைவிக்கப் பார்க்கக்கூடாது. அவர்களுடைய தேவைகள் சந்திக்கப்பட சபையாக நாம் உழைக்க வேண்டும். அவர்களுடைய ஊழியத்தின் மூலமாக நாம் ஆத்மீக விருத்தியடையப்பார்க்க வேண்டும். நல்ல ஊழியக்காரர்கள் கிடைப்பது இன்று முயற்கொம்பு கிடைப்பதுபோல் கடினமாக இருக்கிறது. இருக்கும் நல்ல ஊழியக்காரர்களையும் நாம் இழந்துவிடக்கூடாது. அவர்களை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களோடு சேர்ந்து உழைத்து சபை வளர்ச்சிக்காக நாம் பாடுபட வேண்டும்.

# உதவிக்காரர்கள் (Deacons)

*கர்த்தருடைய சபையில் இன்று இரண்டு வகை ஊழியக்காரர் இருக்கிறார்கள். அவர்கள் மூப்பர்களும், உதவிக்காரர்களும் (1 தீமோத்தேயு 3). இவர்களே திருச்சபை ஊழியத்திற்காக இன்று கொடுக்கப்பட்டிருக்கும் நிரந்தர சபை ஊழியர்கள். இந்த இரண்டு வகை ஊழியமும் திருச்சபைக்கு மிக அவசியமானவை. இவை இல்லாமல் திருச்சபைகள் நல்ல முறையில் இயங்க முடியாது. ஒரு சபை ஆரம்பிக்கும் காலத்தில் இந்த ஊழியர்களைக் கொண்டதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அந்த சபை வளருகிறபோது இந்த ஊழியங்களை அந்த சபை கொண்டதாக இருக்க வேண்டும். இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இருக்கும் சபைகளுக்கு இந்த ஊழியங்களைப் பற்றிய வேதபூர்வமான சிந்தனைகள் இல்லாமலிருப்பது நல்லதல்ல. அநேக சபைகளில் இந்த இருவகை ஊழியங்களின் தன்மை, அவற்றின் பயன்பாடுகள் தெறியாமல் மனித சிந்தனைப்படியான காரியங்களைச் செய்துவருகிறார்கள். முக்கியமாக உதவிக்காரர்கள் இன்று அநேக சபைகளில் மூப்பர்களுக்கான அதிகாரத்தைக் கொண்டு போதகர்கள் போல் நடந்து வருகிறார்கள். இந்த சபைகளுக்கு மூப்பர்களுக்கும், உதவிக்காரர்களுக்கும் இடையில் இருக்கும் வேறுபாடு புரியவில்லை. உதவிக்காரர்கள் மூப்பர்களைப்போல நடந்து கொள்வது தவறாகவும் சிலருக்குப் படவில்லை. சில சபைகளில் போதகர்களுக்கே உதவித்தொகை போதாதநிலையில் உதவிக்காரர்கள் சம்பளம் வாங்கிக்கொண்டு போதகர்களை ஆண்டு வருகிறார்கள். இதைவிட மோசமாக உதவிக்காரராக இருக்க எந்தத்தகுதியும் இல்லாதவர்கள் பல சபைகளில் உதவிக்காரர்களாக இருந்து வருகிறார்கள். இப்படிப் பலவிதமான குளருபடிகள் சபை ஊழியங்களைப் பொறுத்தவரையில் சபை சபையாக நடந்து வருகின்றன. இந்த ஆக்கத்தில் உதவிக்காரர்களைப் பற்றி வேதம் என்ன சொல்கிறது? யார் அப்பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும்? அவர்களுடைய பணிகள் என்ன? என்று ஆராய்வதே என் நோக்கம். சீர்திருத்த சிந்தனை கொண்டு வளர்ந்து வரும் சபைகளுக்கு இது உதவும் என்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன்.*

### அப்போஸ்தலர் நடபடிகளில் உதவிக்காரர்கள்

*உதவிக்காரர்களைப் பற்றி புதிய ஏற்பாட்டில் நாம் முதன் முதலாக அப்போஸ்தலர் நடபடிகள் 6ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். ஆதி சபை வளர்ந்து வருகின்ற அந்த ஆரம்பநாட்களில் சபைத் தலைவர்களாக அப்போஸ்தலர்கள் மட்டுமே இருந்தார்கள். அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் நேரடிப் பிரதிநிதிகள். அவர்கள் மட்டுமே அன்று கர்த்தரிடம் இருந்து வெளிப்படுத்தலைப் பெற்று சபைக்குத் தேவையானதை செய்து அதை வளர்த்து வந்தார்கள். அவர்கள் பன்னிரண்டு பேர் மட்டுமே. ஆனால், சீடர்களின் தொகை அந்தக்காலத்தில் வளர்ந்து பெறுகியது. யூதர்களும், புறஜாதியாரும் கிறிஸ்துவை விசுவாசித்து சபை அங்கத்தவர்களாக சபையில் தொடர்ந்து இணைந்து வந்தார்கள். இவ்வாறாக சபை எண்ணிக்கையில் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில் யூதர்களுக்கும், கிரேக்கர்களுக்கும் மத்தியில் ஒரு சிக்கல் ஏற்பட்டது. கிரேக்கர்கள் தங்களுடைய விதவைகளுக்குத் தேவையானது*

*கிடைக்கவில்லையென்றும், தங்களுடைய விதவைகள் புறக்கணிக்கப்படுவதாக-வும், யூகர்களின் விதவைகள் அதிக உதவிகளைப் பெறுவதாகவும் குற்றம் சாட்டினார்கள். பெரிய கூட்டத்தில் இத்தகைய சிக்கல்கள் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது. இந்த நிலைமையை நீடிக்கவிட்டால் அது கைமீறிப்போகும் என்று உணர்ந்த அப்போஸ்தலர்கள் அதைத்தீர்க்க நடவடிக்கை எடுத்தனர்.*

*அவர்கள் எடுத்த நடவடிக்கை பின்வருமாறு: (1) தங்களுடைய பிரதான ஊழியம் என்ன என்பதை முதலில் எல்லோருக்கும் விளக்கினார்கள் 6:2. (2) பந்தி விசாரணை செய்வதற்காக ஏழுபேரைத் தெரிவு செய்யும்படி சபையைக் கேட்டுக்கொண்டார்கள். அப்போஸ்தலர்களுடைய பிரதான ஊழியமான தேவ வசனத்தைப் போதிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் எந்தவிதத்திலும் தடை ஏற்படக்கூடாது. அந்த ஊழியங்கள் இடைவிடாமல் நடக்க வேண்டும். இதுவரை அப்போஸ்தலர்களால் தொடர்ந்து பந்திவிசாரிப்பது போன்ற காரியங்களிலும் ஈடுபட்டு வர முடிந்தது. ஆனால், சபை எண்ணிக்கையில் வளர வளர அவர்களால் அந்த வேலைகளைத் தொடர்ந்து செய்ய முடியாமல் போனது. அதுமட்டுமல்ல, அவர்கள் தொடர்ந்து பந்தி விசாரணையில் ஈடுபட்டு வந்தால் அவர்களுடைய பிரதான ஊழியமும் தடைபட்டுப் போகும் நிலை ஏற்படும். இதைத்தவிர்க்குமுகமாக ஆதி சபையில் முதன் முதலாக அப்போஸ்தர்களால் உதவிக்காரர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஏன் ஏழு பேர் நியமிக்கப்பட்டார்கள்? என்ற கேள்வி எழலாம். இருந்த பிரச்சனையை சமாளிக்கவும், பந்திவிசாரணையை சரிவர செய்யவும் ஏழு பேர் போதுமானதாக இருந்தது என்று மட்டுமே கூற முடியும். அத்தொகை தேவைக்கு ஏற்ப பின்பு உயர்ந்திருக்கலாம். அப்போஸ்தலர்கள் இவ்வாறாக ஏற்படுத்திய முறை எல்லோருக்கும் ஏற்புடையதாக இருந்தது. அத்தோடு பிரச்சனையும் ஒரு முடிவுக்கு வந்தது. சபையும் தொடர்ந்து பெரு வளர்ச்சி அடைந்தது.*

*இந்தவிதத்திலேயே முதன் முதலில் உதவிக்காரர்கள் சபையில் தோன்றி-யிருக்கிறார்கள். அப்போஸ்தலர் நடபடிகள் 6ம் அதிகாரத்தின் போதனைகள் மிக முக்கியமானவை. அவற்றை நாம் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. இந்தப்பகுதி சபை அதிகாரிகள் பற்றிய மூன்று முக்கிய போதனைகளைத் தெளிவாகத் தருகின்றன. (1) இன்று அப்போஸ்தலர்களின் பணியைத் தொடர்ந்து சபைகளில் செய்து வரும் போதகர்களினதும், மூப்பர்களினதும் பிரதான பணி பிரசங்கம் செய்வதும், போதிப்பதும், ஜெபிப்பதுமாகும். இன்றைய போதகர்களும், மூப்பர்களும் சபை அதிகாரிகளாக, தலைவர்களாக இருந்து இந்தக்காரியங்களுக்கே முதலிடம் கொடுத்து வாஞ்சையோடு அவற்றை செய்து வர வேண்டும். (2). அப்போஸ்தலர்கள் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைத்தான் சபை வளர்ச்சி கருதி உதவிக்காரர்கள் செய்யும்படிக் கொடுத்தார்களே தவிர தங்களுடைய பொறுப்புக்களையும் அவர்களுக்குக் கொடுத்துவிடவில்லை. இன்று சபையில் உதவிக்காரர்கள் செய்யவேண்டிய அனைத்துக் காரியங்களுக்கும் போதகர்களும், மூப்பர்களுமே பொறுப்புடையவர்கள். (3) உதவிக்காரர்கள் சபைத்தலைவர்களான போதகர்களின் கீழ் இருந்து சபைக்குத் தேவையான அன்றாடத் தேவைகளைப் பொறுப்புடன் நிறைவேற்றி வர வேண்டும். அவர்கள் போதகர்களுக்கும், மூப்பர்களுக்கும் கட்டுப்பட்டு அவர்கள் வழிநடத்தலின்படி பணி செய்ய வேண்டும்.*

## உதவிக்காரர்களுக்கான இலக்கணங்கள்

*உதவிக்காரர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று வேதம் தெளிவாக விளக்குகிறது. சபைகள் உதவிக்காரர்களை தாம் நினைத்ததுபோல நியமித்துவிட முடியாது. 1 தீமோத்தேயு 3:8-13 வரையில் காணப்படும் வசனங்களில் உள்ள இலக்கணங்களைக் கொண்டவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். உண்மையில் சொல்லப்போனால் 1 தீமோத்தேயு 3 ல் கொடுக்கப்பட்டுள்ள மூப்பர்களுக்கும், உதவியாளர்களுக்குமான இலக்கணங்களில் பெரும் வேறுபாடுகள் இல்லை. உதவிக்காரர்களுக்கான இலக்கணங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.*

*(1) நன்னடத்தை*
*(2) விசுவாசம்*
*(3) குடும்ப வாழ்க்கை*

*இந்த மூன்று பிரிவுகளுக்குள் அந்த இலக்கணங்களை அடக்கலாம். இந்த இலக்கணங்களோடு பொருந்தி வராதவர்களை உதவிக்காரர்களாக சபை ஒருபோதும் நிமிக்கக்கூடாது. உதவிக்காரர்களும் சாதாரண மனிதர்கள்தான். அவர்கள் பூரணமானவர்களாக ஒருபோதும் இருந்துவிட முடியாது. இருந்தாலும் இந்த இலக்கணங்களைக்கொண்டிராதவர்கள் நேர்மையாகவும், நீதியாகவும் உதவிக்காரர்களுக்கான பொறுப்புக்களை கொண்டு நடத்த முடியாது.*

*(1)* **நன்னடத்தை** *(1 தீமோத். 3:8) - உதவிக்காரர்கள் பொய் பேசாதவர்களாக-வும், புறம்பேசாதவர்களாகவும் இருக்க வேண்டும். இரட்டை நாக்கு அவர்களுக்கு இருக்கக்கூடாது. சபையாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்-களாக அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். இரட்டை நாக்குள்ளவர்களை ஒருநாளும் நம்ப முடியாது. இந்தவிஷயத்தில் சபை மிகக்கவனமாக நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் மதுபானப்பிரியர்களாக (மது வெறியர்களாக) இருந்துவிடக்கூடாது. மதுவின் மயக்கத்திற்கு உள்ளானவர்கள் சபையாரின் நன்மையைக் கவனிக்கமாட்டார்கள். மதுவைப்பற்றியே எண்ணிக் கொண்டிருப்பார்கள். மதுவெறியர்களுக்கும் இந்தப் பதவிக்கும் வெகுதூரம். அடுத்ததாக, அவர்கள் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாக இருக்கக்கூடாது. அதாவது, சுலபமாக பணம் சம்பாதிக்க ஆசைப்படுகிறவர்-களாக இருக்கக்கூடாது. பணவிஷயத்தில் நல்ல எண்ணங் கொண்டவர்களாக இருக்க வேண்டும். சுலபமாக பணம் சம்பாதிக்கப் பார்க்கிறவர்கள் நேர்மையாக ஒருபோதும் அதைச் சம்பாதிக்க மாட்டார்கள். அவர்களுக்கு யூதாசைப் போல பணத்திலேயே குறி இருக்கும். சபைப் பணத்தையும் சரியானவழியில் செலவழிக்க அவர்களுக்கு எண்ணம் இருக்காது. தேவையான ஊழியத்துக்கு பணம் செலவழிக்க அவர்களுக்கு மனதிருக்காது. யூதாஸ் விலைமதிப்பில்லாத தைலப்புட்டியை விற்று அதில் ஒரு பங்கை தனக்கு உடமையாக்கிக் கொள்ள மனம் வைத்திருந்தான் என்பதை நினைத்துப்பாருங்கள். யூதாசைப் போன்ற இழிவான ஆதாயத்தை நாடுகிறவர்கள் உதவிக்காரர்களாக இருக்கக்கூடாது. நல்லொழுக்கமுள்ளவர்களாக உதவிக்காரர்கள் இருக்க வேண்டும். ஒழுக்கம் எல்லோருக்கும் அவசியம். அதிலும் சபை அதிகாரிகள் அதில் சிறப்பான பெயர்பெற்றவர்களாக இருக்க வேண்டும். நல்ல பேச்சு, அன்பு, நேர்மை, நேரம் தவறாமை (இது ஒழுக்கம் சம்பந்தமானது என்பது அநேகருக்குத் தெறியாது) எல்லோவற்றிலும் அவர்கள் சபையாருக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.*

*(2)* **விசுவாசம்** *(1 தீமோத். 3:8) - உதவிக்காரர்கள் "விசுவாசத்தின் இரகசியத்தை சுத்த மனச்சாட்சியில் காத்துக் கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டும்" என்று வேதம் சொல்கிறது. இதற்கு என்ன பொருள் என்று பார்ப்போம். முதலில் உதவிக்காரர்கள் நல்ல கிறிஸ்தவர்களாக வேதபோதனைகளில் தெளிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். "விசுவாசத்தின் இரகசியம்" என்பது கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்த தெளிவான போதனைகளைக் குறிக்கின்றது. சபைப்பணத்தையும், கட்டட வேலைகளையும், பார்த்துக்கொள்ளப்போகிற உதவிக்காரர்களுக்கு இதெல்லாம் எதற்கு? என்ற முறையில் சிந்தித்து பல சபைகள் தவறான மனிதர்களை உதவிக்காரர்களாக நியமித்து இன்று கையைக் கடித்துக்கொண்டிருக்கின்றன. சபையின் காரியங்களை பொறுப்பாக கவனிக்கப் போகிறவர்களுக்கு சத்தியத்தில் உறுதி இருப்பது அவசியம். நாம் விசுவாசிக்கும் சத்தியம் என்ன? என்பது உதவிக்காரர்களுக்கு தெளிவாக தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் இறையியல் கல்லூரிகளுக்குப் போயிருக்கத் தேவையில்லை. ஆனால், கிறிஸ்து யார்? இரட்சிப்பின் மகிமை என்ன? கிறிஸ்து நமக்காக சிலுவையில் எதைச் செய்தார்? அவருடைய சபையின் மகிமை என்ன? அந்தச் சபை இந்த உலகில் செய்ய வேண்டிய பெரும்பணி என்ன? கர்த்தர் தந்துள்ள பத்துக்கட்டளைகளின் தன்மை என்ன? என்பதுபோன்ற வேத இரகசியங்களில் அவர்களுக்கு தெளிவான அறிவு இருக்க வேண்டும். இவற்றில் ஞானமில்லாத உதவிக்காரர்கள் விசுவாசத்தோடும், உண்மையோடும் கர்த்தருக்காக பணி செய்ய முடியாது.*

*மேலும் 1 தீமோத். 3:8, உதவிக்காரர்கள் "விசுவாசத்தின் இரகசியத்தை சுத்தமான மனச்சாட்சியுடன் காத்துக்கொள்ள வேண்டும்" என்கிறது. உதவிக்காரர்களுடைய மனச்சாட்சி சுத்தமாக இருக்க வேண்டும். இந்த வேத இரகசியங்களை அவர்கள் உண்மையிலேயே விசுவாசிக்கிறவர்களாகவும், அவற்றிற்காக உயிரையே கொடுப்பவர்களாகவும் இருக்க வேண்டும். இன்று சபைகளில் உதவிக்காரர்களாக இருப்பவர்களுக்கு இத்தகைய மனச்சாட்சியோ, வேதஅறிவோ இல்லாமலிருக்கிறது. பெருமைக்காக பலர் இந்தப்பதவியில் நுழைந்திருக்கிறார்கள். கர்த்தரின் வருகையின்போது அவர்களுக்கு நிச்சயம் தண்டனை காத்திருக்கிறது. அவர்களை நியமித்த சபைகளும் கர்த்தருக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும். சீர்திருத்த சபைகள் உதவிக்காரர்கள் விசுவாச அறிக்கையையும், வினாவிடைப்பாடங்களையும் படித்து அவற்றில் ஞானமுள்ளவர்களாக இருக்கிறவர்களாக பார்த்துக்கொள்ள வேண்டும். வேதசத்தியங்களில் வாஞ்சை இல்லாத உதவிக்காரர்கள் வேபூர்வமாக சபைக்காரியங்களை எப்படிச்செய்ய முடியும்? சில போதகர்கள் தமக்கு தலையாட்டிப் பொம்மைகள் தேவையென்று சிலரை உதவிக்காரராக நியமித்திருக்கிறார்கள். வேறுசிலர் சபையில் பணக்காரர்களாகவும், பெரிய மனிதர்களாகவும் இருந்த காரணத்திற்காக இந்தப் பதவிக்கு வந்திருக்கிறார்கள். பாட்டன், தாத்தா காலத்திலிருந்து ஒரு குடும்பம் சபையில் இருந்தது என்பதற்காக அதில் உள்ளவர்கள் உதவிக்காரர்களாகவும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இதெல்லாம் கர்த்தருடைய வழிகள் அல்ல. சபை இன்று எவ்வளவு மோசமான நிலமையில் இருக்கிறது என்பதற்கு இவையெல்லாம் உதாரணங்கள்.*

*(3)* **குடும்பம்** *(1 தீமோத். 3:11, 12) - உதவிக்காரர்களின் குடும்ப வாழ்க்கை கர்த்தரை மகிமைப்படுத்துவதாக இருக்க வேண்டும். சபைப் போதகர்களிடம் எதிர்பார்க்கப்பட்ட அதே சிறப்பான குடும்ப வாழ்க்கையை வேதம்*

*உதவிக்காரர்களிடமும் எதிர்பார்க்கிறது. உதவிக்காரர்கள் தங்களுடைய மனைவிமாருக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். பிள்ளைகள் பெற்றோரின் பேச்சைக்கேட்டு நடப்பவர்களாக இருக்க வேண்டும். வீடு சரியில்லாத உதவிக்காரர் சபையில் விசுவாசமாக வேலை செய்ய முடியாது. மனைவி, பிள்ளைகள் ஆராதனைக்கு சரியாக வராமலும், ஆலய வேலைகளில் அக்கறையில்லாதவர்களாகவும் இருந்தால் அது உதவிக்காரர்களுக்கு நல்லதல்ல. உதவிக்காரர்களின் மனைவிமார் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், பக்தி விருத்தியுள்ளவர்களாகவும், புறம்பேசாதவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். சபை அதிகாரிகளின் குடும்ப வாழ்க்கைக்கும், ஊழியத்திற்கும் பெருந்தொடர்பிருப்பதை வேதம் இதன் மூலம் சுட்டிக்காட்டுகிறது.*

## உதவிக்காரர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய முறை

*இன்று அநேக சபைகளில் உதவிக்காரர்கள் வேத முறைப்படி தெரிவு செய்யப்படுவதில்லை. உலகப்பிரகாரமான முறையில் சபை அதிகாரிகள் தெரிவுசெய்யப்படுகிறார்கள். எனக்குத் தெரிந்த ஒரு திருச்சபைப் பிரிவில் உள்ள சபைகளில் விசுவாசிகளாக இல்லாதவர்களையும் உதவிக்காரர்களாக தெரிவு செய்திருக்கிறார்கள். இதனால் அந்த சபைகள் இன்று ஆத்மீக பலத்தை இழந்து மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கின்றன. வேதம் சொல்கிறபடி நடந்தால் இந்தக்காலத்தில் ஊழியமே செய்யமுடியாது என்று ஒரு சபையைச் சேர்ந்த உதவிக்காரர் என் காதுபட சொல்லியிருக்கிறார். இதெல்லாம் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் சபை அதிகாரிகள் எந்தளவுக்கு ஆத்மீக பலத்தையும், ஞானத்தையும் கொண்டிராதவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கான சில உதாரணங்கள்.*

*உதவிக்காரர்களாக எவரையும் அவசரப்பட்டும், சபை வேலை செய்ய எவராவது தேவை என்ற எண்ணத்திலும், உலக வழக்கத்தைப் பின்பற்றியும் நியமித்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் வேதம் அவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய முறைகளை நமக்கு விளக்குகிறது. மறுபடியும் நாம் அப்போஸ்தலர் 6, 1 தீமோத்தேயு 3 ஆகிய வேதபகுதிகளை ஆராய வேண்டும். இப்பகுதிகள் உதவிக்காரரை எப்படித் தெரிவு செய்ய வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை விளக்குக்குகின்றன. இவற்றை நான் படிமுறையாக பின்வரும் முறையில் குறிப்பிட விரும்புகிறேன்:*

*(1) சபைப்போதகர்களும், மூப்பர்களும் உதவிக்காரர்களாக நியமிக்கப்பட வேண்டியவர்களை சபைக்கு அறியத்தர வேண்டும். - அப்போஸ்தலர் நடபடிகள் 6 ம் அதிகாரத்தில் இதை நாம் பார்க்க முடிகிறது. உதவிக்காரர் சபைக்குத் தேவை என்ற எண்ணம் ஆத்துமாக்களுக்கு முதலில் தோன்றவில்லை. அத்தகைய திட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் அப்போஸ்தலர்களே. அப்போஸ்தலர்களே உதவிக்காரர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளைக் குறிப்பிட்டு சபையில் அத்தகைய மனிதர்கள் இருக்கிறார்களா என்று பார்க்கச் சொன்னார்கள். அப்படித் தகுதியுள்ள மனிதர்களை நீங்கள் ஆராய்ந்து அங்கீகரிக்கும்போது அவர்களை நாங்கள் அப்பதவிக்கு நியமிப்போம் (அவர்களை இந்த வேலைக்காக நாங்கள் ஏற்படுத்துவோம்) என்று அப்போஸ்தலர்கள் சொல்லியிருப்பதைக் கவனிக்கவும். ஆகவே, உதவிக்காரரை நியமிக்கும் பணி இன்று அப்போஸ்தலர்களிடம் இருந்து சபை மூப்பர்களுக்கு வந்திருக்கின்றது.*

*(2) சபை அங்கத்தவர்கள், மூப்பர்கள் தேரிந்தெடுத்திருப்பவர்களை வேத அடிப்படையில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் (அப்போஸ். 6:3; 1 தீமோத். 3:10) - சபை மூப்பர்கள் (இது போதகர்களையும் உள்ளடக்கியது) சபையில் உதவிக்காரராக இருப்பதற்கு தகுதியானவர்கள் யார் என்று கூர்ந்து கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதற்கு அவர்கள் சபையின் துணையையும் நாடலாம். வருடாவருடம் அத்தகைய தகுதி உள்ளவர்களை மூப்பர்களுக்கு அறியத்தரும்படி சபை அங்கத்தவர்களைக் கேட்கலாம். ஆனால், இறுதி முடிவு மூப்பர்கள் கரத்திலேயே இருக்கிறது என்பதை சபையார் உணர வேண்டும். இத்தெரிவில் போட்டி, பொறாமைக்கு இடமில்லை. இது கர்த்தரின் ஊழியம் சம்பந்தமான காரியம். உதவிக்காரர்கள் முன்னதாக சோதித்துப் பார்க்கப்பட வேண்டும் என்று 1 தீமோத்தேயு 3:10 சொல்வதைக் கவனியுங்கள். இவ்வாறாக மூப்பர்கள் கவனித்து தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை அவர்கள் சபைக்கு முறையான ஒரு சபைக்கூட்டத்தில் அறியத்தர வேண்டும். (இதெல்லாம் முறையாக அங்கத்தவர்களையும், சபை சட்டவிதிகளையும், கொண்டமைந்த சபைகளுக்கே பொருந்தும். சபை அங்கத்துவமோ, சட்ட விதிகளோ இல்லாது சபை என்ற பெயரில் கூடிவரும் கூட்டங்களுக்கு இவை பொருந்தாது. ஏனெனில் அவற்றை நாம் வேதபூர்வமான சபைகளாக அங்கீகரிக்க முடியாது.) அதுமட்டுமல்லாமல், உதவிக்காரர்களாவதற்கு தகுதியுள்ளவர்களாக பெயர்குறிப்பிடப்பட்டவர்களைப்பற்றி சபை சிந்தித்து ஆராய மூப்பர்கள் அவர்களுக்கு குறிப்பிட்ட கால தவணையும் கொடுக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றோ, இரண்டோ மாதங்கள். இந்தக் காலதவணையில் சபை அங்கத்தவர்கள் ஜெபத்தோடு பெயர் குறிப்பிடப்பட்டவர்களுக்கு உதவிக்காரராகும் தகுதி உண்டா என்று வேதஅடிப்படையில் சிந்திக்க வேண்டும். இப்படிச் செய்யும்போது சபையார் தன்னலமில்லாதவர்களாக, தேவ பயத்தோடு அந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டும். இந்தக்குறிப்பிட காலப்பகுதியில் எவர்மீதாவது பெரும் சந்தேகமிருந்தால் அதை மூப்பர்களுடைய கவனத்திற்கு சபையார் கொண்டு வரலாம். அது மூப்பர்கள் அவர்களைப் பற்றி மேலும் ஆராய துணை செய்யும்.*

*(3) சபை மூப்பர்கள் உதவிக்காரர்களை நியமிக்க வேண்டும் - உதவிக்காரர்களாக நியமிக்கப்பட பெயர்குறிப்பிடப்பட்டவர்களை சபையார் ஆராய்ந்து பார்ப்பதற்காக கொடுக்கப்பட்ட காலப்பகுதி நிறைவேறியவுடன், பெயர் குறிப்பிடப்பட்டவர்களில் எவர் மேலும் எந்தவிதமான தகுதிக்குறைகள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தால் மூப்பர்கள் சபை அங்கத்தவர்களை குறிப்பிட்ட ஒரு நாளில் கூட்டி உதவிக்காரர்களை முறையாகத் தெரிவு செய்ய வேண்டும். தெரிவு செய்யப்பட்டவர்கள் வேறு ஒரு நாளில், விசேட ஆராதனைக்கூட்டத்தில் எல்லோருக்கும் முன்பாக அங்கீகரிக்கப்பட்டு உதவிக்காரர்களாக நியமிக்கப்பட வேண்டும். இந்தக்கூட்டத்தில் உதவிக்காரர் பற்றிய பிரசங்கத்தோடு, மூப்பர்கள் கைவைத்து உதவிக்காரர்களுக்காக ஜெபம் செய்து அவர்களை உதவிக்காரர்களாக நியமிக்க வேண்டும். இந்நாளில் உதவிக்காரர்கள் சபை முன் உறுதிமொழி எடுத்துக் கொள்வதும் அவசியம். இந்தவிதமாக உதவிக்காரர்கள் தெவிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட வேண்டும்.*

## உதவிக்காரர்களின் பணி

*உதவிக்காரர்கள் எத்தகைய பணிகளை செய்வதற்காக தெரிவு செய்யப்படுகிறார்கள் என்பதை நாம் ஆராய்வதும் அவசியம். இன்று பல சபைகளில்*

உதவிக்காரர்கள் போதகர்களைப் போல அதிகாரத்துடன் நடந்து கொள்கிறார்கள். போதகர்கள் மீது அதிகாரம் செய்யும் உதவிக்காரர்களும் பல சபைகளில் இருக்கிறார்கள். உதவிக்காரர்களின் தொல்லைகளினால் ஊழியம் செய்ய முடியாமல் துன்பப்பட்ட பல போதகர்களையும் நான் அறிவேன். இதற்கெல்லாம் காரணம் சபையில் உதவிக்காரர்களின் பணி என்ன என்பதும் அவர்களுக்கு உள்ள அதிகாரம் என்ன என்பதும் பலருக்குத் தெரியாததுதான். வேதத்தில் இதெல்லாம் தெளிவாக எழுதப்பட்டிருந்தபோதும் சபைகள் வேதத்தை புறக்கணித்து உலகப்போக்கைப் பின்பற்றத் தொடங்கியதாலும், ஆத்மீகபலமிழந்து வாழத்தொடங்கியதாலும் உதவிக்காரர்கள் சபைகளில் போதகர்களை உதைப்பதுதான் தங்கள் வாழ்க்கையின் இலட்சியம் என்று வாழத்தொடங்கிவிட்டார்கள்.

உதவிக்காரர் என்ற வார்த்தைக்கு கிரேக்கத்தில் ஊழியக்காரன் (Servant) என்பது பொருள். அதாவது, சேவகன் என்று அர்த்தம். உதவிக்காரர்களின் பணி சபையாருக்கு சேவகம் செய்வதுதான். சேவகன் எங்கும் அதிகாரம் செய்கிறவனாக இருக்கமாட்டான். அதேபோல் உதவிக்காரர்கள் சபை அதிகாரிகளின் ஒருவராக இருந்தாலும் சபையை ஆளும் அதிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அது போதகர்களுக்கு, அதாவது மூப்பர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. உதவிக்காரர்கள் போதகர்களின் வழிகாட்டுதலின்படி சபை நிர்வாகக்காரியங்களை விசுவாசத்துடன் செய்வதற்காக நியமிக்கப்படுகிறார்கள். ஆகவே, உதவிக்காரர்கள் போதகர்களைப்போலவும், மூப்பர்களைப்போலவும் சபையில் நடந்து கொள்ளக்கூடாது. ஆதி சபையில் (அப்போஸ். 6) ஆரம்பத்தில் உதவிக்காரர்கள் நியமிக்கப்பட்டபோது அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணி பந்தி விசாரணை செய்வது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அவர்களில் சிலர் பிரசங்கம் செய்யக்கூடிய வல்லமையை உடையவர்களாக இருந்தபோதும் அது அவர்களுடைய அதிமுக்கிய பணியாக இருக்கவில்லை. கருணைக்குரிய காரியங்களைச் செய்வதற்காகவே அவர்களை அப்போஸ்தலர்கள் நியமித்தார்கள். அதுவும் அப்போஸ்தலர்களின் மேற்பார்வையில் அவர்கள் அந்தக்காரியங்களை செய்யவேண்டியிருந்தது. போதகர்களுக்கும், உதவிக்காரர்களுக்கும் அப்படியொன்றும் வேறுபாடு இல்லை என்று சொல்பவர்களுக்கு வேதசத்தியமே தெரியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

வேதத்தில் மூப்பர்களின் அதிகாரத்தைப் பற்றிப்பேசும் பின்வரும் வசனங்களை ஆராய்ந்து பாருங்கள். இது உதவிக்காரர்களுக்கு ஒருபோதும் பொருந்தாது. 1 தீமோத்தேயு 5:17 - "நன்றாய் விசாரணை செய்கிற (ஆளுகிற) மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப்பாத்திரராக எண்ண வேண்டும்" என்று பவுல் கூறியிருக்கிறார். இவ்வசனத்தில் காணப்படும் விசாரணை என்ற வார்த்தை ஆங்கில வேதத்தில் Rule என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இவ்வார்த்தை மூப்பர்களுடைய பணியைக்குறிப்பதாகும். இதற்கு "ஆளுதல்" என்று பொருள். மூப்பர்கள் சபையை திருவசனத்தைப் பிரசங்கிப்பதன் மூலமும், மேய்ப்பதின் மூலமும் ஆள வேண்டிய கடமைப்பொறுப்பைக் கொண்டிருக்கிறார்கள். அப்பணி வேறு எவருக்கும் கொடுக்கப்படவில்லை. இவ்வசனம் மூப்பர்களில் அந்தப்பணியை சிறப்பாக செய்கிறவர்களுக்கு சபை இரண்டு மடங்கு உதவித்தொகை கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும் என்று சொல்கிறது. ஆகவே, இவ்வசனத்தின்படி

சபையை ஆளும் பொறுப்பு போதகர்களுக்கும், மூப்பர்களுக்குமே கொடுக்கப்பட்டிருக்கிறது, உதவிக்காரர்களுக்கல்ல. இதே வார்த்தையே 1 தீமோத்தேயு 3:4, 5லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தன்னுடைய சொந்தக்குடும்பத்தை ஆள முடியாத ஒருவன் சபையை எப்படி ஆள முடியும் என்று எழுதப்பட்டிருப்பதை இந்த வசனங்களில் வாசிக்கிறோம். குடும்பத்தை ஆளுகிறவன் குடும்பத் தலைவனே. குடும்பத்தை ஆள்வதுபோல போதகன் சபையை ஆள வேண்டியவனாக இருக்கிறான்.

இன்னுமொரு வசனத்தையும் பார்ப்போம். எபிரேயர் 13:7 - "தேவ வசனத்தைப் போதித்து உங்களை நடத்தினவர்களை (ஆண்டவர்களை) நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப்பற்றுங்கள்" என்றிருக்கிறது. இங்கே "நடத்தினவர்கள்" என்றிருக்கும் வார்த்தை நாம் ஏற்கனவே 1 தீமோத்தேயு 3லும், 5 லும் பார்த்த அதே வார்த்தைதான். "ஆண்டவர்களை" என்று இது மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். இதே வார்த்தைதான் மறுபடியும் எபிபேயர் 13:17 லும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "உங்களை நடத்தினவர்களை" என்று இவ்வசனத்தில் வாசிக்கிறோம். இதற்கும் உங்களை ஆளுகிறவர்கள் என்பதே அர்த்தம். உங்களை ஆளுகிறவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படியுங்கள் என்கிறார் எபிரேயர் நிருபத்தை எழுதியவர்.

இவ்வசனங்களின் மூலம் போதகர்கள், மூப்பர்களின் பணி சபையை ஆள்வது என்று அறிந்து கொள்ள முடிகின்றது. உதவிக்காரர்களுக்கு அந்தப்பணி கொடுக்கப்படவில்லை. உதவிக்காரர்களைப்பற்றி விளக்கம் கொடுக்கும் வேதப்பகுதிகள், அவர்கள் மூப்பர்களின் மேற்பார்வையிலேயே செயல்பட வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்குகின்றன.

இனி, உதவிக்காரர்களின் பணி என்ன என்று பார்ப்போம். பந்தி விசாரிப்பு என்று பொதுவாக அப்போஸ்தலர் நடபடிகள் 6ம் அதிகாரம் விளக்குகிறது. அதாவது, சபையின் தேவைகளைக் கவனித்து அவற்றை நிறைவேற்றி வைப்பது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்கிறோம். அதற்குள் சகலவிதமான வேலைகளும் அடங்கும். சபைக்கட்டட வேலைகளைக் கவனித்தல், அதை நிர்வாகித்தல், சபைப் பணவிடயங்களை பொறுப்பாகக் கவனித்தல், போதகர்களின் தேவைகள் அனைத்தையும் பொறுப்போடு நிறைவேற்றுதல், சபையில் உதவி தேவைப்படுகிறவர்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுதல், சுவிசேஷ ஊழியம், சபை அமைத்தல் போன்ற ஊழியங்களுக்குத் தேவையான சகல நிர்வாக உதவிகளையும் செய்து கொடுத்தல் என்று இப்படிப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. இவையனைத்தையும் உதவிக்காரர்கள் மூப்பர்களுடைய ஆலோசனைப்படியும், அவர்களுடைய வழிநடத்தலின்படியும் நிறைவேற்ற வேண்டும். உதவிக்காரர்கள், மூப்பர்களுக்கு பதிலளிக்க வேண்டியவர்கள் என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. ஆதி சபையில் அப்போஸ்தலர்கள் தாங்கள் செய்துவந்த நிர்வாக வேலைகளை உதவிக்காரர்கள் செய்யும்படிக்கொடுத்தபோதும் அவ்வேலைகளுக்கான பொறுப்பையும் அவர்களிடம் தாரைவார்த்துக்கொடுத்துவிடவில்லை. அப்போஸ்தலர்களே ஆதிசபையில் உதவிக்காரர்களின் மேலதிகாரிகளாக இருந்தனர். அதேபோல், சபையின் சகல ஊழியங்களுக்கும் இன்று மூப்பர்களே பொறுப்பானவர்களாக இருப்பதால் (Responsible) உதவிக்காரர்கள் அவர்களுக்குக்கீழ் சபையில் சேவகர்களாக இருந்து கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும்.

# டர்டூலியனும், சிப்ரியனும்

ரோம சாம்ராஜ்யத்தில் ரோமுக்குப் பிறகு அலெக்சாந்திரியா முக்கிய இடத்தை வகித்தது என்றும், அலெக்சாந்திரியாவில் இருந்த திருச்சபையின் முக்கிய தலைவர்களைப்பற்றியும் இதுவரை பார்த்தோம். இனி வட மேற்கு ஆபிரிக்காவில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்த நகரான கார்த்தேஜில் இருந்த சபை பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். வட ஆபிரிக்காவுக்கு எப்போது கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்-பட்டது என்பதற்கான எந்தக்குறிப்புகளும் இல்லை. ஆனால், வரலாற்றின் பக்கங்களில் கி.பி 180ல் திடீரென ஒரு வல்லமையுள்ள, வளரும் சபை கார்த்-தேஜில் இருந்ததாக வாசிக்கிறோம். இச்சபையின் அங்கத்தவர்கள் அக்காலத்தில் தங்களுடைய விசுவாசத்திற்கெதிரான பல துன்பங்களையும் சந்தித்து வந்துள்ளனர். டர்டூலியன், சிப்ரியன், அகஸ்தீன் ஆகியோர்கள் இந்த சபையின் அங்கத்தவர்களாக இருந்து வருங்காலத்து மக்கள் அறிந்து கொள்ளும்படியாக தங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் மூலம் வரலாற்றில் ஒரு முத்திரையைப் பதித்துச் சென்றுள்ளனர். கார்த்தேஜிலிருந்தே முதன்முறையாக லத்தீனில் கிறிஸ்த இலக்கியம் உருவானது. அழகாகவும், பெரியதாகவும் இருந்த கார்த்தேஜ் நகரம் லத்தீன் கலாச்சாரத்தின் மையமாக விளங்கியது.

### டர்டூலியன் (கி.பி 160 – 225)

டர்டூலியன் கார்த்தேஜில் கி. பி. 155ம் 160ம் இடையில் பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் கர்த்தரை அறியாதவர்களாக இருந்தபடியால் டர்டூலியன் புறஜாதிக் கலாச்சாரத்தையும், கார்த்தேஜ் நகர மக்களின் வாழ்க்கை முறையையும் பின்பற்றி சுகபோகத்தில் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வந்தார். தன்னுடைய படிப்பை கிரேக்கமொழியில் தொடர்ந்த டர்டூலியன் ரோம கலாச்சாரத்தையும் படித்தார். இறுதியில் வக்கீலாகத் தேர்ச்சி பெற்றார். வக்கீல்படிப்பு டர்டூலியன் இறையியல் சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளவும், இறையியல் தர்க்கங்களில் ஈடுபடவும் பெருந்துணை புரிந்து திருச்சபையின் இறையியல் கோட்பாடுகளை வளர்த்துக் கொள்ள துணை செய்தது. டர்டூலியனே முதன் முதலாக “திரித்துவம்” என்ற வார்த்தையை தனது எழுத்துக்களில் பயன்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. டர்டூலியன் தனது 30வது வயதில் கர்த்தரை விசுவாசித்ததாக அறிகிறோம். அவர் திருச்சபையில் எத்தகைய பணிபுரிந்தார் என்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. ஜெரோம், அவர் சபை மூப்பராக இருந்தார் என்று எழுத, ஏனையோர் அவர் உபதேசியாக மட்டுமே பணிபுரிந்துள்ளார் என்று கூறுகின்றனர்.

கார்த்தேஜின் திருச்சபையும், அலெக்சாந்திரியாவில் இருந்த திருச்சபையும் எதிரும் புதிருமாகவே எப்போதும் செயல்பட்டன. கார்த்தேஜ் திருச்சபை தத்துவத்தை நிராகரித்து கிறிஸ்தவ போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. ஆனால், அலெக்சாந்திரிய சபையோ தத்துவத்தில் ஆர்வம் கொண்டு இறையியல் சிந்தனைகளை தத்துவங்கள் மூலமாக விளக்குவதில் ஆர்வம் காட்டியது.

டர்டூலியனின் வாழ்க்கையைப்பார்க்கும்போது அவருடைய சக்தி, எதையும் சாதிக்க வேண்டும் என்ற பேரார்வம் ஆகியவற்றைப்பார்த்து நம்மால் வியந்து நிற்கவே முடிகின்றது. அவருடைய பிரமிக்கத்தக்க வரங்களும், திறமைகளும் கிறிஸ்தவத்திற்காகப் போராடுவதற்காகவே பயன்பட்டன. ரோம சாம்ராஜ்யத்தின் உயர் அதிகாரிகளை எதிர்த்துத் தாக்கிய டர்டூலியனின் தைரியம் அளப்பரியது. அவருடைய எழுத்தாக்கங்கள் எண்ணில் அடங்காதவை. அவற்றில் முப்பது ஆக்கங்களும் வேறு சிலவும் நம்மை வந்தடைந்துள்ளன. கி. பி. 197ல் அவர் எழுத்திய Apology யே அவர் எழுதிய அனைத்திலும் சிறப்பானது. இந்நூலில், கிறிஸ்தவத்திற்காக வாதாடிய எவரும் இதுவரை சிந்தித்திராத வகையில் பல வாதங்களை ஒரு வக்கீலுக்கே உரிய திறமையுடன் டரிடூலியன் எழுத்தில் வடித்திருந்தார்.

அவர் எழுதிய De Praescriptione என்ற நூல் தேவையற்ற முரண்பாடுகளை ஏற்படுத்திய ஒரு நூலாக இருந்தது. டர்டூலியன் இதை கிறிஸ்தவத்திற்கு எதிரான நொஸ்டிசிஸப்போக்குடையவர்களுக்கும், ஏனைய வேத விரோதிகளுக்கும் எதிராகவே எழுதிய போதும் அவருடைய வாதங்கள் எல்லைமீறிப்போய் கிறிஸ்தவ சபைக்கே பின்பு ஆபத்தானவையாக மாறின. இந்நூலில் டர்டூலியன், சத்தியம் திருச்சபையிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று வாதாடினார். ஆகவே, அவரைப்பொறுத்தவரையில் வேத விரோதிகளுடன் சத்தியத்தைப் பற்றிய வாதப்பிரதாபங்களை வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. திருச்சபை மட்டுமே சத்தியத்தை அறிந்திருப்பதால், அது மட்டுமே சரியான பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறது என்றார் டர்டூலியன். இது மிகவும் ஆபத்தான ஒரு போதனை. இதுவே பின்பு சபை தவறான போக்கில் போவதற்கும் வழி வகுத்தது. டர்டூலியன், சபைப்பாரம்பரியம் எப்போதும் வேதத்திற்கு சமமானது என்று வாதாடியதால் இந்த விடயத்தில் அவர் ஐரேனியசின் சிந்தனைப்போக்கில் போக ஆரம்பித்தார். இதிலிருந்தே ரோமன் கத்தோலிக்க மதத்தின் போதனையான வேதமும், சபைப்பாரம்பரியங்களும் சம அதிகாரம் கொண்டவை என்ற போதனைக்கு வழிவகுக்கப்பட்டது.

டர்டூலியன் ஐரேனியஸைப் போலவே பாவத்தைப் பற்றிய கோட்பாட்டைக் கொண்டிருந்தபோதும், மனிதவர்க்கத்தைப் பாதித்துள்ள பாவத்தைக்குறித்து அதிக நாட்டம் காட்டினார். இதுபற்றி டர்டூலியன் சொன்ன கருத்துக்களே பின்பு அகஸ்தீன் கிருபையைப்பற்றியும், பாவத்தைப்பற்றியும் தெளிவாக எழுதுவதற்கு வழிவகுத்தது. டர்டூலியன் அகஸ்தீன் அளவுக்கு இந்தவிடயத்தில் தெளிவில்லாதிருந்தார். அவர் கிருபை இயற்கைக்கு எதிரானது என்று நம்பிய அதேவேளை அது கிரியைகளுக்கு எதிரானதல்ல என்றும் நம்பினார். இது இரட்சிப்பு கிரியைகளினால் கிடைக்கின்றது என்ற போதனைக்கு ஓரளவாவது வழிவகுத்தது.

டர்டூலியனே முதலில் திரித்துவம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியவர் என்று பார்த்தோம். திரித்துவத்தைப்பற்றி அவர் தந்த போதனைகளை திருச்சபையும் விரைவில் கிறிஸ்தவ போதனையாக ஏற்றுக்கொண்டது. திரித்துவத்தைப் பற்றிய அடிப்படைப்போதனைகளை டர்டூலியன் முறையாக விளக்க முயற்சித்தபோதும், குமாரன் நித்தியத்திலிருந்தே பிதாவிற்கு குமாரனாக தனித்துவத்தோடு இருந்ததை டர்டூலியன் ஏற்றுக்கொள்ளவில்லை. உலகம் உருவாக்கப்படுவதற்கு சில காலத்துக்கு முன்பே இத்தன்மையைக் குமாரன் அடைந்தார் என்றும் அதற்கு முன்பு அவர் பிதாவில் தனித்தன்மையோடு

இருக்கவில்லை என்றும் விளக்கினார். இதுபற்றி அவர் ஒரிகன் அளவுக்கு தெளிவுபெற்றிருக்கவில்லை. திரித்துவத்தை விளக்கியதுபோலவே கிறிஸ்துவைப்பற்றியும் டர்டூலியன் விளக்கினார். கிறிஸ்து பூரணமாக கர்த்தராகவும், மனிதனாகவும் இந்த உலகத்தில் ஒரே தோற்றத்தில் இருந்தார் என்று டர்டூலியன் விளக்கினார். டர்டூலியனின் திரித்துவம் மற்றும் கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய போதனைகளை சில மாற்றங்களுடன் மேற்கிலிருந்த இலத்தீன் பேசிய திருச்சபை ஏற்றுக்கொண்டது. இதனால் நான்காம் நூற்றாண்டில் ஏரியன் திரித்துவத்தைப்பற்றிய தவறான போதனைகளைக கொடுத்தபோது அதைத் தீவிரமாக இந்தத்திருச்சபையால் எதிர்த்து நிற்க முடிந்தது.

டர்டூலியன் கிறிஸ்தவர்கள் படைகளில் சேர்வதை விரும்பவில்லை. அத்தோடு இரண்டாவது தடவை எவரும் திருமணம் செய்வதையும் எதிர்த்தார். அவர் சுகபோகங்களைத்துறந்த துறவிபோல் வாழ்வதில் நாட்டம் காட்டினார். தியெட்டர்களுக்கும், களியாட்டக்கூட்டங்களுக்கும் எவரும் போவதைக் கடுமையாக எதிர்த்தார். கடுமையான தோற்றத்தையும், சோகம் சொட்டும் முகத்தையும் வைத்திருந்த டர்டூலியன் மொன்டனிசத்தைப் பின்பு பின்பற்றியதில் ஆச்சரியமில்லை. டர்டூலியன் பொதுவாக பெரும் திறமைசாலி-யாகவும், ஞானமும் உள்ள மனிதராக இருந்தபோதும், ஆபத்தான பல தவறுகளையும் தன்னில் கொண்டிருந்தார். டர்டூலியனின் மொன்டனிசக் கொள்கைகள் அவருக்குப்பின் வந்த சபைப்பிதாக்களால் அவரை சந்தேகக் கண்ணோடு பார்க்க வைத்தது. அவர்கள் டர்டூலியனை ஒரு வேத விரோதியாகவே பார்த்தனர். டர்டூலியன் கி. பி 225ல் அமைதியாக மரித்தார்.

## சிப்ரியன் (கி.பி. 200 – 258)

டர்டூலியனின் காலத்திலும் அவருக்குப்பிறகும் கிறிஸ்தவம் வட மேற்கு ஆபிரிக்காவில் துரிதமாகப் பரவியது. ரோம சக்கரவர்த்திகளான டேசிய-ஹஸ¬ம் (கி. பி. 249-51), வெலேரியனும் (கி. பி. 253-60), கிறிஸ்தவர்களுக்கு எதிரான பயங்கரத் துன்பங்களைக் கட்டவிழ்த்துவிட்டகாலத்தில் கிறிஸ்தவம் பலமாக வட மேற்கு ஆபிரிக்காவில் நிலைத்துவிட்டது. இக்காலத்தில் கார்த்தே-ஜின் திருச்சபை பிசப்பாக சிப்ரியன் இருந்தார்.

சிப்ரியன் கி. பி. 200ம் ஆண்டளவில் கார்த்தேஜில் பிறந்தார். அவர் உயர் குலத்தில் பிறந்து செல்வந்தராகவும் இருந்தார். அவர் கிறிஸ்துவை விசுவாசிப்ப-தற்கு முன்பு வக்கீலாக தொழில் செய்ததோடு பேச்சில் சிறந்தவராக, பேச்சுக்கலைப் பேராசிரியராகவும் இருந்தார். புறஜாதி மதங்களில் நம்பிக்கையிழந்து சமாதானத்தைத் தேடிய சிப்ரியன் கி. பி. 246ல் கிறிஸ்துவை விசுவாசித்தார். உடனடியாக தன்னுடைய செல்வங்களை வறுமையில் வாடுபவர்களுக்கு அள்ளியளித்தார். கிறிஸ்துவை விசுவாசித்த இரண்டு மூன்று வருடங்களுக்குள்ளாகவே அவருடைய கனிவும், நன்னடத்தையும், அமைதித்தன்மையும் கொண்ட பல நல்ல குணங்களும் கார்த்தேஜின் பிசப்பாக அவரைத் தெரிவு செய்ய வைத்தன.

சிப்ரியனை மிகவும் கவர்ந்தவர் டர்டூலியனே. சிப்ரியன் டர்டூலியனைத் தனது தலைவன் என்று அழைப்பதோடு அவருடைய நூல்களையும் ஒவ்வொரு நாளும் வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். (இக்காலத்தில் டர்டூலியனின் எழுத்துக்கள் இன்னும் கத்தோலிக்க சபையால் நிராகரிக்கப்படவில்லை). சிப்ரியன் ஒரிகனைவிட வேதத்தை எழுத்துபூர்வமாக விளங்கிக்கொள்வதில்

*அதிக அக்கறை கொண்டிருந்தார். அவர் பழைய ஏற்பாட்டைப் புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் விளக்க முயன்றார். புதிய ஏற்பாட்டு சபைத்தலைவர்களை பழைய ஏற்பாட்டு ஆசாரியர்களுக்கு ஒப்பிட்டும், திருவிருந்தை பழைய ஏற்பாட்டுப் பலிகளுக்கும் ஒப்பிட்டார். திருவிருந்தின் மூலம் கிறிஸ்து ஒவ்வொருமுறையும் பலியிடப்படுகிறார் என்று சிப்ரியன் போதிக்கவில்லை. ஆனால், திருவிருந்தின்போது தன்னுடைய மக்களைக் கிறிஸ்து தனது பிதாவின் முன் சமர்ப்பிக்கிறார் என்று போதித்தார். அத்தோடு அவர் திருவிருந்தின் மூலம் இறந்துபோன விசுவாசிகளும் ஏதோ ஒருவிதத்தில் பயனடைவதாக விளக்கினார். இது நிச்சயம் பின்பு ரோமன் கத்தோலிக்க மதம் பின்பற்றிய ஒரு தவறான போதனை. இவ்வாறாக ரோமன் கத்தோலிக்க மதத்தின் போதனைகளுக்கு இக்காலத்திலேயே தொடர்ந்து வித்திடப்பட்டு வந்துள்ளதைக் கவனிக்க முடிகின்றது.*

*திருச்சபைத் தலைவர்கள் பற்றிய சிப்ரியனின் போதனைகள் பின்பு சபைத்தலைமை மோசமான நிலைக்குப்போகக்காரணமாக இருந்தன. சிப்ரியனின் விளக்கத்தில் அப்போஸ்தலர்களுக்கும், பிசப்புக்களுக்கும் எந்த-விதமான வித்தியாசமும் இருக்கவில்லை. சிப்ரியனைப் பொறுத்தவரை பிசப்புக்கள் சபையில் ஒழுங்கு நடவடிக்கை கொண்டு வருவதில் அப்போஸ்தல அதிகாரத்தைக் கொண்டிருந்தார்கள். அத்தோடு அவர்கள் மட்டுமே திருமுழுக்கையும், திருவிருந்தையும் அளிக்கக்கூடிய இயற்கையை மீறிய அசாதரண வல்லமையையும் கொண்டிருந்தனர் என்றார் சிப்ரியன். இக்காலத்தில் இவற்றைக்குறிக்க* Sacrament *என்ற வார்த்தை அதிகம் பயன்படுத்தப்பட்டது. சிப்ரியனின் போதனைகள் நிச்சயம் பிசப்புக்களை அப்போஸ்தல அதிகாரம் உள்ளவர்களாக மாற்றியது. அத்தோடு ரோமில் இருந்த பிசப்புக்கு விசேட முக்கியத்துவமும், சலுகையும் அளிக்கப்பட வேண்டும் என்றும் சிப்ரியன் கருதினார். பேதுரு ரோமின் முதல் பிசப்பாக இருந்தார் என்று இவர் நம்பியதே இதற்குக் காரணம். இருந்தாலும், ரோமின் பிசப் மற்ற பிசப்புக்களின் மீது அதிகாரம் கொண்டவராகவோ அல்லது சகல அதிகாரம் கொண்ட தெய்வீகத் தன்மையுடையவராகவோ சிப்ரியன் கருதவில்லை.*

*சிப்ரியன் சபையைப்பற்றி விளக்கும்போது, சபையை விட்டு விலகுவது பாவம் என்று குறிப்பிட்டார். கத்தோலிக்க சபை மட்டுமே அப்போஸ்தல சபை என்றும், ஏனையதெல்லாம் போலிகள் என்றும் விளக்கினார். பரிசுத்த ஆவி கத்தோலிக்க சபையில் மட்டுமே இருந்தாகக் கூறினார். சபைக்கு வெளியில் இரட்சிப்புக்கு வழியில்லை என்பது சிப்ரியனின் போதனையாக இருந்தது. கத்தோலிக்க சபைக்கு வெளியில் எவராலும் கொடுக்கப்படும் திருமுழுக்கும் பயனற்றது என்று விளக்கினார். இதனால் ரோம பிசப்புக்கும் இவருக்கும் பெரும் கருத்து வேறுபாடும், போராட்டமும் ஏற்பட்டது.*

*258ல் வெலேரியனின் கொடுமைகள் ஆரம்பித்த காலத்தில் சிப்ரியன் கார்த்தேஜில் இருந்து 40 மைல்களுக்கு அப்பால் தலைகொய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். சிப்ரியனின் சபைத்தலைவர்கள் பற்றிய போதனைகள் திருச்சபையை பின்பு பிசப்புக்களின் சபையாக மாற்றத் துணை செய்தன. சிப்ரியன் எல்லா பிசப்புக்களும் சமம் என்று கூறியிருந்தாலும் பின்பு அது கைவிடப்பட்டு ரோம பிசப்பே எல்லோருக்கும் தலைவர் என்ற கொள்கை உறுதிபெறத் தொடங்கியது.*

# பாவ உணர்வு சொட்டும் கண்ணீர்த்துளிகள்

*சில கிறிஸ்தவர்கள் தாம் முதல் முதலாக சுவிசேஷத்தைக் கேட்ட உடனேயே தங்களுடைய பாவத்தை உணர்ந்து, கிறிஸ்துவின் அன்பின் மேன்மையை உணர்ந்து, மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசித்ததாகக் கூறுவார்கள். தங்களுடைய வாழ்க்கையில் திடீரென ஒரு திருப்பம் ஏற்பட்டு உடனடியாகவே இரட்சிப்பைக்குறித்த நிச்சயத்துவத்தை அடைந்ததாகக் கூறுவார்கள். அத்தகைய மனந்திரும்புதல் நிச்சயம் மறுபிறப்பின் அடையாள-மாக இருந்தபோதும், விசேஷமான சுவிசேஷ எழுப்புதல் காலங்களில் மட்டும்தான் இத்தகைய மனந்திருப்புதல்களைப் பெரும்பாலும் பார்க்கக்-கூடியதாக இருக்கும். பல கூட்டங்களில் போதகர்களோடு பேசி நான் சேகரித்த தகவல்களின்படி இன்றைக்கு நூற்றில் இரண்டு அல்லது மூன்று பேர்தான் சுவிசேஷத்தைக் கேட்ட அந்த நிமிஷமே மனந்திரும்பி இரட்சிப்பை அடைந்திருக்கிறார்கள். அநேகமானோர் உண்மையாக மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு முன்பாக பல தடவைகள் அதற்காக முயற்சி செய்ததாகக் கூறினார்கள். வேறு சிலர் தாம் உண்மையில் மனந்திரும்புதலாகிய அனுபவத்தைப் பெறுவதற்கு முன் மாதக்கணக்காக அத்தகைய முயற்சியில் ஈடுபட்டு சலித்துப் போய் இருந்திருப்பதாகக் கூறினார்கள்.*

*இதன்படிப்பார்த்தால் நிலைத்திருக்கக்கூடிய உண்மையான மனந்திரும்பு-தலாகிய அனுபவத்தை அடைந்த பெரும்பாலானோர் ஆண்டவரை விசுவாசிப்பதற்கு முன்பு சில நாட்களுக்கு அல்லது சில வாரங்களுக்கு ஏன், சில மாதங்களுக்குக்கூட ஜெபத்தில் தரித்திருக்க வேண்டியதாக இருந்திருக்கிறது. அவர்கள், இரட்சிப்பை அடையுமுன் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இரட்சிப்பு நமக்குக் கிடைக்குமா? கிடைக்காதா? என்ற ஆதங்கத்தோடும், தவிப்போடும் பல இடர்களைக்கடந்து வர வேண்டியிருந்திருக்கிறது.*

*இதன்படிப் பார்க்கும்போது இன்று பயன்படுத்தப்பட்டுவரும் பல நவீன சுவிசேஷ உத்திகள், மனந்திரும்புதல் உடனடியாகவும், சடுதியாகவும் நடக்கக்கூடியது என்ற அடிப்படையில் உருவானவையாக இருப்பது ஆச்சரியத்தை அளிக்கிறது. இன்றைய நவீன சுவிசேஷ உத்திகளும், அர்ப்பண அழைப்பு முறைகளும், ஆண்டவரைத்தேடி இரட்சிப்பின் வாசலைத்தாண்டத் துடித்துக்கொண்டு, அதற்கான ஆலோசனைகளை நாடி நிற்பவர்களுக்கு எந்த ஆலோசனையையும் தர முடியாதவையாக இருக்கின்றன.*

*உண்மையில் மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒவ்வொருவரும் அந் நிமிடமே இரட்சிக்கப்படுவார்கள் என்ற கர்த்தரின் வாக்குறுதியை நாம் நிச்சயம்*

(இந்த ஆக்கத்தின் ஆங்கில மூலத்தை எழுதிய டாக்டர் பீட்டர் மாஸ்டர்ஸ், இங்கிலாந்தில் Metropolitan Tabernacle எனும் சபையின் போதகராக இருந்து வருகிறார். இது அந்த சபை வெளியிடும் Sword and Trowel என்ற பத்திரிகையில் வெளிவந்தது. ஆசிரியரின் அனுமதியுடன் இதைத் தமிழில் தந்திருக்கிறோம்.)

ஆத்துமாக்களின் முன் வைக்க வேண்டும். அதேவேளை, ஆண்டவராகிய கிறிஸ்துவின் வார்த்தைகளான, உன்னுடைய முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும் அவரைத்தேடினால் அவரைக்கண்டு கொள்வாய் என்ற வார்த்தைகளையும் அவர்கள் முன் வைப்பது அவசியம். சுவிசேஷத்தைக் கேட்கும் அநேகர் கேட்ட உடனேயே மனந்திரும்பி சரியான முறையில் கிறிஸ்துவை விசுவாசித்துவிட மாட்டார்கள் என்பது மறைக்கமுடியாத ஒரு உண்மை. அவர்களுக்கு நாம் மேலும் வழிகாட்டி, ஆர்வமூட்டி, ஆலோசனை சொல்லி, உண்மையாகவே ஆண்டவரிடம் அவர்கள் ஆத்மசுத்தத்தோடு வரும்வரை உதவ வேண்டியது அவசியமாகிறது.

இந்த ஆக்கம், கர்ததரைத் தேடுகிற ஒருவரின் மனந்திரும்புதலைப் பாதித்து அவருடைய விசுவாசத்தைக் குழப்பிவிடக்கூடிய அவருடைய தவறான எண்ணங்களை சுட்டிக்காட்டுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. கர்த்தரைத் தேடுகிற ஆத்துமாக்களை நாம் சரியானவிதத்தில் அவரிடம் போவதற்கு எப்படி உதவலாம்? இனி நாம் பார்க்கப்போகின்ற இடர்களில் இருந்து ஆத்துமாக்கள் தங்களைக் காத்துக்கொள்ளக்கூடிய ஆலோசனைகளை சுவிசேஷப் பிரசங்கங்களில் நாம் கொடுக்க வேண்டும். மனந்திரும்பி-யிருக்கிறோம், ஆனால் இன்னும் ஆண்டவரைத் தெரியவில்லையே என்று குழம்பிப்போயிருக்கும் ஆத்துமாக்களுக்கும் இவற்றை நாம் கனிவோடு சொல்லிக்கொடுத்து உதவ வேண்டும்.

இதற்காக குழம்பிப்போய் நிற்கும் ஆத்துமாக்களைப்பார்த்து, மனந்திரும்பு-தலின்போது நீங்கள் எந்தெந்தப் பாவங்களில் இருந்து மனந்திரும்பவில்லை என்று கேட்கவேண்டுமென்று நாம் சொல்லவில்லை. அப்படி நேரடியாகக் கேட்காமல், கர்த்தரை விசுவாசிக்கும் காரியத்தில் அவர்கள் விடும் தவறுகளைச் சுட்டிக்காட்டும்விதமாக சில பொதுவான ஆலோசனைகளை அவர்களுக்கு கொடுக்க வேண்டும். அவற்றைக் கேட்கும் ஆத்துமாக்கள் அவற்றில் தங்களுடைய அனுபவத்திற்கும், சூழ்நிலைக்கும் பொருந்திவருகிற உண்மை-களைப் பயன்படுத்திக்கொண்டு தவறுகளைத் தங்கள் வாழ்க்கையில் தவிர்த்துக்கொள்ளலாம். அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்பதே நம்முடைய நோக்கம். அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடும் எண்ணம் நமக்கில்லை.

ஆண்டவரைத்தேடிக்கொண்டிருப்பவர்களின் தனிப்பட்ட பாவங்களைக்-குறித்து நாம் எதுவும் கேட்கக்கூடாதென்பதற்கு ஒரு முக்கிய காரணமிருக்கிறது. அப்படிக் கேட்பதால் அந்த ஆத்துமா தன்னுடைய பாவங்களை இன்னொருவர் முன் அறிக்கையிடுவதன் மூலம், உண்மையிலேயே பாவ உணர்வு தோன்றும்போது ஒருவரில் ஏற்படக்கூடிய வலியின் பாதிப்பை அனுபவிக்க முடியாமல், கர்த்தரை நாடி மனந்திரும்ப வேண்டும் என்ற பாரத்தையும் இழந்து போகலாம். கர்த்தரைத் தேடுகிற ஒரு ஆத்துமா தன்பாவங்களை நம்மிடம் அறிக்கையிட முன்வந்தால், அதைச் செய்யவிடாது நாம் அவரை நேரடியாக கர்த்தரிடம் போய் முறையிடும்படி வற்புறுத்த வேண்டும். எப்போதுமே நாம் ஒரு ஆத்துமாவின் தனிப்பட்ட பாவங்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. தலைமை ஆசாரியராக இருக்கிற கிறிஸ்துவிடம் மட்டுமே அவரைத் தேடுகிறவர்கள் போக வேண்டும் என்பதே நமது சுவிசேஷ செய்தியாக இருக்க வேண்டும்.

ஆத்துமாக்கள் தாங்கள் செய்திருக்கும் பாவங்களை விபரிக்கும்போது

*அதைக்கேட்பதால் தங்களுக்கு ஒருவித ஆத்மீகதிருப்தியும், தாம் முக்கியமான-வர்கள் என்ற எண்ணமும் ஏற்பட்டிருப்பதாக சில சுவிசேஷ ஊழியக்காரர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் ஆத்துமாக்கள் மனந்திரும்புவதற்கு இடையூறு ஏற்படுவதோடு அவர்கள் ஆண்டவரைவிட்டே ஓடிவிடும் நிலையும் ஏற்படும். அவ்வாறு ஒரு பிரசங்கியிடமோ, ஊழியக்காரரிடமோ தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்ட ஒருவர் அச்செயலுக்காக பின்பு வருத்தப்பட நேரிடுவதோடு, சபைக்கு மீண்டும் வருவதற்கும் வெட்கப்படலாம். இவ்வாறு அறிவீனமாக ஆத்துமாக்கள் செய்திருக்கும் பாவங்களைப்பற்றி துருவித்துருவிக்-கேட்ட சுவிசேஷ ஊழியர்களிடம் அவற்றை அறிக்கையிட்டு அதனால் மனங்-குழம்பிப்போய் பல வருடங்கள் ஆத்மீக ஆர்வமே இல்லாமல் அலைந்து திரிந்தவர்களை நாமறிவோம்.*

*நாம் இனி விளக்கப்போகும், பலருடைய மனந்திரும்புதலில் காணப்படும் தவறான அம்சங்களைப்பற்றிய பட்டியலைப் படித்துவிட்டு, மனந்திரும்புதல் கிரியையின் மூலம் ஏற்படுகிறதென்றும், அதைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறதே! என்றும் சிலர் எண்ணிவிடக்கூடிய வாய்ப்பு உண்டு. ஆனால், உண்மை அதுவல்ல. மனந்திரும்புதல் கிரியைகளினால் ஏற்படுவதல்ல; அப்படியானதொன்றாக அதை மாற்றிவிடுவதும் நமது நோக்கமல்ல. சிலுவையில் மரணத்தின் மடியில் நின்று கொண்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன் சொன்னதுபோல், ஆண்டவரே நீர் உம்முடைய இராஜ்யத்தில் வருகின்றபோது என்னை நினைவுகூறும் என்ற சுருக்கமாக ஜெபத்தின் மூலம் மெய்யான மனந்திரும்புதலை வெளிப்படுத்தலாம். இருந்தாலும் ஆத்மீக வைத்தியர்களாகிய நாம் மனந்திரும்புதல் பற்றிய நடைமுறைக்குப் பொருந்துகிற தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். அது நம்முடைய பிரசங்கத்தையும், ஆத்மீக ஆலோசனையையும் வளப்படுத்தும்.*

*இன்றைய சுவிசேஷ ஊழியங்களில் செயற்கையான மனந்திரும்புதலே முக்கிய இடத்தைப் பெறுவதோடு, அதுவே சுவிசேஷ ஊழியத்தின் மிகப் பெருங்குறையாகவும் இருப்பதால்தான் இந்தத்தலைப்பில் நாம் எழுதத்துணிந்தோம். முதலில் நாம் சொல்லப்போகிறவற்றை சுருக்கமாக பட்டியலிட்டுத் தந்துவிட்டு பின்பு அதை விளக்க ஆரம்பிப்போம்.*

**(1) ஆண்டவரைத் தேடுகிறவனுக்கு பாவத்தைப்பற்றிய செயற்கையான எண்ணமே இருக்கிறது.**

(அ) அவனுக்கு மனந்திரும்புதலைப்பற்றிய பொதுவான அறிவு மட்டுமே இருக்கிறது.

(ஆ) தேடுகிறவன் வெளிப்புறமான பாவத்தை மட்டுமே பார்க்கிறான்.

(இ) அவன் ஒரிரு பாவங்களையும், தவறுகளையுமே அறிக்கை–யிடுகிறான்.

(ஈ) தான் செய்துள்ள நற்கிரியைகளைப்பற்றி பெருமையுடையவனாக இருக்கிறான்.

(உ) பாவத்தை அவன் வெறும் நோயாக எண்ணிக் கொண்டிருக்கலாம்.

(ஊ) பாவத்தை மறைக்க அவன் சாக்குப்போக்கு சொல்லலாம்.

(எ) கிறிஸ்துவை நிராகரிப்பதை மட்டுமே பாவமாக எண்ணிக்–கொண்டிருக்கலாம்.

(ஏ) யாருக்கும் தெறியாமலிருக்கும் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டியதில்லை என்ற தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கிறான்.

(2) ஆண்டவரைத் தேடுகிறவன் தன் நிலைக்காக வெட்கப்படுவதில்லை
(அ) மன்னிப்பைவிட ஏதாவதொரு நன்மையை மட்டுமே நாடுகிறவனாக இருக்கிறான்
(ஆ) நித்திய தண்டனையைக்குறித்து அவன் பயந்தாலும் அதற்காக வெட்டகப்படுவதில்லை
(இ) வெட்டகப்படுவதைவிட மன உறுத்தலை மட்டுமே கொண்டிருக்கிறான்

(3) மனந்திரும்புதல் கர்த்தரை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை
(அ) தேடுகிறவன் கர்த்தரிடம் வருத்தப்பட்டு வரவில்லை
(ஆ) தேடுகிறவன் கிறிஸ்துவின் துன்பங்களினால் அதிகம் பாதிப்படையவில்லை

(4) அடங்காக்குணம் இன்னும் ஆள்கின்றது
(அ) தேடுகிறவன் சில பாவங்களைத் தொடர்ந்து செய்ய விரும்புகிறான்
(ஆ) புதிய வாழ்க்கையில் பெருமளவுக்கு ஆர்வம் இல்லாமலிருக்கிறது
(இ) கிறிஸ்துவின் பூரண ஆளுகையை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை

## பொதுவான பிரச்சினை 1

## ஆண்டவரைத் தேடுகிறவனுக்கு பாவத்தைப் பற்றிய செயற்கையான எண்ணங்களே இருக்கிறது

### (அ) அவனுக்கு மனந்திரும்புதலைப்பற்றிய பொதுவானதும், தெளிவில்லாதது மான எண்ணங்களே இருக்கின்றன

*தேடுகிறவனுக்கு தொடர்ந்து பாவத்தைத்தின் அவலட்சனத்தைப்பற்றியும், அது எவ்வளவு மோசமானது என்பதும் தெரியாமலிருக்கலாம். சில வேளைகளில் சுவிசேஷப் பிரசங்கிகள் பாவத்தைப் பற்றிய பொதுவான விளக்கத்தை மட்டும் கொடுத்து அதன் கொடூரத்தன்மையை விளக்காமல் விடுவதால் கேட்கிறவர்களுக்கு தாம் கர்த்தருக்கு முன் எத்தனை பெரிய பாவிகளாக, குற்றஞுசாட்டப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பது தெரியாமல் போகிறது. பாவிகள் ஒட்டுமொத்தமாக தங்களுடைய பாவங்களை ஒவ்வொன்றாக அறிக்கையிட வேண்டு மென்று கர்த்தர் எதிர்பார்க்காவிட்டாலும், அவர்கள் தங்களுடைய இருதயம் மகாக்கேடுள்ளதும், திருக்குள்ளதுமாக இருக்கிறது என்பதை அறிக்கையிட்டு, தங்களுடைய வெளிப்படையான பாவங்களில் இருந்து உளபூர்வமாக மனந்திரும்ப வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். ஒருவன் தன்னுடைய பாவங்களை அலட்சிய மனப்போக்குடன் பொதுவான விதத்தில் அறிக்கையிடுவது மெய்யான மனந்திருப்புதலுக்கு அடையாளமல்ல. மனந்திரும்புதல் துள்ளியமானதும், தெளிவுள்ளதுமாகும். இதையே தாவீதின் மனந்திரும்புதலில் நாம் பார்க்கிறோம். தாவீதின் ஜெபத்தில் பாவத்தைக்குறித்த மூன்று முக்கிய அம்சங்களை அவதானிக்க முடிகின்றது.*

> "தேவனே, உமது கிருபையின்படி எமக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் **மீறுதல்கள்** நீங்க என்னை சுத்திகரியும். என் **அக்கிரமம்** நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் **பாவம்** எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து உமது கண்களுக்குமுன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்." (சங்கீதம் 51:1-4).

தாவீது அறிக்கையிட்ட பாவத்தின் மூன்று அம்சங்களாவன: மீறுதல், அக்கிரமம், பாவம் என்பவையாகும். பாவத்தைப் பற்றிய தெளிவான போதனையை அளிக்காமல் இருப்பதே இன்றைய நவீன சுவிசேஷ ஊழியத்தின் மிகப் பெருங்குறைபாடாக இருப்பதால்தான் இம்மூன்றைப்பற்றியும் நாம் விபரமாக விளக்குகிறோம்.

"மீறுதல்கள்" என்பதற்கான எபிரேய வார்த்தை கர்த்தருக்கெதிராக செய்யப்படும் எதிர்ப்புச்செயல்களைக் குறிக்கின்றது. நாம் அவருடைய நீதிப்பிரமாணங்களை உதறித்தள்ளிவிட்டு, நம்முடைய வாழ்க்கைக்கு நம்மையே அதிபதிகளாக்கிக்கொண்டு, கர்த்தருடைய அதிகாரத்தை அலட்சியப்படுத்தி அவருடைய நீதிச்சட்டங்களுக்கு விரோதமாக நடக்கிறோம். நாம் தன்னலத்தோடும், சுய சித்தத்தோடும் நடந்துகொள்ளும் ஒவ்வொரு நிமிடமும் கர்த்தருக்கு எதிராக நடந்து கொள்கிறோம். எனவேதான், தாவீது அவையெல்லாவற்றிலிருந்தும் தன்னைக்கழுவிச் சுத்திகரிக்கும்படி ஜெபித்தான். கர்த்தரைத் தேடி அலுத்துப்போய் நிற்கிற ஆத்துமா கர்த்தருக்கெதிராக எவ்வளவு தூரம் மீறுதல்களைச் செய்திருக்கிறோம் என்பதை உணர்கின்றதா? பாவத்தின் கோரத்தை விளக்கிச் சொல்வதற்காக ஒரு பிரசங்கி ஆத்துமாக்கள் ஆத்திரமடையக்கூடியவகையில் எதிர்மறைப்பிரசங்கம் செய்ய வேண்டிய அவசியமில்லை. அப்படி, விடாமல் வசைமாறிப்பொழியும் பிரசங்கியாக இல்லாமல் தெளிவாகவும், விசுவாசத்தோடும் அமைந்த, சுவையும், கனிவும் கலந்த பிரசங்கத்தை நம்மால் அளிக்க முடியும்.

பாவத்தைப் பற்றிய இன்னொரு அம்சம் "அக்கிரமமாகும்". இதற்கான எபிரேய வார்த்தைக்கு "கோணல்" என்று பொருள். நாம் பாவத்தின் காரணமாக வளைந்து கோணலாகிப்போயிருப்பதால் தொடர்ச்சியாக தன்னலமில்லாமலும், உண்மையோடும் நம்மால் இருக்க முடியவில்லை. தாவிது தனது ஜெபத்தில் தன்னைக் கழுவும்படியாக ஜெபிக்கிறான். இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேய வார்த்தை சரீரத்தைக் கழுவுவதற்காகப் பயன்படுத்தப்படும் வார்த்தையல்ல. அழுத்தமாக கறைகள் நிறைந்துள்ள ஒரு துணியை, அதன் கறையைப் போக்க அடித்துத் துவைத்துக் கழுவ வேண்டும் என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் வார்த்தையே இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. அக்கிரமம் என்பது மிக ஆழமாகப்பதிந்திருக்கும் கறையாகும். கர்த்தரைத்தேடுகிறவன் தனக்குள் இத்தகைய கோணல் தன்மைகாணப்படுகின்றது என்பதை உணர்ந்து அதிலிருந்து கழுவப்பட வேண்டும் என்று துடிப்போடு இருக்கிறானா?

பாவத்தின் மூன்றாவது அம்சத்திற்கு "பாவம்" என்றே பெயர். இதற்குப் பொருள் "குறிதவறுதல்" என்பதாகும். இது தன்னுடைய சிந்தனைகளினாலும்,

*செயல்களினாலும், பேச்சினாலும் கர்த்தருக்கு விரோதமாக நடந்து அவருடைய கட்டளைகளை மனிதன் மீறிப்போயிருக்கிறான் என்பதைக் குறிக்கிறது.*

*அத்தோடு, தாவீது இத்தனையும் துர்க்குணம் என்று கூறுகிறான். இதற்குப்பொருள் "அழிவு" என்பதாகும். பாவங்கள் கர்த்தருடைய கட்டளைகளை உடைத்தெறிந்து, அவருடைய உலகத்தைக் கறைபடுத்தி, தனியொருவனின் வாழ்க்கையை சீர்குழைத்து, ஏனையோரையும் தாக்கித் துன்பத்துக்குள்ளாக்குகின்றன. தாவீது இத்தகைய பாவங்களில் இருந்து விடுதலை அடைய வேண்டுமென்று துடிக்கிறான். அவற்றைப்பற்றிய குற்ற உணர்விலிருந்தும், நினைவுகளில் இருந்தும் விடுபடத்துடிக்கிறான். கர்த்தரை தேடுகிறவன் தன்னுடைய பாவங்களால் ஏற்பட்டுள்ள பாதிப்பின் அளவை ஓரளவுக்காவது உணர்ந்திருக்கிறானா?*

### (ஆ) தேடுகிறவன் தன்னுடைய வெளிப்புறமான பாவங்களை மட்டுமே கவனிக்கிறவனாக இருக்கிறான்

*பெரும்பாலும் ஆத்துமாக்கள் தங்களுயை இருதயத்திலுள்ள பாவத்தைப் பற்றிய உணர்வே இல்லாமல், வெளிப்புறமாகத் தாங்கள் செய்யும் பாவங்களை மட்டுமே கவனிக்கிறார்கள். கர்த்தரைத் தேடுகிறவன் தன்னுள் இருக்கும் அகங்காரம், தன்னலம், தன்னிச்சை, ஏமாற்றும் தன்மை, பொருளாசை, வெறுப்புணர்வு, கோபம் ஆகியவற்றை பற்றி அறிந்திருக்கிறானா? தன்னுள் காணப்படும் ஆழமான அசுத்தத்தைப்பற்றிய அறிவோடு, அதைத் தன்னால் மாற்றமுடியாதென்றும், வருடங்கள் போகப்போக அவை மோசமாகவே போய்க்கொண்டிருக்கும் என்பதையும் அறிந்திருக்கிறானா?*

### (இ) அவன் ஓரிரு பாவங்களையும், தவறுகளையுமே அறிக்கையிடுகிறான்

*தேடுகிறவன் தான் செய்துள்ள ஒரு குறிப்பிட்ட பாவத்திற்காக மட்டும் வருந்தி தன்னுடைய நிலமை முழுவதையும் பற்றிய உணர்வில்லாமல் இருக்கக்கூடும். உண்மையான மனந்திரும்புதலோடு அவன் கர்த்தரிடம் போவதற்கு தான் முழுமையாக மன்னிப்பும், மாற்றமும் அடைய வேண்டிய நிலையிலிருப்பதை அவன் உணர வேண்டும். தான் செய்துள்ள குறிப்பிட்ட ஓரிரு பாவங்களைப்பற்றி மட்டுமே அவன் சிந்தித்துக் கொண்டிருந்தால் தன்னுடைய ஏனைய நடத்தைகளில் மாற்றம் தேவையில்லை என்ற எண்ணத்தை அவன் கொண்டிருக்கக்கூடும். யூதாசு தன்னுடைய ஒரேயொரு பாவத்திற்காக மட்டும் வருத்தப்பட்டான். ஆனால், தன்னுடைய பாவங்கள் முழுவதையும் அவன் ஒருபோதும் உணரவில்லை. ஆகவே, அவன் ஒருபோதும் தன்னுடைய பாவங்களில் இருந்து சரியான முறையில் மனந்திரும்பவில்லை (மத்தேயு 27:3-5).*

### (ஈ) தான் செய்துள்ள நற்கிரியைகளைப்பற்றி பெருமையுடையவனாக இருக்கிறான்

*தன்னுடைய வாழ்க்கையில் தான் செய்துள்ள சில நன்மைகளைப் பார்த்து கர்த்தர் தன்னைப் பாராட்டுவார் என்று தேடுகிறவன் சில வேளை நினைத்துக்கொண்டிருக்கலாம். என்னுடைய பெருமை பாராட்டுதலுக்கும், ஆத்திரப்படும் தன்மைக்கும் வேண்டுமானால் மன்னிப்பு தேவைப்படுகிறது, ஆனால், கர்த்தர் என்னுடைய பெருந்தன்மையையும், கனிவு பாராட்டுதலையும் பார்த்து நிச்சயம் ஆனந்தப்படுவார் என்று தேடுகிறவன் தனக்குள் சொல்லிக் கொள்ளலாம். தேடுகிறவன் தன்னைப்பற்றித் தனக்குள் எந்தவிதத்திலும்*

பெருமையாக எண்ணிக்கொண்டிருந்தால் அவன் மனந்திரும்புதலைப்பற்றித் தவறான எண்ணத்தைக் கொண்டிருப்பதோடு, மெய்யாக மனந்திரும்புவதற்கும் எந்த வாய்ப்புமேயில்லை. தன்னுடைய வாழ்க்கை முழுவதிலும் கர்த்தருக்கு விரோதமாக நடந்து கொண்டிருக்கிறேன் என்பதை உணர்வதோடு, தன்னுடைய பாவங்களனைத்திற்குமாக கர்த்தரின் இலவசமானதும், அனைத்தையும் உள்ளடக்கியதுமான மன்னிப்பை நாடினால் தவிர தனக்கு எந்தவிதமான ஆசீர்வாதமோ பரலோக வாழ்க்கையோ கிடைக்காது என்பதை அவன் உணர வேண்டும். கொலைக்குற்றம் சாட்டப்பட்ட ஒருவன் தன்னுடைய தாயிடம் தான் எப்போதுமே மரியாதையுடன் நடந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்வதுபோல்தான், கர்த்தரைத்தேடுகிற ஒருவன் தன்னைத்தானே பெருமைப்பாராட்டிக் கொள்ளுவதும். பாவியொருவன் கர்த்தருக்கெதிராக செய்துள்ள பெரும்பாவங்களுடன் ஒப்பிடும்போது அவன் பெருமைபாரட்டி கொள்ளக்கூடிய எந்த நன்மையும் மிகச் சாதாரணமானதே.

### (உ) பாவத்தை அவன் வெறும் நோயாக நினைத்துக் கொண்டிருக்கலாம்.

தேடுகிறவன் பாவத்தை வெறும் நோயாக எண்ணிக் கொண்டிருக்கலாம். பாவத்திற்கு தானே சொந்தக்காரன் என்பதை ஒப்புக்கொண்டு அதற்காக வெட்கப்படாமல், கர்த்தாவே! என்னுடைய வாழ்க்கையை அழித்துக் கொண்டிருக்கும் இந்த வியாதியில் இருந்து என்னை விடுவியும் என்று அவன் கர்த்தரை நோக்கிக் கேட்பவனாக இருக்கலாம். சில பிரசங்கிகள், நோயினால் பாதிக்கப்பட்டு பரிதாபமான நிலையில் இருக்கும் ஒரு ஆத்துமாவாக பாவியைப் படம் பிடித்துக்காட்டுவதால் இந்தமாதிரியான எண்ணங்கள் வளருவதற்கு காரணகர்த்தாக்களாக இருந்துவிடுகின்றனர். கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் தங்களுடைய கரங்களை இரட்சகரின் கரங்களில் வைத்தார்களானால், இயேசு அவர்களுடைய கஷ்டங்களில் இருந்து அவர்களை விடுவிப்பார் என்பது அவர்களுடைய பிரசங்கமாக இருக்கின்றது. தங்களுடைய பாவங்களுக்காக வருந்தமறுக்கும் ஆத்துமாக்களுக்கு, பாவத்தைப் பற்றிய இந்த விளக்கம் மிகவும் ஆர்வத்தை ஊட்டுவதாகவே இருக்கும்.

### (ஊ) தன்னுடைய பாவத்திற்கு வெறும் சாக்குப்போக்கு சொல்கிறான்

தங்களுடைய பாவங்களுக்கு சாக்குப்போக்கு சொல்வதன்மூலம் சிலர் அவற்றிற்கான பொறுப்பை ஏற்க மறுக்கிறார்கள். தவறானவர்களுடன் சேர்ந்ததாலேயே திருடநேரிட்டது என்றும், வேறு எந்த வழியும் இல்லாததாலேயே பொய் சொல்ல நேரிட்டது என்றும் சாக்குப்போக்கு சொல்வார்கள். தங்களுடைய பெற்றோர் அன்புடன் தங்களை வளர்க்காததாலேயே தங்களுடைய பிள்ளைகளைக் கொடுமைப்படுத்த நேர்ந்ததாகவும், வாழ்க்கையில் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஏற்பட்ட விரக்தி தங்களைக் குடிகாரர்களாகவும், உலக இச்சைகளில் ஈடுபடுபவர்களுமாக்கிவிட்டது என்றும் பல காரணங்களைக் கூறுவார்கள். ஒரு பாவி, தன்னுடைய திருமண வாழ்க்கையில் அமைதியின்மையே தன்னை ஒழுக்கக்கேடுள்ளவனாக மாற்றிவிட்டது என்றும், இன்னொருவன் தன்னுடைய வியாபாரத்தில் ஏற்படும் பிரச்சினைகளே தனது கோபங்களுக்கெல்லாம் காரணம் என்றும் இப்படிப் பலவிதமான காரணங்களைச் சொல்வார்கள். ஆனால், கர்த்தரின் முன்பு வருகின்றபோது நாம் சகல சாக்குப்போக்குகளையும் மூட்டை கட்டிவைத்துவிட்டு, தாவீதைப் போல, என்மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன் . . . தேவரீர் ஒருவருகே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்னதாக

*பொல்லாங்கானதை நடப்பித்தேன் என்று சொல்ல வேண்டும்.*

*ஒரு பாவி தன் பாவங்களுக்கான சகல பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவனுக்கு மன்னிப்பு கிடையாது. மெய்யாக மனந்திரும்புகிறவன், ஆண்டவரே, நான் பாவஞ்செய்துவிட்டேன் என்று கதறுவான். பவுல் தன்னுடைய மனந்திரும்புதலை பின்னோக்கிப் பார்த்து சொல்கிறார், "பாவிகளை இரட்சிக்க இயேசு இந்த உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உம்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்." (1 தீமோத்தேயு 1:15). மெய்யாக மனந்திரும்புகிறவன் தன்னைக் குற்றவாளியாகக் காண்பான். அத்தகையவனுடைய குற்ற உணர்வையே கர்த்தர் நீக்குவார்.*

## (எ) கிறிஸ்துவை நிராகரிப்பது மட்டுமே பாவம் என்ற தவறான எண்ணம்

*கிறிஸ்துவை நிராகரிப்பது மட்டுமே பாவமென்றும், மனந்திரும்புவதற்கு அந்தப்பாவத்திலிருந்து மன்னிப்புப்பெற்றால் போதுமென்ற தவறான எண்ணத்தால் கர்த்தரைத்தேடுகிறவன் தடுமாற்றத்திற்கு உள்ளாகியிருக்கலாம். சில பிரசங்கிகள், மனிதன் செய்துள்ள அனைத்துப்பாவங்களுக்காகவும் கிறிஸ்து தன்னைப் பரிகாரப்பலியாகக் கொடுத்திருப்பதால், கிறிஸ்துவை நிராகரிக்கின்ற பாவத்திற்காக மட்டுமே எந்த மனிதனும் தண்டனையை அனுபவிக்க முடியும் என்று போதிக்கின்றார்கள். இத்தகைய செய்தியைக் கேட்டு கர்த்தரைத் தேடுகிற ஒருவன் தான் செய்ய வேண்டியதெல்லாம் கிறிஸ்துவ ஏற்றுக்கொள்ள வேண்டியது மட்டுமே என்ற எண்ணத்தில் தன்னுடைய பாவங்களெல்லாவற்றிலும் இருந்து மனந்திரும்ப வேண்டிய உந்துதல் இல்லாமல் போகலாம். அவன் தன்னுடைய ஜெபத்தில், "ஆண்டவரே! உம்மை நிராகரிக்கின்ற பாவத்தை செய்துவிட்டேன்" என்று மட்டுமே அறிக்கை செய்பவனாக இருக்கிறான்.*

*இந்தவகையில் ஜெபிப்பது இலகுவானது. உண்மையில் மனந்திரும்பாதவர்களும், மேலெழுந்தவாரியாக மட்டும் சுவிசேஷத்தில் ஆர்வம் காட்டுபவர்களும் இந்தவகையிலான மனந்திரும்புதலையே கொண்டிருக்கிறார்கள். நாம் மேலே பார்த்தவிதத்தில் ஜெபம் செய்கிறவன், அதோடு மனப்பூர்வமாக தன்னுடைய பாவங்கள் அனைத்திற்கும் ஒட்டுமொத்தமாக மன்னிப்புக்கேட்டால் அதை மெய்யான மனந்திரும்புதல் என்று கூறலாம். ஆனால், அத்தகைய ஜெபத்தைப் பெரும்பாலும் கேட்டக்கூடியதாக இல்லை. தன்னை ஆத்துமாக்கள் நிராகரிப்பதற்கு அவர்களுடைய பொல்லாங்கான செயல்களே காரணாக இருக்கின்றன என்று நமது ஆண்டவர் சொல்லியிருக்கிறார் (யோவான் 3:19-21). தம்மை நிராகரித்ததற்காக மட்டும் கர்த்தர் அவர்களை ஆக்கினைத்தீர்ப்புக்கு நியமிக்கவில்லை, அவர்களுடைய பாவங்களனைத்தும் கர்த்தரை நிராகரிக்கும்படி அவர்களை வழிநடத்தியிருப்பதால்தான்.*

*வேதத்தில் காணப்படும் அநேக போதனைகளின் அடிப்படையில் பார்க்கின்றபோது, பாவி தன்னுடைய அனைத்துப்பாவங்களிலும் இருந்து மனந்திரும்ப வேண்டும் என்ற உண்மையை தகுந்த உதாரணங்களுடன் நிரூபிக்க முடியும். பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தின் முதலாவது அதிகாரத்தில் அநேக பாவங்களைப் பட்டியலிட்டுத் தந்து, அப்பாவங்களைச் செய்பவர்களைக் கர்த்தர் நிச்சயம் தண்டிப்பார் என்று எழுதியிருப்பதைப் பார்க்கிறோம். அதேவேளை, கர்த்தருடைய தயவும், பொறுமையும், நீடிய*

*சாந்தமும் இங்கே சொல்லப்பட்டிருக்கும் பாவங்களனைத்திலிருந்தும் பாவிகள் மனந்திரும்புவதற்கு வழி நடத்துவதற்காகவே இருக்கின்றன என்று பவுல் கூறுவதைக் கவனிக்கவும்.*

### (ஏ) யாருக்கும் தெறியாமலிருக்கும் பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டியதில்லை என்ற தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கிறான்

*மெய்யான மனந்திரும்புதல் குறிப்பிட்டுக்கூற முடியாத பெருமளவு பாவங்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. பாவி தான் செய்துள்ள பெரும்பாவங்களுக்காக வருந்துகிற அதே நேரம் தான் செய்திருக்கும் இன்னும் அனேக பாவங்கள் தனக்குத் தெறியாமலிருக்கின்றது என்பதையும் உணர்கிறவனாக இருக்கிறான். தனக்குத் தெரிந்திருப்பதைவிட மேலும் அநேக பாவங்கள் இருக்கின்றன என்பதை அவன் அறிந்திருக்கிறான். தாவீது தான் செய்து தனக்குத் தெரிந்திருந்த பாவங்களுக்காகவும், தனக்குத் தெரியாமலிருக்கும் எண்ணிக்கையற்ற இன்னும் அநேக பாவங்களிலிருந்தும் மனந்திரும்பியதை பின்வருமாறு விளக்குவதைப் பார்க்கிறோம்:*

> *"தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீக்கலாக்கும்." (சங்கீதம் 19:12).*

*கர்த்தரின் மகா பரிசுத்தத்தைப் பார்த்து அவரைத் தேடுகிறவன் பிரமித்துப் போய் இருக்கிறானா? ஆண்டவருக்கு நெருப்பைக்கக்கும் அனல்விழிகள் இருக்கின்றன என்பதையும் அவருடைய கண்களுக்கு எதுவும் தப்பமுடியாது என்பதையும் அவன் அறிந்திருக்கிறானா? யோபுவைப்போல, "இதோ, நான் நீசன்;" . . . "இப்பொழுதே என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால், நான் என்னை அறுவறுத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்." (யோபு 19:4; 42:5, 6) என்று அவனால் கதற முடியுமா?*

(மிகுதி அடுத்த இதழில்)

**வாசகர்களே!**

**திருமறைத்தீபம் எட்டு ஆண்டுகளை இந்த இதழோடு நிறைவுக்குக் கொண்டு வருகிறது. கர்த்தருக்கு நன்றி! பத்திரிகை பலருக்கும் சீர்திருத்த போதனைகளையளித்து, பயனுள்ள ஊழியத்தை செய்துவருவதாக நீங்கள் அடிக்கடி எழுதும் கடிதங்கள் மூலம் அறிந்து கர்த்தருக்கு நன்றி கூறுகிறோம். அநேகருடைய ஆத்மீக வாழக்கையிலும், இறையியல் சிந்தனையிலும் விழிப்பை ஏற்படுத்த நம் தேவன் தொடர்ந்து பத்திரிகையைப் பயன்படுத்தி வருவதை உங்கள் மூலம் அறிந்து நாம் கர்த்தருக்கு அவற்றை காணிக்கையாக்குகிறோம். நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திற்கும் எங்களால் பதில் அனுப்ப முடியவில்லை. ஆனால், அவற்றால் நாம் அதிக ஆத்மீகபெலத்தை அடைகிறோம். தொடர்ந்து வருகிற ஆண்டிலும் பலனுள்ள ஆக்கங்களை வெளியிட்டு இன்றைய ஆத்மீக சூழ்நிலைக்கு அவசியமான இந்த சீர்திருத்த ஊழியத்தை நாம் விசுவாசத்துடன் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள். முன்கூட்டியே புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**– பத்திரிகை ஊழியர்கள் குழு**

# நெகேமியா

வேதம் நமக்கு தேவனுக்குப்பயந்த பல நல்ல விசுவாசிகளையும், தலைவர்களை வரலாற்றில் உதாரணமாகத்தந்து நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும், எத்தகைய தலைவர்களை சபைகளில் நியமிக்க வேண்டும் என்று ஆலோசனைகள் தந்து உதவுகின்றது. அப்படிப்பட்ட நல்ல விசுவாசமுள்ள தலைவர்களில் ஒருவனாக நெகேமியாவை நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம். சபைகளில் மோசமான மனிதர்களும், தலைவர்களும் (யெரொபேயாம், ஆகாப்) இருந்துவிடலாம். இத்தகையவர்களுக்கு மத்தியில் நெகேமியா தேவ பயமுள்ள மனிதனாகவும், கர்த்தரின் ஊழியத்தில் வாஞ்சையுள்ள மனிதனாகவும் இருந்து தேவனுடைய மக்களை வழிநடத்தியிருக்கிறான். நெகேமியா எப்படிப்பட்ட விசுவாசியாக, எத்தகைய தலைவனாக இருந்தான்?

### (1) கர்த்தருக்குப் பயந்த மனிதனாக இருந்தான்.

ஒரு விசுவாசிக்குரிய முக்கிய இலக்கணம், அவன் கர்த்தருக்குப் பயந்த மனிதனாக இருப்பதுதான். வேதம் நாம் கர்த்தருக்குப் பயப்படுகிற மனிதர்களாக இருக்க வேண்டும் என்று சொல்கிறது (5:9, 15). எருசலேமின் ஆலயத்தைச் சுற்றி இருக்கும் சுவர்கள் இன்னும் கட்டி முடிக்கப்படாமல் இருக்கிறது என்பதை அறிந்த நெகேமியா, அதற்குத்தானும் பொறுப்பு என்று உணர்ந்து, அந்த செய்தியைக் கேட்ட உடனேயே கர்த்தருக்கு முன் கண்ணீர் விட்டு அழுதான் (1:1-3). இன்று, கர்த்தருடைய சபை எப்படி இருந்தாலும் நமக்கென்ன என்று நினைக்கும் அநேகருக்கு மத்தியில் விசுவாசியான தன்னால் அப்படி இருக்க முடியாது என்று கர்த்தருடைய ஆலயத்தின் நிலைமையால் கர்த்தருடைய மகிமை பாதிக்கப்பட்டுவிட்டதாகக் கதறினான் நெகேமியா. உலகத்து சுகங்களையெல்லாம் அரசனுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்து அனுபவித்துக் கொண்டிருந்தபோதும் கர்த்தருடைய ஆலயத்து மதில் சுவர்கள் கட்டி முடிக்கப்படவில்லை என்பதை அறிந்ததும் உடல் பதறினான் நெகேமியா. அது கட்டி முடிக்கப்படாமல் இருப்பதற்கு தன்னுடைய மக்களும், தானும் காரணமாக இருந்திருக்கிறோம் என்று பாவஅறிக்கையிட்டு கர்த்தரின் மன்னிப்பை நாடினான் நெகேமியா (1:4-11). அது கட்டி முடிக்கப்பட தன்னால் முடிந்ததையெல்லாம் செய்ய வேண்டும் என்று தீர்மானம் எடுத்து அதை நிறைவேற்ற உறுதிபூண்டான். நண்பனே! நீ கர்த்தருக்கு பயந்த விசுவாசியா? உன் ஆபிஸ் வேலைக்கும், குடும்பத்திற்கும், உலக காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கர்த்தருடைய காரியங்கள் நிறைவேறாமல் இருப்பதற்கு நீ காரணமாக இருந்து வருகிறாயா?

### (2) கர்த்தருடைய ஊழியத்தில் தீவிர வாஞ்சையுள்ள விசுவாசியாக இருந்தான்

ஆலய வேலைகள் துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் நெகேமியா எடுத்ததை அந்நூலிலே வாசிக்கிறோம். அரசனிடம் அனுமதி பெற்று ஆலய வேலைகளுக்கு தேவையான அனைத்தையும் ஏற்பாடு செய்துவிட்டு எருசலேமுக்கு போய் உடனடியாக வேலைகளை ஆரம்பிக்கும் வேலையில் ஈடுபட்டான் நெகேமியா (2:1-9). கடினமான ஒரு வேலையைச் செய்யும் பொறுப்பேற்றிருந்தான் நெகேமியா.

பல தொல்லைகளுக்கும், எதிர்ப்புகளுக்கும் மத்தியில் அந்த வேலையைச் செய்ய வேண்டியிருந்தது. வெறும் ஊழிய ஆசை மட்டும் அந்த வேலையை முடிக்க துணை செய்யாது. அது கர்த்தருடைய வேலை என்ற உணர்வும், அதைச்செய்து முடிக்கும் வாஞ்சையும், தீவீரமும் இருந்தால் மட்டுமே ஒரு மனிதனால் அதைச் செய்ய முடியும். நெகேமியாவுக்கு அத்தகைய வாஞ்சையும் தீவிரமும் இருந்தது. ஆவியில் அனலுள்ள மனிதனாக கர்த்தருடைய ஆலய வேலைகளில் ஈடுபட்டான் நெகேமியா. நண்பர்களே! நீங்கள் ஆவியில் அனலுள்ளவர்களாக இருக்கிறீர்களா? கர்த்தருடைய காரியங்களைத் தீவிரமான வாஞ்சையோடு செய்கிறீர்களா?

### (3) ஊழியத்திற்காக தன்னுடைய சொந்த நலன்களைப் பலிகொடுக்கத் தயாராக இருந்தான்

ஆலயப்பணிகளைப் பொறுப்பேற்று செய்ய எருசலேமுக்கு போவதற்கு முன்பு பல சுகபோகங்களையும், உயர் பதவிகளையும் நெகேமியா விடவேண்டி-யிருந்தது. பல துன்பங்களைச் சகித்து, உலகத்தார் கண்ணில் உதவாக்கறையான வேலையாகத்தெரிந்து, எதிரிகளால் எள்ளிநகையாடப்பட்டதுமான ஆலய வேலையில் ஈடுபட வேண்டியிருந்தது. கர்த்தருடைய வேலை என்று வந்தவுடன் நெகேமியா தன்னுடைய சொந்த நலன்களைத் தள்ளிவைக்கத் தயங்கவில்லை (1:11, நான் ராஜாவுக்கு பான பாத்திரக்காரனாக இருந்தேன்.) பல துன்பங்களையும் வாழ்க்கையில் எதிர்நோக்கவும் தயாராக இருந்தான். தம்மை வளர்த்துக் கொள்வதற்காகவும், குடும்பத்தை நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்காகவும் ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் அநேக பச்சோந்திகள் நிரம்பி வழியும் இந்நாட்களில் நாம் நெகேமியாவின் தன்னலமற்ற விசுவாசத்தைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். நண்பனே! உன் வேலைகளுக்கும், குடும்பத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து சபைவேலைகளை செய்யாமலிருக்கிறாயா? கர்த்தருடைய வேலைகள் தடைப்பட்டிருக்கும்போது உன் வாழ்க்கை எப்படி வளம் பெற முடியும்?

### (4) எடுத்துக்கொண்ட காரியத்தை சிரத்தையோடு செய்யும் விசுவாசியாக இருந்தான்

நெகேமியா எடுத்துக்கொண்டுள்ள வேலை மகா பெரியது (6:3). அந்த வேலை ஏனோ தானோவென்று செய்கிற வேலையல்ல. கர்த்தருடைய ஊழியங்கள் கருத்தோடு செய்யப்பட வேண்டும். நேகேமியா தன்னோடு வந்தவர்களையும், எருசலேமில் இருந்தவர்களையும் கூட்டி, தகுந்த திட்டங்களை வகுத்து, சரியான மனிதர்களை ஒவ்வொரு வேலைக்கும் நியமித்து, ஒவ்வொரு காரியத்தையும் நிதானத்தோடும், கருத்தோடும் செய்தான் (2:11-3:32). செய்யும் பிரசங்கத்தையே சரியாகத் தயாரிக்காமல் பிரசங்க மேடைகளில் உளரித்தள்ளிக்கொண்டிருக்கும் பிரசங்கிகளும், கர்த்தருடைய சபை வேலைகளையும், ஆராதனையையும் கண்ணாபின்னாவென்று நடத்திவரும் போதகர்களும் நேகேமியாவின் சிரத்தையான ஊழியத்தைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். சபைக்-கூட்டங்களை நேரத்திற்குக் கூட்டாமலும், சபை வேலைகளை ஒழுங்கோடு நடத்தாதவர்களும் ஊழியத்திற்குத் தகுதியானவர்களல்ல.

### (5) தவறான கூட்டுக்கு ஒருபோதும் இடங்கொடுக்காத விசுவாசியாக இருந்தான்

ஆலய வேலைகளில் ஈடுபட்டிருந்த நெகேமியாவுக்கு பல தொல்லைகள் ஏற்பட்டன. உள்ளிருந்தும் புறமிருந்தும் அந்தத் தொல்லைகள் புறப்பட்டன. ஆலய வேலைகளில் பங்கு கேட்டு அது கிடைக்காத ஆத்திரத்தில் இருந்த

*சன்பல்லாத்தும், தோபியாவும், கேஷேமும், 'ஓனோ பள்ளத்தாக்குக்கு வா, அங்கே சந்தித்துப் பேசுவோம்' என்று நெகேமியாவை அழைத்தார்கள். அந்த அழைப்புக்கு இணங்காமல், அவர்கள் நல்ல நோக்கத்தோடு தன்னை அழைக்கவில்லை என்பதை உணர்ந்து நெகேமியா என்வேலைகளை விட்டுவிட்டு வரமுடியாது என்று அவர்களுக்கு பதிலனுப்பினான் (6:1-4). பல தடவைகள் அவர்கள் கூப்பிட்டனுப்பியும் நெகேமியா அதை சட்டை செய்யவில்லை. தவறான கூட்டு ஊழியத்துக்கு எப்போதுமே ஆபத்து, நமது விசுவாசத்துக்கும் ஆபத்து. தவறான போதனைகளைக் கொண்டவர்களுடன் கூடுவதும், அவிசுவாசிகளுடன் நேரத்தை வீணடிப்பதும், கர்த்தரின் கட்டளைகளுக்கு எதிரான செயல்கள். ஊழியக்காரர்களுடைய ஊழியங்களைத் தடைசெய்ய தவறான கூட்டுச்சேரும்படி பல போலிகளிடம் இருந்து நமக்கு எப்போதும் அழைப்பு வரும். அவற்றை இனங்கண்டு தவிர்த்துக் கொள்ள வேண்டியது ஊழியக்காரர்களின் கடமை. சொல்ல வேண்டிய நேரத்தில் முடியாது என்று சொல்லத் தயங்குகிறவன் மெய் விசுவாசியாக, கர்த்தருடைய ஊழியக்காரனாக இருக்க முடியாது.*

### 6) பிசாசின் சோதனைகளை கர்த்தரின் துணையோடு தைரியத்தோடு எதிர்த்தவனாக இருந்தான்

*ஆலய வேலைகள் தொடர்ந்து நடப்பதைத் தடை செய்ய நெகேமியாவுக்கு பல சோதனைகள் ஏற்பட்டன. ஒருபுறம் சன்பல்லாத்தும், தோபியாவும், கேஷேமும் துர்க்குணத்தோடு பல திட்டங்களைத் தீட்டி வேலைகளை நிறுத்தப்பார்த்தார்கள். மறுபுறம் உடனிருந்தவர்கள் வேலையில் ஆர்வம் குறைந்து பலகுறைபாடுகளைப் பட்டியல்போட்டு முறையிட்டு தொடர்ந்து வேலையில் ஈடுபடத் தயங்கினார்கள் (5:1-19; 6:1-19). இதற்கெல்லாம் பின்னணியில் இருந்து செயல்படுகிறவன் சாத்தான் என்பதில் நெகேமியாவுக்கு எந்த சந்தேகமும் இருக்கவில்லை. ஆலயவேலைகள் பெருமளவு முடிந்தபின்பும் ஒய்வுக்கு இடங்கொடுக்காமல் சாத்தான் நெகேமியாவைத் தாக்கினான். எல்லா வேலைகளும் நிறைவேறிய பின்னும் சாத்தானுடைய வேலைகள் தொடராமல் இருக்கவில்லை (13:15-31). சாத்தானின் ஒவ்வொரு சோதனையையும் கர்த்தர் முன் ஜெபத்தில் தரித்திருப்பதன் மூலமும், முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்வதன் மூலமும் நெகேமியாவால் வெற்றி கொள்ள முடிந்தது. பெந்தகொஸ்தேகாரர்களைப்போல பேய்விரட்டுவதால் சாத்தான் ஓடிவிடமாட்டான். விசுவாசத்தில் உறுதியும், கலங்காத நெஞ்சமும், ஜெபமும், வேத ஞானமும், அதை முறையாகப் பயன்படுத்துவதும், கர்த்தரில் எப்போதும் தங்கியிருப்பதாலுமே சாத்தானோடு நடக்கும் போராடத்தில் வெற்றி கிட்டும்.*

### (7) தன்னுடைய மக்களின் பலவீனங்களுக்கு மத்தியிலும் கர்த்தருக்காக உழைத்து அவரை மகிமைப்படுத்தினான்

*நெகேமியாவுடன் இருந்த மக்கள் பலவீனமானவர்கள். அவர்கள் அவனுக்கு துணையாகவும் இருந்தார்கள், தொந்தரவாகவும் இருந்தார்கள். சலிப்பேற்படுத்தும்வகையில் முறுமுறுத்தவர்கள் (5:1-12). இத்தகைய ஆத்துமாக்களைக் கொண்டுதான் ஆலய வேலைகளை அவன் செய்ய வேண்டியிருந்தது. இதேபோல்தான் நாமும் பலவீனமுள்ள விசுவாசிகளின் கூட்டத்தோடு நம்முடைய சபைகளில் ஊழியம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். அவர்களுடைய பலவீனத்தைக் கண்டு நாம் ஊழியத்தைவிட்டு ஓடிவிட முடியாது. அவர்களைத் திருத்தி, ஆலோசனைகூறி, நல்வழியில் நடத்தி கர்த்தரின் ஊழியத்தை நாம் அவருக்காக செய்ய வேண்டும்.*

# கிறிஸ்தவ கோட்பாடுகள்

*கேள்வி: 63 ஓய்வு நாளை எவ்வாறு பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும்?*

*பதில்: வாரத்தின் ஏனைய நாட்களில் செய்யவேண்டிய சகல உலக வேலைகளையும், ஓய்வுநேர இன்பப்பொழுது போக்குகளையும் அந்நாளில் தவிர்த்து, தேவைக்குரியதும், கருணைக்குரியதுமான செயல்களுக்கு தேவையான நேரத்தைத்தவிர ஏனைய நேரமனைத்தையும் பொதுவானதும், தனிப்பட்டதுமான கர்த்தருடைய ஆராதனையில் செலவிட்டு ஓய்வுநாளைப் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும்.*

*யாத்திராகமம் லேவியராகமம் 23:3; யாத்திராகமம் 20:8, 10; 16:25-28; நெகேமியா 13:15-22; லூக்கா 4:16; அப்போஸ்தலர் 20:7; சங்கீதம் 92:1-2; ஏசாயா 66:23; மத்தேயு 12:11-12.*

*கேள்வி: 64 நான்காவது கட்டளை எதைத் தடை செய்கிறது?*

*பதில்: நான்காவது கட்டளை, கர்த்தர் கட்டளையிட்டுள்ள கடமைகளை ஓய்வுநாளில் செய்யாமலிருப்பதையும், அவற்றைக் கவனக்குறைவாக செய்வதையும், சோம்பேறித்தனமாக இருப்பதையும் அல்லது பாவகரமான செயல்களை அந்நாளில் செய்வதையும் அல்லது நமது உலக வேலைகள், ஓய்வு நேர இன்பப்பொழுதுபோக்குகள் சம்பந்தமான அவசியமற்ற எண்ணங்களாலும், வார்த்தைகளாலும், செயல்களாலும் அந்நாளை பரிசுத்தக்குலைச்சலாக்குவதையும் தடைசெய்கிறது.*

*எசேக்கியல் 22:26; ஆமோஸ் 8:5; மல்கியா 1:13; எசேக்கியல் 23:38; யெரேமியா 17:24-26; ஏசாயா 58:13.*

*கேள்வி: 65 நான்காவது கட்டளை வலியுறுத்தும் காரணிகள் யாவை?*

*பதில்: நம்முடைய சொந்த வேலைகளைக்கவனிப்பதற்காக வாரத்தின் ஆறு நாட்களைக் கர்த்தர் தந்திருக்கிறார் என்பதும், ஏழாவது நாளில் தனக்குத் தனியுரிமை இருக்கிறதென்று அவர் தெரிவித்திருப்பதும், ஓய்வு நாளில் அவரே நமக்கு உதாரணமாக இருந்து காட்டி அதை ஆசீர்வதித்திருப்பதும் நான்காவது கட்டளை வலியுறுத்தும் காரணிகளாக இருக்கின்றன.*

*யாத்திராகமம் 20:9; 31:15-16; 20:10; லேவியராகமம் 23:3; யாத்திராகமம் 31:17; ஆதியாகமம் 2:3; யாத்திராகமம் 20:12.*

**விளக்கக்குறிப்பு:** இந்த மூன்று வினாவிடைகளும் ஓய்வுநாளை நாம் பரிசுத்தமாக எப்படி வைத்திருப்பது என்று விளக்குகின்றன. ஓய்வுநாள் (சபத்து) என்ற வார்த்தைக்கு ஓய்வு என்பது பொருள். ஆதாவது, வாரத்தின் ஏனைய ஆறு நாட்களிலும் நாம் செய்யும்படியாக கர்த்தர் அனுமதித்திருக்கும் சகலவேலைகளிலிருந்தும் நாம் ஓய்வு நாளில் ஓய்வெடுத்து அந்நாளைக் கர்த்தருக்காகப் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதனால் ஓய்வு நாளில் நாம் ஒன்றுமே செய்யக்கூடாது என்று அர்த்தமல்ல. ஓய்வுநாளில் ஓய்ந்திருந்த கர்த்தர் அந்நாளில் இந்த உலகத்தைத் தனது வார்த்தையின் பலத்தால் பராமரித்து வந்தார். ஆகவே, அவர் அந்நாளில் ஒன்றுமே செய்யாமல் வெறுமனே ஓய்ந்திருக்கவில்லை. ஓய்வு நாளில் நாம் செய்ய வேண்டிய காரியங்களுக்கும், வாரத்தின் ஏனைய ஆறுநாட்களில் செய்ய வேண்டியவைகளுக்கும் வேறுபாடுண்டு. இந்த வேறுபாடு என்ன என்பதைத்தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஓய்வுநேர இன்பப்பொழுது போக்குகளை ஓய்வு நாளில் தவிர்க்க

வேண்டும் என்று வினாவிடை கூறுகின்றபோது அவற்றை அது இழிவாகப் பார்க்கவில்லை. அவையும் கர்த்தரால் அனுமதிக்கப்பட்டவையே. அவற்றை வாரத்தின் ஆறு நாட்களிலும் ஆத்துமாக்கள் செய்ய எந்தத்தடையுமில்லை. அவற்றின் மூலமும் ஆத்துமாக்கள் கர்த்தரை மதிமைப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஆனால், வினாவிடை வாரத்தின் ஒரு நாளை, அதாவது ஓய்வுநாளை (இன்று வாரத்தின் முதல் நாள்) வேறுவிதமாகப் பயன்படுத்த வேண்டும் என்று விளக்குகிறது. வாரத்தின் ஏனைய ஆறு நாட்களிலும் நாம் உலக காரியங்களைச் செய்து கர்த்தரை ஆராதித்து மகிமைப்படுத்த வேண்டியவர்களாக இருந்தபோதும், ஓய்வுநாளில் அவரை நாம் மகிமைப்படுத்தும்போது வித்தியாசமான காரியங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்தக்காரியம்தான் கர்த்தரை அந்நாள் முழுவதும் ஆராதிப்பது. அந்நாள் முழுவதையும், கருணைக்குரியதும் பக்திவிருத்திக்குரியதுமான காரியங்களைச் செய்யும் நேரத்தைத் தவிர்த்து கர்த்தரின் ஆராதனையில் செலவிட வேண்டும்.

இந்த வினாவிடைகள் மிக உயர்ந்ததும், எட்ட முடியாத உயரத்திலிருகிறது போன்றதுமான காரியங்களை ஓய்வுநாளில் நாம் செய்யும்படி எதிர்பார்ப்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. இவற்றை வாசிக்கும்போது யாரால் இப்படி இதையெல்லாம் பூரணமாக செய்யமுடியும் என்று எவராவது கேட்டால் அதில் தவறில்லை. வினாவிடை நம்முன் வைக்கும் கடமைகள் மி கவும் உயர்ந்தவைதான். இந்த உலகத்தில் ஒரு ஆத்துமாவும் பூரணமாக அவற்றை செய்துவிட முடியாதுதான். கிறிஸ்து மட்டுமே எதையும பூரணமாக நிறைவேற்றியவர். அதற்காக, நாம் உளபூர்வமாக அந்தக் கடமைகளைக் கவனத்தோடு செய்ய முயற்சிக்காமல் இருக்கக்கூடாது. அவை மிக உயர்ந்தவை என்று கூறி அவற்றை செய்ய முயற்சிக்காமலிருக்கும்போது கர்த்தரில் நமக்கு அன்பு குறைவாக இருப்பதையே காட்டுகிறது. என்னை நேசிக்கிறவர்கள் என்னுடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இயேசு கூறியிருப்பதை மறந்திவிடக்கூடாது. இந்தக் கடமைகளை ஓய்வுநாளில் நாம் முழு மனத்தோடு செய்துமுடித்து, அதற்குப்பிறகும் அவற்றைப்பூரணமாக நம்மால் செய்ய முடியவில்லையே என்று வருத்தப்படுவோமானால், கிறிஸ்து அவற்றைப்பூரணமாக நமக்காக செய்து முடித்திருக்கிறார் என்று நாம் ஆறுதல் கொள்ள வேண்டும். ஓய்வு நாளில் நாம் செய்யும்படிக் கர்த்தர் எதிர்பார்க்கின்ற கடமைகள் பெரிது என்பதால் கிறிஸ்தவ ஆத்துமா அவற்றைச் செய்யாமல் தவிர்ப்பது கர்த்தரின் கட்டளைகளை மீறும் செயலாகும்.

ஓய்வுநாளில் சிலர் பக்திக்குரிய காரியங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் லேவியர்கள் ஆலயத்தில் ஆராதனைக்குரிய காரியங்களை ஓய்வுநாளில் செய்ய வேண்டியதாயிருந்தது. எனவே, ஓய்வுநாளில் ஆலயத்தில் ஆராதனைக்குரிய எந்த வேலையையும் செய்வது நியாயமே. அப்படி செய்யாவிட்டால் ஆத்துமாக்கள் முறையாக ஆராதனை செய்ய முடியாமல் போகும். போதகர்களுக்கு ஓய்வுநாளில் அநேக வேலைகள் உண்டு. பல தடவைகள் பிரசங்கிப்பதோடு, போதிக்கவும் வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆவிக்குரிய பல வேலைகளை அவர்கள் அந்நாளில் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவை அவர்கள் செய்ய வேண்டிய நியாயமான பக்திக்குரிய காரியங்களே. இதைத்தான் ஓய்வுநாளில் செய்யக்கூடிய பக்திக்குரிய செயல்களாக வினாவிடை சுட்டிக்காட்டுகிறது.

*அத்தோடு இவ்வினாவிடை கருணைக்குரிய காரியங்களை ஓய்வுநாளில் செய்யலாம் என்று விளக்குகிறது. வைத்தியர்கள் தங்களுடைய வேலையை ஓய்வுநாளில் செய்யும்போது கருணைக்குரிய காரியங்களில் ஈடுபடுகிறார்கள். அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபட்டிருப்பவர்கள் ஓய்வுநாளில் அக்காரியங்களைச் செய்யக்கூடாது என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. உதாரணத்திற்கு தீயணைப்புப் படையிலும், போலீஸ் உத்தியோகத்திலும் இருப்பவர்களைக் கூறலாம். இவை ஓய்வுநாளிலும் தொடர்ந்து நடக்க வேண்டிய கருணைக்குரிய காரியங்கள். அந்தக்காரியங்களை ஓய்வுநாளில் செய்பவர்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்கவில்லை என்று சொல்ல முடியாது. ஓய்வுநாளில் ஆத்துமாக்கள் செய்ய வேண்டிய கடமைகளில் ஒருபகுதிதான் இவையும். (மத்தேயு 12:11, 12).*

*ஓய்வு நாளைக்கடைப்பிடிப்பதில் இன்று கிறிஸ்தவர்கள் அதிக அலட்சியம் காட்டுகிறார்கள். இதற்கு தவறான போதனைகள் பெருங்காரணமாக இருக்கின்றன. இவற்றை நாம் கடந்த இதழில் பார்த்தோம். இன்று ஓய்வுநாளில் களியாட்டங்களில் ஈடுபடுவதும், கிரிக்கெட் ஆட்டம் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுவதும், டி. வி, சினிமா போன்றவற்றைப் பார்ப்பதும் சகஜமாகி விட்டது. இவற்றை ஓய்வு நாளில் செய்வது தவறு என்பது அநேகருக்குப் புரிவதில்லை. ஓய்வு நாள் கர்த்தரின் நாள். அந்நாளில் கர்த்தர் நம்மிடம் இருந்து எதிர்பார்க்கும் கடமைகளைத்தான் செய்ய வேண்டும். ஓய்வு நாளை ஆத்துமாக்கள் சரிவரப் பின்பற்ற வேண்டுமானால், போதகர்கள் சபைகளில் அதன் அவசியத்தைப் பற்றிப் பிரசங்கித்து ஆத்துமாக்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஓய்வுநாளில் ஆத்துமாக்கள் ஆண்டவரை ஆராதித்து அடையக்கூடிய நன்மைகளை அவர்களுக்கு விளக்க வேண்டும். அதனால் குடும்பங்கள் அடையக்கூடிய ஆசீர்வாதங்களைப் புரியவைக்க வேண்டும். போதகர்களும், மூப்பர்களும், உதவிக்காரர்களும் இதற்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். ஓய்வுநாளை சரியாகப்பயன்படுத்திக் கொள்ளாதபோது எத்தனை ஆத்மீக ஆசீர்வாதங்களை இழந்து போகிறோம் தெரியுமா?*

*நான்காவது கட்டளை ஓய்வு நாளின் மகிமையையும், அவசியத்தையும் வலியுறுத்தும்போது அது வாரத்தின் ஏனைய ஆறு நாட்களிலும் நாம் கர்த்தருக்குப் பயந்து உழைத்து அவரை ஆராதிக்க வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. உழைத்து வாழ மறுக்கிறவன் உண்பதற்கு லாயக்கில்லை. சோம்பேரிக்கு சோறுகிடையாது (2 தெலோனிக்கேயர் 3:10). நமது சமுதாயத்தில் சும்மா சாப்பிட்டுப் பழகியவர்கள் இன்று அதிகம். அதற்காகவே இன்று அநேகர் ஊழியத்திற்கும் வருகிறார்கள். வேதம் கிறிஸ்தவர்கள் வேலை செய்து உழைத்து உண்பதில் அதிக அக்கறை காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. நமது வேலைகள் அனைத்தையும் நாம் தேவ பயத்தோடு செய்யும்போது கர்த்தரை நாம் மகிமைப்படுத்துகிறோம். உழைப்பதற்காகவே மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான். கிறிஸ்தவ ஆத்துமா வாரத்தின் ஆறுநாட்களிலும் உழைத்துச் சாப்பிடும் ஆத்துமாவாக இருக்கவேண்டும். உழைப்பதற்குத் தயங்குகிறவன் கிறிஸ்தவனாக இருக்க முடியாது.*

*அதேநேரம், ஓய்வுநாள் பற்றி இதுவரை பார்த்ததை நாம் மறந்துவிடக்கூடாது. ஏசாயா 58 அதிகாரத்தில் ஏசாயா தீர்க்கதரிசி ஓய்வுநாளைப்பற்றிக் கூறுவதை மறுபடியும் வாசித்துப் பாருங்கள். ஓய்வுநாளை வேதபூர்வமாக பின்பற்றும் ஆத்துமாக்களை கிறிஸ்து ஆசிர்வதிக்கிறார்.*

# பிரசங்கப் பஞ்சம்

திருச்சபைகளில் இன்று பிரசங்கப் பஞ்சம் நிலவுகிறது என்பதை சிந்திக்கக்கூடிய கிறிஸ்தவர்கள் உணர்வார்கள். நம்மை இப்பஞ்சம் வாட்டிக் கொண்டிருப்பதற்கு பலகாரணங்கள் இருக்கின்றன. கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே இறையியல் பஞ்சம் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் நிலவி வந்துள்ளது. சத்தான இறைபோதனை எதுவும் இல்லாமல், சொந்த அனுபவங்களை மட்டும் அள்ளித்தெளிக்கும் சுவிசேஷப்பிரசங்கங்கள் என்ற பெயரில் கொடுக்கப்படும் பேச்சுக்களையே ஆத்துமாக்கள் கேட்டு வாழ வேண்டிய நிலை இருந்துவந்துள்ளது. வேதபோதனைகளைப் பெற்று வளர்ந்திராத நம்மவர்கள் உணர்ச்சியூட்டும் இந்தப் பேச்சுகளையே பிரசங்கமாகக் கேட்டு வளர்ந்திருக்கிறார்கள். சொந்த ஊழியங்கள் என்ற பெயரில் பெருமளவில் தனி நபர்களின் சுவிசேஷ வியாபார ஊழியங்கள் பெருகியபின் கொஞ்சநஞ்சமிருந்த பிரசங்கமும் இல்லாமல் போய் இன்று பிரசங்கப் பஞ்சத்தால் தமிழ் சமுதாயம் வாடிக் கொண்டிருக்கின்றது. இதை அநேகர் உணருகிறதாக இல்லை.

நமது மக்களின் கலாச்சார சமுதாயப்பின்னணி இப்பிரசங்கப் பஞ்சம் நீங்காமல் இருப்பதற்கு பெருங்காரணமாக இருக்கின்றன. தமிழை மூன்று பிரிவாக இயல், இசை, நாடகம் என்று பிரிப்பார்கள். அதில் இசையும், நாடகமுமே நமது சமுதாயத்தில் அதிகம் வளர்ந்து இயற்தமிழுக்கு இடமே இல்லாமல் போயிருக்கிறது. இதை இன்று நம்மக்களைப் பிடித்திருக்கும் சினிமா மோகத்திலிருந்தும், மெல்லிசையின் மேலிருக்கும் நாட்டத்திலிருந்தும் புரிந்து கொள்ளலாம். திருமணவீடு, மரண ஊர்வலம், பிறந்ததாள் நிகழ்ச்சி, சுவிசேஷக்கூட்டம் என்று எங்கு பார்த்தாலும் இசைக்கும், காட்சிக்கும்தான் முதலிடம். இதற்கும் கிறிஸ்தவ பிரசங்கப் பஞ்சத்திற்கும் என்ன தொடர்பு? என்று நீங்கள் கேட்கலாம். தமிழ் கிறிஸ்தவர்கள் இன்று இசையையும், கூத்தையும், நாடகத்தையும், வில்லுப்பாட்டையும் மட்டுமே ஆவலோடு நாடிப்போவதற்கு இப்பின்னணியே காரணம். இசையும், கூத்தும், நாடகமும் மனிதனை சிந்திக்க வைக்காது. அவனது உணர்ச்சிகளையே அதிகளவில் தூண்டும். உணர்ச்சிப்பிளம்பான நம்மக்கள் இவற்றை அதிகம் நாடிப்போவதில் ஆச்சரியமில்லை. நமது மக்களுடைய கலாச்சார சமுதாயப் பின்னணி அப்படி. அதனால்தான் உணர்ச்சிகளுக்கு மட்டும் தீனிபோடும் இசைக்கு முதலிடம் தரும் கூட்டங்களுக்கும், சுகமளிக்கும் கூத்துக்கள் நடக்கும் கூட்டங்களுக்கும் நம் மக்கள் பெருந்தொகையில் போய்க்கொண்டிருக்கிறார்கள். இக்கூட்டங்களில், சிந்திக்க வைக்கக்கூடிய சத்தான வேதபிரசங்கங்களுக்கு எப்போதுமே இடமிருக்காது.

இந்நிலைமை மாற வேண்டும். மேலைத்தேய சமுதாய மக்களைப்போல நாம் முதலில் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு சிந்திக்கப் பழக வேண்டும். உணர்ச்சிகளுக்கு மட்டும் இடம் கொடுப்பதை அடியோடு நிறுத்த வேண்டும். வாசிக்காதவன் சிந்திக்க மாட்டான். சிந்திக்க முடியாதவர்களுக்கு பிரசங்கம் தேவையாயிருக்காது. வேதத்தையும் நல்ல நூல்களையும் வாசித்து சிந்தித்து ஆராய்ந்து பார்க்கின்ற ஆத்துமாக்கள் நம்மத்தியில் பெருகும்வரை பிரசங்கப் பஞ்சம் இந்த சமுதாயத்தில் தொடர்ந்து இருக்கத்தான் போகின்றது. நம்மக்கள் மாறுவார்களா? கர்த்தர்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்.

# உங்கள் சிந்தனைக்கு!

எல்லா சபைப்பிரிவுகளுக்கும் பொருந்தி வருகிற இறையியல் கல்லூரிகள் (Inter-Denominational Bible College) என்ற இறையியல் கல்லூரி விளம்பரங்களை நீங்கள் அடிக்கடி பார்த்திருப்பீர்கள். இதற்கு பொருள் என்ன என்று எல்லோருமே சிந்தித்துப் பார்த்திருக்க மாட்டோம். ஆனால், சிந்திக்காமல் இருந்துவிட்டால் எப்போதுமே நமக்கு ஆபத்துத்தான் காத்திருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி நாம் ஆராய்வது அவசியம். சமீபத்தில் நான் வாசித்த இந்திய சபை சரித்திரம் பற்றிய ஒரு ஆங்கில நூலில் உள்அட்டையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. "இது செராம்பூர் இறையியல் கல்லூரியினால் பட்டப்படிப்புக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், பட்டப்படிப்புக்கு இதைமட்டும் உத்தியோகபூர்வமான வரலாற்று நூலாகப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், ஏனைய சபைப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் சில முக்கியமான வேதபோதனைகளைக்குறித்து வேறுபாடான கோட்பாடுகளைக் கொண்டிருக்கிறார்கள் என்பதால் இந்நூலின் கருத்துக்களை மட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நாம் வற்புறுத்தவில்லை" என்று எழுதப்பட்டிருந்தது. இந்த விளக்கம் ஓரளவுக்கு இன்டர்-டிநோமினேஷனல் இறையியல் கல்லூரிகள் பற்றிய உண்மையை எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது.

இன்டர்-டினோமினேஷனல் இறையியல் கல்லூரிகள் எல்லா சபைப்பிரிவுகளும் சத்தியத்தைப் பின்பற்றுகின்றன என்ற அடிப்படைக் கோட்பாட்டைக் கொண்டு இயங்குகின்றன. ஆகவே, எந்த சபைப் பிரிவின் கோட்பாடுகளுக்கும் எதிரான எந்தப்போதனையோ, விளக்கமோ அந்தக் கல்லூரிகளில் கொடுக்கப்படமாட்டாது. அந்தக் கல்லூரிகளின் விசுவாச அறிக்கையை வாங்கிப் பார்த்தால் அதில் குறைந்தளவான அடிப்படை உண்மைகள்பற்றிய மேலெழுந்தவாரியான விளக்கம் மட்டுமே காணப்படும். அதாவது, எவருடைய கோட்பாட்டிற்கும் எதிரானதாக இருந்துவிடாதபடி கவனத்துடன் எழுதப்பட்டிருக்கும். உதாரணமாக பெந்தகொஸ்தே இயக்கங்களுக்கு எதிரான விளக்கங்கள் இருக்காது. சபை அமைப்பு, திருமுழுக்கு, இறுதிக்கால சம்பவங்கள், ஆவிக்குரிய வரங்கள், மீட்பைப்பற்றிய வேதபோதனைகள், பரிசுத்த ஆவிபற்றிய போதனைகள் அத்தனையும் எந்தசபைப்பிரிவையும் பாதிக்காத விதத்தில் விளக்கப்பட்டிருக்கும். முக்கியமாக எல்லா சபைப்பிரிவுகளையும் சேர்ந்தவர்கள் விரிவுரையாளர்களாக இருப்பார்கள். மொத்தத்தில் கிறிஸ்து ஆண்டவர், அவரை நம்பினால் இரட்சிப்பு என்பதைத் தவிர ஏனைய எல்லா வேதபோதனைகளையும் பொறுத்தவரையில் எந்த சபைப்பிரிவையும் பாதிக்காத விதத்தில் விளக்கங்கள் இருக்கும். உதாரணமாக தீர்க்கதரிசனம் இன்று உண்டா? என்று ஒரு மாணவர் விரிவுரையாளரைப் பார்த்துக் கேட்டால், அவர், "அப்படி இருப்பதாக ஒரு பிரிவினர் நம்புகிறார்கள். இல்லை என்று இன்னொரு பிரிவினர் நம்புகிறார்கள். உறுதியாக எதையும் சொல்ல முடியாது.. எதில் உண்மை இருக்கிறது என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்" என்று பதில் சொல்லுவார். இப்படியே எல்லாப் போதனைகளுக்கும் அவர்கள் கொடுக்கும் விளக்கம் இருக்கும். இறையியல் மாணவன் இறுதியில் வேதத்தில் எல்லாப் போதனைகளுக்கும் இரண்டுக்கு மேற்பட்ட அர்த்தம்

இருக்கிறது; உறுதியாக எதுவும் வேதத்தில் சொல்லப்படவில்லை என்ற நம்பிக்கையுடன் சபைக்குத் திரும்பி வருவான். இது முறையா? என்று சிந்திக்காமல் சீர்திருத்தப் போதனைகளை விசுவாசிக்கிறவர்கள் சும்மா இருந்துவிட முடியுமா? இந்தமுறையில் அமைந்த இறையியல் கல்லூரிகளாலும், சபைகளாலும் வரும் ஆபத்தைக்குறித்து சிந்தித்துப் பாருங்கள்:

1. **இவர்கள் வேதத்தின் அதிகாரத்தைப் பற்றிய தவறான கொள்கையுடையவர்கள்.** வேதம் தெளிவான, அசைக்கமுடியாத ஒரே சத்தியத்தைப் போதிக்கிறது என்று இவர்கள் நம்புவதில்லை. அதில் பலவித கருத்துக்களுக்கும் இடமுண்டு என்ற அடிப்படை நம்பிக்கையை இவர்கள் கொண்டிருக்கிறார்கள். இதனால் வேதத்தை விளக்க இவர்கள் பயன்படுத்தும் வேதவிளக்க முறைகளும் தவறானதாகவே இருக்கும். இவர்களில் பெரும்பாலானோர் வேதம் கர்த்தரின் இறுதித் தீர்ப்பு என்பதையும் நம்புவதில்லை. அதாவது, கர்த்தர் வேதத்தின் மூலம் மட்டுமல்லாது தனி மனிதர்களின் தீர்க்கதரிசனத்தின் மூலமும், வேறு வழிகளிலும் தன்னுடைய சித்தத்தைத் தொடர்ந்தும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்ற ஆபத்தான நம்பிக்கையையும் கொண்டிருக்கிறார்கள். இந்நம்பிக்கை வேதத்தின் அதிகாரத்திற்கும் அதன் போதுமான தன்மைக்கும் எதிரானது. இத்தகைய போதனைகளைத்தரும் கல்லூரிகளில் படிக்கும் விசுவாசிகளும், இந்த விதத்தில் செயல்படும் சபையிலிருப்பவர்களும் சத்தியம் ஒன்றல்ல, அது பல சாயல்களைக் கொண்டது என்ற நம்பிக்கையிலும், வேதம் கர்த்தரின் வார்த்தைதான், இருந்தாலும் அதுவே எல்லாவற்றிற்கும் முடிவான இறுதித் தீர்ப்பளிக்கும் கர்த்தரின் வார்த்தையல்ல என்ற விசுவாசத்திலும் வளருவார்கள். இதைவிட பேராபத்து ஆத்துமாக்களுக்கு இருக்க முடியாது.

2. **இத்தகைய கல்லூரிகள் சமய சமரசப்போக்குள்ளவை** (Ecumenism). எல்லா சபைப்பிரிவுகளையும் திருப்திப்படுத்துவதையே நோக்கமாகக்கொண்டு இவை இயங்குவதால் எல்லா சபைப்பரிவுகளும் வேதபூர்வமானவை என்ற அடிப்படை நோக்கத்தைக் கொண்டு இவை செயல்படுகின்றன. இதனால் சபைப்பிரிவுகளின் போதனைகளையும், அவற்றின் தன்மையையும் வேதத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதை இவை எப்போதும் விரும்புபவதில்லை. வேத விரோதக் கொள்கையான சமய சமரசப் போக்கைப் பின்பற்றி சத்தியத்தை மூடி மறைத்து விசுவாசிகளின் மனச்சாட்சியை மனித ஞானத்திற்கு அடிமைப்படுத்துவதைத் தொழிலாகக் கொண்டு இவை இயங்கி வருகின்றன. வேதத்திற்கே எனது மனச்சாட்சி அடிமை என்று சொன்ன மார்டின் லூதரைப் போன்றவர்களை இவர்கள் மத்தியில் பார்க்க முடியாது.

3. **இவ்வாறு இயங்கி வரும் கல்லூரிகளும், சபைகளும் சத்தியத்தை மறைத்து வைப்பதோடு, திருச்சபையையும் இருண்டகாலத்தை நோக்கி இட்டுச் செல்கின்றன.** இக்கல்லூரிகளில் படித்து பட்டம் பெற்று போதகர்களாக வருகிறவர்களால் ஆத்துமாக்களின் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பேராபத்து ஏற்படுகின்றது. சத்தியம் பல சாயல்களைக்கொண்டு தனி மனிதன் தான் விரும்பியவிதத்தில் புரிந்து கொள்ளக்கூடிய தன்மையுள்ளது என்று போதித்து இப்போதகர்கள் ஆத்துமாக்களை யெரேபொகாமைப்போல் கர்த்தரின் கட்டளைகளுக்கு எதிராக வழிநடத்துவார்கள்.

இதை வாசித்த பின்பும் சிலர் திருந்த மறுப்பார்கள். அதில் எந்த ஆச்சரியமும் இல்லை. வேதஅடிப்படையில் சிந்திக்கும் பக்குவத்தை இழந்து மரத்துப்போன இதயங்களுக்கு சத்தியம் புரியாது. வாசகர்களே சிந்திக்க ஆரம்பியுங்கள்!

# எண்ணங்கள்!

கிறிஸ்தவ உலகில் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணிக்காமல் சத்தியத்தை வெளிப்படை-யாக எடுத்துக்கூறும் களஞ்சியம் திருமறைத்-தீபம். ஆயிரம் ஆயிரம் பத்திரிகைகள் தமிழில் வந்தாலும் தீபத்தை வெல்ல முடியாது. கட்டுரைகள், குறிப்புகள், வேத விளக்கங்கள் அனைத்தும் எனது ஆவிக்குரிய வாழ்க்கை-க்கு கிடைத்த ஊன்றுகோள்கள் - *கோவை ஜே. ஜேசன், தமிழ் நாடு.*

குமரி மாவட்டத்தில் ஏராளமான கிறிஸ்தவ சபைகள் உண்டு. ஆனால் பெரும்பாலான சபைகளில் சத்தியம் மறைக்கப்பட்டு விசுவாசிகள் சத்தியத்தை அறியமுடியாதபடி வஞ்சிக்கப்படுகிறார்கள். அதில் நானும் ஒருவன். நண்பர் ஒருவரிடமிருந்து பத்திரிகையை பெற்று வாசித்தேன். அது பெரும் ஆசீர்வாதமாக இருந்தது. படிக்கப்படிக்க மிகவும் புத்துணர்வு பெறச்செய்தது. - *டீ. நெல்சன், தமிழ்நாடு.*

தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் படிக்கும்போது திருமறைத்தீபத்தை நான் படித்துப் பரவசமடைந்தது உண்டு. தற்போது நண்பர் ஒருவரிட-மிருந்து மீண்டும் பெற்று வாசித்தேன். உண்மையாகவே கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி கிறிஸ்தவனாக வாழ்வதற்கு திருமறைத்தீபம் வழிகாட்டியாக இருப்பதை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன். அதிலும் 'தமிழ் கிறிஸ்தவ உலகில் புதிய சுவிசேஷ இயக்கம்' என்ற தலைப்பில் எழுதிய பகுதி லிபரலிசம் மூலம் எவ்வாறு கிறிஸ்தவ உலகை சமய சமரசப் போக்கு பாதித்து வருகிறது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. இப்படிப் பல நிலைகளில் இறையியல் கருத்துக்களைத் தாங்கி வருகின்ற திருமறைத்தீபம் இதழைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ள மிகவும் ஆவலாக இருக்கிறேன். - *ஏ. ஜெபராஜ், தமிழ் நாடு.*

சில வருடங்களுக்கு முன் தெய்வநாயகம் என்பவரின் இந்திய திராவிட சமயம் என்ற புத்தகத்தை வாசித்தேன் அதில் வேதத்திற்கு புறம்பான காரியங்கள் நிறைய இருந்தது. அவை தவறு என்று தெரிந்தபோதும், அநேக காரியங்கள் சரியானதுபோலவும் தெரிந்தன. அவற்றைத் தவறானது என்று நிரூபிக்க வழி தேடிக்கொண்டிருந்தபோது உங்களுடைய 'இந்திய வேதங்களில் இயேசுவா' என்று புத்தகம் வாசிக்கக் கிடைத்தது. அது என் மனத்தில் இருந்த அநேக கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் விடையளித்தது. கர்த்தர் உங்கள் ஊழியங்களை ஆசீர்வதிப்பாராக. - *ஜெ. சரத்சிங், ஸ்ரீ லங்கா.*

கடந்த நான்கு வருடங்களாக பத்திரிகை தவறாமல் கிடைக்கின்றது. இதன் மூலம் அநேக இறையியல் சத்தியங்களையும், கோட்பாடுகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. எனது ஊழியத்துக்கும் பிரயோஜனமுள்ளதாக இருக்கின்றது. விஷேசமாக ஜனவரி-மார்ச் 2002 இதழில் நீங்கள் எழுதியிருந்த 'கிறிஸ்தவ ஒற்றுமை' எனும் ஆக்கம் இன்றைய சூழ்நிலைக்கு மிகவும் அவசியமான ஓர் கட்டுரையாகும். இப்படியாக இன்றைய சூழ்நிலைக்கு அவசிமான பல கட்டுரைகளை எழுதி, தான் செல்லவேண்டிய திசையே தெரியாது தடுமாறிக் கொண்டிருக்கும் கிறிஸ்-தவ உலகுக்கு தன் பெயருக்கு ஏற்றவிதமாக கலங்கரைத் தீபமாக இருந்து வழிகாட்டும் உங்கள் பத்திரிகைக்கும், உங்களுக்கும் எனது நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்-தாகட்டும். தொடரட்டும் உங்கள் இலக்கியப் பணி. - *செல்லதுரை ஜெ. சந்திரசேகர், ஸ்ரீ லங்கா.*

*சீர்திருத்த போதனைகளைத் தரும் பின்வரும் நூல்கள் முதன் முறையாக இப்போது தமிழில் வெளிவந்திருக்கின்றன.*

## 1689 விசுவாச அறிக்கை

(இந்திய ரூபாய் 24.00)

## சிறுவர்களுக்கான வேத உபதேசம்

(இந்திய ரூபாய் 14.00)

---

செப்டெம்பர் 2002

-புதிய வெளியீடு-

## பரிசுத்த வேதாகமம்

எழுதியவர்கள்: ஆர். பாலா, ஜோன் ரூத்தர்

(இந்திய ரூபாய் 20.00)

---

*இந்தியாவில் இருப்பவர்கள் மட்டும் இந்நூல்களை கீழே தரப்பட்டுள்ள இந்திய முகவரிக்கு காசோலையோ அல்லது மணியார்டரோ அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். தபால் செலவு தனி. அதையும் சேர்த்து அனுப்பவும்.*

*Reformed Baptist Publications*
*22 T. P. K Main Road*
*Pykara, Madurai 625004*
*Tamil Nadu. S. India*
*Phone: (452) 371659*

மலர் 8 ஒக்டோபர் - டிசெம்பர் 2002 இதழ் 4


1. சுவிசேஷ ஊழியம்

2. கர்த்தரின் ஊழியக்காரரை குறை சொல்லலாமா?

3. உதவிக்காரர்கள் (Deacons)

4. டர்சூலியனும், சிப்ரியனும்

5. பாவ உணர்வு சொட்டும் கண்ணீர்த்துளிகள்

6. நெகேமியா

9. கிறிஸ்தவ கோட்பாடுகள்

10. பிரசங்கப் பஞ்சம்

10. உங்கள் சிந்தனைக்கு !

11. எண்ணங்கள் !


Te Rau Print